


ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் மாத இதழ்.

ஆசிரியர் : பி. வீரராகவன்

ஆண்டுச் சந்தா ரூ. 5] [தனி இதழ் 50 ந. பை.

| மலர் 33 | டிசம்பர் 1969 | இதழ் 12 |
|---|---|---|

# ஆரம்பப் பள்ளி ஆசிரியர் மறியல் செய்வர்!

## மறியல் கிளர்ச்சி ஆசிரியர்களுக்கு அவசியம்தானா?

*தினமணிச் செய்தி, திருச்சி 17—12—69.*

*“மாநிலத்தில் உள்ள ஆயிரக்கணக்கான ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் வரும் டிசம்பர் மாதம் 29-ஆம் நாளன்று சென்னை நகரில் ஒரு பெரிய கோரிக்கை மாநாடும், தொடர்ந்து மறியலும் நடத்துவார்கள்.*

*ஆசிரியர்களுக்கென்று தனி சம்பளக் கமிஷன் ஒன்று அமைத்தல், அவர்கள் ஓய்வுபெறும் வயதை 58-ஆக மாற்றுதல், வீட்டு வசதி அலவன்ஸ் அளித்தல், மானியம் பெறும் பள்ளி*

ஆசிரியர்க்கும் இலவச மருத்துவ வசதி திட்டத்தை விஸ்தரித்தல் ஆகிய கோரிக்கைகளுக்காக இவர்கள் மறியல் செய்வர்.

இந்த மறியலில் கலந்து கொள்வதற்காகத் தமிழ் நாட்டின் பல மாவட்டங்களிலிருந்தும்,ஆசிரியர்களின் சைக்கிள் ஊர்வலங்கள் சென்னை வந்து சேரும். தமிழ் நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் பெடரேஷன், இந்த மகா நாட்டிற்கும் மறியலுக்கும் ஏற்பாடுகளைச் செய்து வருகிறது."

இப்படி ஒரு செய்தி, 'தினமணி' 17-ஆம் நாள் இதழில் காணக்கிடக்கிறது. நாம் காலையில் பத்திரிகையைப் படிக்கப் பிரித்ததும் கிளர்ச்சி, குழப்பம், மறியல், கொலை, கொள்ளை, கேரோக்கள் (அதிகாரிகளை தடுத்து நிறுத்துதல்) போன்ற வன்முறைச் செயல்களைத்தான் பார்க்க முடிகிறது. இத்தகைய வன்முறைச் செயல்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளாகும். இக்கொள்கைகள் ரஷ்யாவிலிருந்தும் சீனவிலிருந்தும், தீவிரமாக, ஜனநாயக நாடாகிய நம் தாய் நாட்டில், மேற்கில் வங்காளத்திலும், கிழக்கில் கேரளத்திலும் அதிவேகமாகப் பரவிக்கொண்டு வருகின்றன.

இதன் விளைவாக, ஜனநாயகக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டுள்ள காங்கிரஸ் இரண்டாகப் பிளவுபட்டு, ஜனநாயகக் காங்கிரஸ் என்றும், கம்யூனிஸ்ட் காங்கிரஸ் என்றும் செயல்பட ஆரம்பித்துள்ளது. இது அரசியல் விவகாரம். ஆரம்ப ஆசிரியர்களாகிய நமக்கு எது சரி, எது தவறு என்ற ஆராய்ச்சி தற்போது தேவையில்லை.

ஆனால் மேற்குறித்த அறிக்கையில், ஆரம்ப ஆசிரியர் பெடரேஷன் என்ற ஓர் அமைப்பு கீழ்க்குறித்துள்ள கோரிக்கைகளின் அடிப்படையில் கிளர்ச்சி மறியல் செய்யத்திட்டமிட்டிருக்கிறது. அக்கோரிக்கைகள் பின் வருமாறு :

1. ஆசிரியர்களுக்கென தனிச் சம்பளக் கமிஷன் அமைப்பது.
2. ஓய்வு பெறவேண்டிய ஆசிரியர்களின் வயதை 58-ஆக உயர்த்துவது.

3. மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு இலவச மருத்துவ வசதி அளிப்பது.

இம் மூன்று கோரிக்கைகளும் மிகமிக முக்கியமான கோரிக்கைகளே. அரசாங்கம் உடனடியாகக் கவனிக்க வேண்டியவை சம்பள விஷயம், சம்பள உயர்வுக்காக தனிக் கமிஷன் அமைத்தால் அது ஆரம்ப ஆசிரியர்களை மட்டுமல்ல, அரசாங்க ஊழியர்களையும் பெரிதும் பாதிக்கும். ஆனால் அரசாங்கமோ, ஆரம்ப ஆசிரியர்களை மட்டுமல்ல, உயர்தர பாடசாலை ஆசிரியர்களையும் சேர்த்து, தங்கள் அரசாங்க ஊழியர்களாகப் பாவித்து அவ்வப்போது சம்பள உயர்வையும், பஞ்சப்படியையும் உயர்த்திக் கொண்டே வந்திருக்கிறது. இது அரசாங்கத்தின் பொருளாதார விஷயம்.

இதில் ஆரம்ப ஆசிரியர்கள்மட்டும்சம்பள உயர்வுகேட்பதில் பொருளில்லை. சம்பளகமிஷன் எல்லாஆசிரியர்களையும் சம்பந்தப்பட்டது. உயர்நிலைப் பாடசாலை ஆசிரியர்கள், கல்லூரி ஆசிரியர்கள், கண்ணியமாக—கௌரவமாக ஆட்சிப்பீடத்திலுள்ள அமைச்சர்களிடம் சில சம்பள உயர்வை நேரில் கண்டு கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஆரம்ப ஆசிரியர்களில் சிலர், கம்யூனிஸ்ட் கொள்கைகளைக் கடைப் பிடித்துக் கிளர்ச்சி—மறியலில் ஈடுபடுவது சரியா? இது ஆசிரியர் கைப்பற்ற வேண்டிய ஒழுங்கான முறைதானா? இதை ஆசிரியர் சமூகம், குறிப்பாக, ஆரம்ப ஆசிரியர் சமூகம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஆரம்ப ஆசிரியர் பெடரேஷன் காரியதரிசி திரு. முத்துசாமி என்பவர், சேலம் ஜில்லாவில் பஞ்சாயத்து ஆசிரியர் என்று கேள்விப்படுகிறோம். இவர் பஞ்சாயத்து நிர்வாகத்திலுள்ள ஆசிரியர்களின் குறைகளை கவனிக்காமல், இவருக்குச் சம்பந்தமில்லாத தனியார் துறையிலுள்ள எயிடெட் பாடசாலை ஆசிரியர்கள் குறைகளைக் கவனிப்பதாகவும், எயிடெட் பாடசாலை நிர்வாகிகள் ஒழுக்கமற்ற முறையில் பாடசாலைகளை நடத்துவதாகவும், ஆகையால் எய்டெட் பாடசாலைகளையெல்லாம் அரசாங்கமே ஏற்று நடத்தவேண்டுமென்றும் ஓர் அறிக்கையில் வெளியிட்டிருக்கிறார். இது கண்டிக்கத்தக்கதாகும். குறைவு

என்பது எல்லா இடங்களிலும் உண்டு. எயிடெட் பாடசாலை விஷயம் இவருக்குச் சம்பந்தமில்லாதது ஒன்று, எயிடெட் பள்ளிகளில் ஆசிரியர்களை வைப்பதும் எடுப்பதும் நிர்வாகியாவார். நிர்வாகியும், ஆசிரியரும் ஒற்றுமையாக வேலை செய்வதைத் தடுத்து, கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சில ஆசிரியர்கள். எய்டெட் பள்ளி ஆசிரியர்களை நிர்வாகிகளுக்கு எதிராகப் பாடசாலைகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ளவேண்டும் என்ற கிளர்ச்சியில் ஈடுபடுமாறு தூண்டுவதாகத் தெரிகிறது. ஆதலால் எயிடெட் பள்ளியில் வேலை செய்யும் ஆசிரியர்கள் இத்தகைய கிளர்ச்சி மனப்பான்மையுடைய பெடரேஷன், கூட்டணி, முன்னணி போன்ற சங்கங்களில் சேராமல் தங்கள் வேலையை ஒழுங்காக அரசாங்கம் கொடுக்கும் பணத்திற்கு நஷ்டமில்லாமல் பிள்ளைகளுக்குக் கல்வித் தொண்டு புரியுமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

ஆயிரக்கணக்கில் ஆசிரியர்கள் நாட்டில் வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கும் பொழுது, ஓய்வுபெறும் ஆசிரியர்களின் வயதை 55-லிருந்து 58-ஆக உயர்த்தும்படி வற்புறுத்துவதில் நியாயமுமில்லை. அதற்காக மறியல் செய்வதில் அர்த்தமுமில்லை. இலவச மருத்துவ வசதி, வீட்டு வாடகை இதைப் போன்ற ஆசிரியர் சம்பந்தமான பல சிக்கலான பிரச்சினைகள் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்துவருகின்றன. அவைகளை தீர்த்து வைக்கும்படி, கல்வி மந்திரியை அணுகி வற்புறுத்த வேண்டுமேயொழிய அதற்காக ஆசிரியர்கள் கொடி ஏந்திகொண்டு, ஊர்வலம் போதல், மறியல் செய்தல், உண்ணாவிரதம் இருத்தல், போன்ற வன்முறைச் செய்கைகளை தொழிலாளர்களைப் போல், அரசியல்வாதிகளைப் போல் கைக்கொள்வது, ஆசிரியர் தொழிலுக்கு உகந்ததல்ல.

அரசாங்கம் தங்கள் ஊழியர்களுக்குச் சம்பளம் உயர்த்தும் போதெல்லாம் ஆசிரியர்கள் சம்பளத்தை உயர்த்திக்கொண்டே வந்திருக்கிறது. அப்படி உயர்த்தியது பெடரேஷனாலோ, கூட்டணியாலோ, முன்னணியாலோ — கிளர்ச்சியாலோ அல்லது மறியலாலோ அல்ல. ஆனால் கூட்டணிக்காரர்கள் தங்களால் சம்பள உயர்வு செய்யப்பட்டதாகச் சொல்லி சில ஆசிரியர்களிடமிருந்து பணம் பறித்து வருவதாகத் தெரியவருகிறது. இதில் கம்யூனிஸ்ட் கட்சியும் உடந்தையாக இருப்பதாகவும் தெரிகிறது. ஆதலின் ஆசிரியர்கள் இத்தகைய கிளர்ச்சியில் ஈடுபடுவதை அரசாங்கம் உடனடியாகக் கண்டிப்பதோடு, அதில் ஈடுபடும் ஆசிரியர்கள்மீது தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்

# உழைப்பால் உயர்ந்த ஒரு தலைமையாசிரியர்

※

அண்மையில் மத்திய அரசாங்கவிருதுபெற்றவர்; சென்ற 40ஆண்டு களுக்குமேல் காஞ்சி பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராக வும், தலைமைஆசிரியராகவும் கல்விப்பணி புரிந்து வருபவர்; உழைப்பால் உயர்ந்த உத்தமர் திருவாளர் சி. பக்கிரிசாமி முதலியார், பி.ஏ., எல்.டி., அவர்களின் சீரிய வரலாற்றை மகிழ்ச்சியுடன் அளிக் கின்றோம்.

உச்சிமேற் புலவர் கொள் கச்சிப்பதியில் ஓர் ஏழை நெசவாளர் குடும்பத்தில், சாதாரண ஆண்டு வைகாசித் திங்கள் இருபதாம் நாள் பிறந்தார். தந்தையார் சி. இராமசாமி முதலியார். தாயார் அலுமேலு அம்மையார். சிறுவயது முதலே கல்வியிற் சிறந்து விளங்கிய இவருக்கு அக்காலத்தில் 6-வது வகுப்பிலிருந்தே அரசாங்க உபகாரச் சம்பளம் கிடைத்து வந்தது. 1927-ல் S. S. L. C. வகுப்பில் பேரறிஞர் அண்ணா அவர்களை ஒரு சாலை மாணவராகவும், நெருங்கிய நண்பராக வும் பெற்ற வாய்ப்பு இவருக்கு இருந்தது. S. S L C.-ல் சிறப்பு டன் தேறிய இவரைப் பச்சையப்பன் கல்லூரியில் படிக்க உதவியவர் கள் பேராசிரியர் சண்முகசுந்தர முதலியாரும், வள்ளல் சபாபதி முதலியாரும் ஆவார்கள்.

பி. ஏ. படிக்கச் சென்ற இவரை, குடும்ப நிலையை உத்தேசித்து ஆசிரியத் தொழிலை மேற்கொள்ளச் செய்து தனியாக பி. ஏ. தேறிவைக்க உதவிய பெருமை பச்சையப்பன் கல்லூரி முன்னாள் முதல்வர் உயர்திரு. K. சின்னத்தம்பி பிள்ளை அவர்களுடையது.

காஞ்சிச் செங்குந்த வாலிபர் சங்கத்தின் ஒரு முக்கிய அங்கத்தின ராக திரு. க. வச்சிரவேலு முதலியார் அவர்களுடனும் திரு காஞ்சி மணிமொழியாருடனும் பல ஆண்டுகள் சமூகத் தொண்டாற்றினர். ஈரோடில் நடைபெற்ற முதல் செங்குந்த மாநாட்டில் ஒரு தொண்ட

ராகவும், காஞ்சியில் நடைபெற்ற 2-வது செங்குந்தர் மாநாட்டில் தொண்டர் படைத் துணைத் தலைவராகவும் இவர் பணிபுரிந்தார். காஞ்சி டாக்டர் P. S. சீனிவாசன் அவர்களுடன் சேரிகளுக்குச் சென்று அரிசனத் தொண்டு புரிந்தார்.

காஞ்சி பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளி பழைய மாணவர் கழகத்தின் பொருட்காப்பாளராகவும் செயலாளராகவும் பள்ளிக்கு அவர் ஆற்றிய தொண்டுகளில் முக்கியமானது. ரு. 5,000 வசூலித்து அதனுடைய வட்டியிலிருந்து ஏழை மாணவர்கட்கு உபகாரச் சம்பளம் கொடுத்து வந்தது.

தலைமையாசிரியர் பதவி ஏற்றதும் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளிக்கு அவர் ஆற்றிய பல அரிய தொண்டுகளில் மிகச் சிறந்தது 1½ இலட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 3 மாடிக் கட்டிடமாகும். இவர் தலைமை ஏற்ற பிறகு துரிதமாக வளர்ந்து வரும் இப்பள்ளிக்கு இடவசதிக் குறைவை நீக்க பொது மக்களிடம் ரு. 50,000 நன்கொடையாகப் பெற்று மிக்க துரித காலத்தில் இக்கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

இந்தப் பள்ளியில் இவரையும் சேர்த்து மூன்று தொடர்ந்த தலைமையாசிரியர்கள் மத்திய அரசாங்க விருது பெறும் ஒரு பெரும் பேற்றினைப் பெற்றுள்ளார்கள் என்பது நமது நாட்டிலேயே எங்கும் காணமுடியாத ஒரு சிறப்பு.

60 ஆண்டுகள் முடியப் போகும் இவர் தோற்றத்தில் 45 வயதுள்ளவராகப் பிறரால் மதிக்கப்படுவதற்கு முக்கிய காரணம் தினந்தோறும் இவர் செய்துவரும் ஆசனப் பயிற்சிகள் எனலாம்.

செங்கை மாவட்ட ஆசிரியர் கழகத்தின் தலைவராகவும், காஞ்சி மாவட்ட சாரணர் ஆணையராகவும், இன்னும் பல பதவிகளையும் சிறப்புடன் வகித்து அருள்தொண்டு புரிந்துவரும் இவர் நான்கு மகன்கள், மூன்று பெண்கள், ஐந்து பேரன், பேத்திகள் அடங்கிய சிறந்த மக்கட் பேற்றைப் பெற்றுள்ளார்.

# அதிசயத் தொங்கும் பாலம்

**[ என். வி. ஆர். சுவாமி ]**

*

உலகெங்கிலும் காணப்படும் பல பாலங்களுக்கு இல்லாத ஒரு மதிப்பு, கல்கத்தாவில் ஹூக்ளி நதிமீது அமைந்துள்ள 'ஹௌரா' பாலத்துக்கு உண்டு. இதை அதிசயப் பாலம் என்றும் கூறுவர்.

சாதாரணமாக ஒரு பாலத்தின் கீழ்ப்பகுதியைத் தூண்கள் தாங்கிக்கொண்டிருக்கும். ஆனால், இந்தப்பாலத்திற்குத் தூண்கள் எதுவுமில்லை; அந்தரத்தில் அப்படியே தொங்கிக் கொண்டிருக்கிறது. இரு கரைகளிலும் வானளாவிய இரும்பு கர்டர்கள் இவைகளைப் பிணைத்திருக்கும். இதர கர்டர்கள்தான், இந்தப் பாலத்தையே தாங்கிக் கொண்டிருக்கின்றன. இதைத் தவிர வேறு சர்தனங்கள் எதுவும் தண்ணீரில் அமைக்கப்படவில்லை. பாலத்தின் நீளம் சாமானியமானதும் அல்ல. முழுநீளம் 2, 105 அடி. அதாவது சுமார் மூன்றேகால் பர்லாங் தூரம். இந்த ஹௌரா பாலம் ஆற்றில் கட்டப்படாமல் வானிலிருந்து தொங்கிக் கொண்டிருப்பதுபோல் அமைந்திருப்பதால்தான் பொதுவாக இது "தொங்கு பாலம்" என்று புகழ் பெற்றிருக்கிறது.

கல்கத்தாவிலுள்ள பல பெரிய இரும்புத் தொழிற்சாலைகளெல்லாம், இந்த ஹௌரா பகுதியில்தான் அமைந்திருக்கின்றன. இந்நாட்டின் பல பாகங்களிலும் விற்கப்படும் "வாளிகள்" இங்குதான் உற்பத்தியாகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

ஹூக்ளி நதியின்மீது 1874-ல் ஒரு பாலம் கட்டி முடித்தார்கள். அதுவும் 70 ஆண்டுகள் சேவை செய்து வந்தது. கல்கத்தாவும், ஹௌராவும் வாணிபத் துறையில் முன்னேற, இப்பாலம் போதியதாக இல்லை. ஆதலால், நவீன முறையில் ஒரு பாலம் அமைக்கத் திட்டமிட்டார்கள். இங்கிலாந்து தேசத்தைச் சேர்ந்த "ரெண்டல், பாமர், டிரிட்டன்" என்னும் பிரபல பொறிஇயல் வல்லுனர்கள்தான் இப்பாலம் கட்டும் அரும்பெரும் பணியைச் சாதித்தனர். இப்பாலத்தைக் கட்டி முடிக்க எட்டு வருடங்கள் தேவைப்பட்டன.

மாதிரிக்குக்கூட சிமெண்டு என்பதைப் பார்க்க முடியாது, கீழ்த்தளத்தைத் தவிர). எங்கும் ஒரே இரும்பு கர்டர்கள், கிராதிகள். பட்டைகள். இரும்புத்தூண்கள். இவைகளால்தான் அமைக்கப்பட்டது. இரும்பு உத்திரங்கள் அசாத்தியமான நீளம் உள்ளவை. இரு கரையிலும் உள்ள தூண்களின் உயரம் 266 அடி.

எட்டு வழிப்பாதை கொண்ட இப்பாலத்தின் அகலம் 71 அடி.

அதாவது போவதற்கு நான்கு, வருவதற்கு நான்கு பாதைகள்.

நடுவில் டிராம் வண்டிகளும், பக்கங்களில் மோட்டார் போன்ற துரிதப் போக்குவரத்து வாகனங்களும், கடைசியில் மெதுவாகச் செல்லும் கைவண்டிகள் போன்றவையும் செல்லும்படியாகப் பிரித்திருக்கிருர்கள். பாலத்தின் கடைசியில் இரு பக்கங்களிலும் 15அடி அகலமுள்ள நடைபாதை விடப்பட்டிருக்கிறது.

இப்பாலத்தைக் கட்டி முடிக்க 26,500 டன் எஃகும், இரும்பும் தேவைப்பட்டன. இவற்றில். 18,200 டன்கள் உயர்ந்த நெகிழக்கூடிய இரும்பு ரகத்தைச் சேர்ந்தவை. சில முக்கிய பாகங்களுக்கு வேண்டிய இரும்பு மட்டும் அயல்நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்டது. மற்றவை பெரும்பாலும், டாடா இரும்புத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்டவை.

ரயில் இருப்புப் பாதையைக் கவனித்துப் பார்த்தால், இரு தண்டவாளங்கள் சேருமிடத்தில் சிறிய இடைவெளி காணப்படும். வெயில் காலத்தில் இவை நீளவும், மழைகாலத்தில் சுருங்குவதற்கும் ஏற்ப இப்படி இடைவெளி விட்டுத்தான் எல்லாத் தண்டவாளங்களும் பொருத்தப்படுவது வழக்கம். இந்த அதிசயப் பாலம் முழுவதும் இரும்பால் செய்யப்பட்டது தானே; நீண்டு சுருங்கும் குணம் இதற்கும் உண்டல்லவா? அதற்காக இங்கேயும் ஏற்பாடு செய்திருக்கிருர்கள். இங்குள்ள தண்டவாளங்களில் 16 விரிசல்களும், 40 அணுக்களும் உள்ளன. இதனால் நீளவும், சுருங்கவும் இடம் உண்டு. வித்தியாசம் 48 அங்குலம் தான்! இதைத் தவிர இன்னும் சிலவிஞ்ஞான முறைகளை அனுசரித்துக் கட்டப்பட்டிருப்பதால் பெருங்காற்று அடித்தால்கூட அதைத் தாங்கி நிற்கக்கூடிய சக்தி வாய்ந்ததாய் அமைந்திருக்கிறது.

1943–ஆம் வருடம் பிப்ரவரி 28–ந்தேதியன்றுதான் இப்பாலம் முதன் முதலாகப் பொதுமக்களுக்குத் திறந்து விடப்பட்டது.

தினம் ஒன்றுக்கு சராசரி 1,10,000 மக்களும், 42,000 போக்குவரத்துச் சாதனங்களும் இப்பாலத்தைக் கடந்து செல்லுவதாகக் கணக்கெடுத்திருக்கிருர்கள்.

சில சமயங்களிலும், மாலை ரயில் நேரங்களிலும் போக்குவரத்து நெரிசல் காரணமாக வண்டிகள் தடைப்படுவது சகஜம். அச்சமயத்தில், பாலத்தைக் கடக்க ஒரு மணி நேரம் ஆவதும் உண்டு. இது என் சொந்த அனுபவம்!

இந்த நெரிசலைத் தவிர்க்க வேண்டி நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மற்ருெரு பாலத்தையும், இப்பாலத்தை வந்து அடைய ஐந்து மைல் தூர நெடுஞ்சாலையையும் அமைக்க மாநில அரசு திட்டமிட்டிருக்கிறது.

—'தினமணிசுடர்'

# தமிழ் நாடு தென் மாவட்டங்களின் அரசு உதவிபெறும் பள்ளி நிர்வாகிகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மாநாட்டில் 20 – 12 – '69-ஆம் தேதி நிறைவேற்றிய முக்கிய தீர்மானங்கள்.

●

**ஆசிரியர்கள் :**

1. அடிப்படைக் கல்வியின் தரத்தைக்காக்கவும், மாணவர் ஒழுக்கம் பேணவும், ஆசிரியர் வேலைப்பளுவைக் குறைக்கவும், வேலை வாய்ப்புக்கள் ஏற்படுத்தவும், ஆசிரியர் மாணவர் விகிதத்தை 1 . 25 ஆகக் குறைக்க வேண்டிக் கொண்டும்,

2. அரசு உதவிபெறும் பள்ளி ஆசிரியர்களுக்கும், தலத்தாபனப் பள்ளி ஆசிரியர்களுக்குக் கொடுத்து வருவது போலப் பிரதி மாதமும் காலண்டர் மாதச் சம்பளமாகக் கணக்கிட்டு முதல் தேதியே சம்பளப் பட்டுவாடா செய்ய வசதியாக போதனை உதவித்தொகை வழங்க உத்தரவு செய்யும்படிக்கும்,

3. உதவிபெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆரம்ப ஆசிரியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுவது போல, வீட்டு வாடகை, வைத்திய வசதி, பண்டிகை முன்பணம் பெறுதல், உரிமை விடுப்பைச் சமர்ப்பித்து ரொக்கம் பெறுதல் போன்ற சலுகைகள் அளிக்கும் படிக்கும்,

4. பத்து ஆசிரியர்களுக்குமேல் உள்ள பள்ளிகளுக்கு சிறு விடுப்பு எடுக்கும் சமயங்களில் பதிலாக வகுப்பைக் கவனிக்கவும், பள்ளிக் கணக்குகள் எழுத உதவியாகவும் இருந்த (எக்ஸ்டிரா) ஆசிரியர் ஸ்தானம் நீக்கப்பட்டிருப்பதை மீண்டும் நியமனம் செய்ய உத்தரவு கொடுக்கும்படியும்,

5. தனியார் பள்ளிகளில் பணிபுரியும் தலைமை ஆசிரியர்களுக்கு வகுப்பு போதனையுடன் பள்ளியின் இதர வேலைகளும், பொறுப்புக்

களும் அதிகமாக இருப்பதால் தலைமை ஆசிரியர் அலவன்சு வழங்கப் பட வேண்டுமெனவும்,

6. செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் எந்த வகுப்பில் பணியாற்றினு லும் அவர்களின் தகுதிக்குரிய செகண்டரி கிரேடு சம்பள விகிதத்தையே அளிக்கும்படிக்கும்,

7. முதனிலைத் தகுதிபெற்ற தமிழாசிரியர்கள் எவ்வகுப்பில் பணி புரிந்தாலும் தகுதிக்கேற்ப சம்பளம் வழங்க வேண்டு மெனவும், மேற் படி முதனிலைத் தமிழாசிரியர்களை பட்டதாரி ஆசிரியர்கட்கு சமமாகப் பாவிக்க வேண்டுமெனவும், தகுதியுடைய எல்லாத் தமிழாசிரியர்களும் முதனிலைத் தமிழாசிரியர் பயிற்சிபெற போதிய வாய்ப்பளிக்க வேண்டு மெனவும்,

8. 400 மாணவர்கட்கு மேல் உள்ள எல்லாப் பள்ளிகட்கும் உடற்பயிற்சி மிக அவசியமாகையால் எல்லாப் பள்ளிகளிலும் உடற் பயிற்சி ஆசிரியர்கள் நியமிக்க வாய்ப்பு வழங்க வேண்டுமென்றும்,

9. உயர்நிலைப் பள்ளி உள்பட எல்லாப் பள்ளிகளிலும் மாணவர் கட்குக் கல்வித் திறமை பெற எட்டாவது வகுப்பில் மீண்டும் பொதுத் தேர்வு வைக்கப்பட வேண்டுமெனவும்,

10. உயர் ஆரம்பப் பள்ளிகளில் பணியாற்றும் கைத்தொழில் ஆசிரியர்கள் அனைவரையும் முழுநேர ஊழியராகப்பாவித்து அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள சம்பள விகிதம் வழங்கப்பட வேண்டுமென்றும், தொழில் பாடங்களுக்கும் பள்ளிகளில் தேர்வு வைத்து மாணவர்கள் அதிலும் வெற்றி பெற்றால்தான் மேல் வகுப்புக்களுக்கு மாற்றப்பட வேண்டுமென்றும்,

11. கோத்தாரிக் கமிஷன் சம்பள விகிதத்தை உடனடியாக ஆரம் பப் பள்ளி ஆசிரியர்களுக்கும் கிடைக்கும்படி அமல் செய்ய வேண்டு மென்றும்,

12. கெஜட் பதிவில்லாத அரசு ஊழியர்களுக்கு அவ்வப்போது வழங்கும் எல்லாச்சலுகைகளையும் எவ்வித வித்தியாசமும் பாராட்டாமல் உதவிபெறும் பள்ளி ஆசிரியர்களுக்கும், ஆசிரியர்களல்லாத ஊழியர் களுக்கும் அவ்வப்போது வழங்கும்படிக்கும்,

13. கல்விச் சுற்றுலாவுக்காக, கோடை விடுமுறை காலத்தில் ஆசிரியர்கள் தமது போதனை அறிவை விருத்தி செய்து கொள்ளும் பொருட்டுத் தமிழக அரசு பஸ் போக்கு வரத்தில் சலுகைக் கட்டணத்தில் பிரயாணம் செய்யும் சலுகை வழங்க வேண்டுமென்றும்,

14. உதவிபெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு க்ஷேம நல நிதியிலிருந்து ரூ. 120-க்கு மேற்போகாமல் பண்டிகைகளுக்கு முன் பணம் வழங்க நிர்வாகிகளுக்கு அரசு அதிகாரம் வழங்க வேண்டுமாயும், ஏனைய அரசு உத்தியோகஸ்தர்கள் பெறுவதைப் போன்று ஒன்றுக்கு மேற்பட்ட கடன் உதவிகள் பெறவும்,

15. முப்பது ஆண்டுகளும் அதற்கு மேலும் நாட்டு மக்களின் அறிவு வளர்ச்சிக்கு உழைத்து ஓய்வு பெற்ற ஆரம்ப ஆசிரியர்களுக்கு சம்பளத்தில் பாதி பென்ஷன் தொகையாகவும். N. G. O. க்களுக்கு வழங்கப்படும் கிராஜுவிடியும் வழங்க வேண்டுமென்றும்,

**நிர்வாகம் :**

16. M. E. L. T. வகுப்பிற்கு வானொலிப் பெட்டி மிகவும் உபயோகமாக இருப்பதால் அனைத்துப் பள்ளிகளுக்கும் அரசு வானொலிப் பெட்டி வழங்க வேண்டுமெனவும்,

17. விஞ்ஞானப் பாட போதனைக்குரிய உபகரணங்கள் வாங்கக் கொடுக்கப்படும் உதவித் தொகையை எல்லா உயர் துவக்கப் பள்ளிகளுக்கும் வழங்கப்பட வேண்டுமென்றும்,

18. தனியார் பள்ளிகளில் ஜுன் மாதத்தில் சேர்க்கப்பட்டுள்ள மாணவர்கள் எண்ணிக்கைக்குத்தக்க விகிதப்படி ஆசிரியர்களை நியமிப்பதில் கோட்டாமுறை (Allotment of Additional Post) இருந்து வருவதால்கல்வி ஆண்டுத் துவக்கத்திலேயே அதிக மாணவர்கள் சேர்ந்தும் உடனடியாக ஆசிரியர்களை நியமிக்க முடியாதநிலை இருப்பதால் கல்வியில் தரக்குறைவும் நிர்வாகச் சிரமங்களும் ஏற்படுகிறது. எனவே முன்போலவே அதிகமாணவர்கள் சேர்ந்தவுடன் மாணவர்கள் விகிதப்படி வகுப்புக்களைப் பிரித்து ஆய்வாளர்களின் அனுமதியுடன் ஆசிரியர்களை உடனடியாக நியமிக்க அனுமதி வழங்குமாறும்,

19, 1957-ம் ஆண்டில் இலவச மதிய உணவு வழங்கும் திட்டம் அமுலுக்கு வந்தது. அது முதல் இதுவரை ஒரு சாப்பாட்டிற்கு 6பைசா வீதம் அரசு மான்யம் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் காலநிலேயும், விலேவாசியும் அனுசரித்து உதவிபெறும் பள்ளிகளுக்கும் இலவச மதிய உணவிற்கு இருபத்தைந்து பைசா வீதம் வழங்க வேண்டுமென்றும் அல்லது இதை அரசே ஏற்று நடத்த வேண்டுமென்றும்,

20. முதல் மூன்று வகுப்புகளுக்கு இலவச மதிய உணவு பெறும் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் சிலேட்டுகள் பயன்படுத்த முடியாத நிலேயில் இருப்பதை பரிசோதித்து எழுதும் நிலேயில் பயன்படும் சிலேட்டுகள் வழங்க வேண்டும் என்றும், அவைகளேஜுன் மாத துவக்கத்திலேயே கொடுக்கப்பட வேண்டுமென்றும்,

21. புதிதாக தனியார் பள்ளி துவக்க தற்போது அரசினரால் துவக்கப் பள்ளிகளுக்கு நாற்பதாயிரமும் அறக் கொடை கட்டும்படி வற்புறுத்தப்படுகிறது. இதனுல் கல்விப் பணியில் ஆர்வமுள்ளவர்கள் இனிபுதிதாகப் பள்ளிகளேத் திறக்க முடியாது. இதனுல் கட்டாயக் கல்விக்கொள்கையை அரசு அமுல் செய்ய இயலாதுபோய் விடுவதுடன் வேலேயின்மையும் பெருகக்கூடும். அதிகத்தொகை முதலீடுசெய்ய நேர்ந்தால் லாப நோக்கமே முக்கியமாகி விடக்கூடும். தவிர மோசடியான ஊழல்கள் தோன்றலாம். எனவே தரமான கல்வியைத்தரும் தனியார் பள்ளிகளே நாடெங்கிலும் துவக்க அரசு எல்லா வசதிகளேயும் செய்யும் பொருட்டு மேற்படி அறக்கொடை உத்தரவை உடனடியாக ரத்து செய்ய வேண்டுமென்றும்,

22. நிர்வாக மான்யம் பத்து சதவிகிதத்தை 12 சதவிகிதமாக அதிகப்படுத்திய நமது அரசை இம்மாநாடு மிகநன்றியுடன் பாராட்டுவதுடன் 1969 நடப்பு ஆண்டிற்கே ஷை கூடுதல் மான்யத்தை வழங்கும்படி வேண்டிக்கொண்டும்,

23. இம்மாநிலத்தில் தாலுக்காபோர்டுகளும் கல்விக் குழுக்களும் இயங்கி வந்த காலத்தில் தனியார் பள்ளிகளில் மாணவர்களிடம் மாதக்கட்டணம் வசூலிக்கப்பட்டு வந்தது. அப்போதே தனியார் பள்ளிகளுக்கு 25% நிர்வாக மான்யமும் உபரியாகமேலும் 25% (திறமை மான்யமும் வழங்கப்பட்டு வந்தது. பின்னர்

15% ஆகக் குறைக்கப்பட்ட போதும் பள்ளி நிர்வாகங்கள் அரசின்ரின் பொருளாதாரத்தையும், கல்விப் பொறுப்பையும் உணர்ந்து பெருமனதுடன் வாளாவிருந்தனர். ஆனால் 1964–ல் இலவச கல்வித்திட்டம் அமலான பின் சர்க்கார் மாணவர் சம்பள நஷ்ட ஈடுவழங்க ஒப்புக்கொண்டு நாளடைவில் அதையும் நிறுத்தி விட்டது, தற்சமயம் ஆசிரியர் அடிப்படைச் சம்பளத்தில் 10% அதிக பக்ஷம் மான்யமாக கொடுக்கப்படுகிறது, பெரும்பாலான பள்ளிகளுக்கு இதிலும் குறைந்த விகிதமே கிடைக்கிறது. எனவே நல்ல முறையில் தனியார் பள்ளிகள் நடைபெற 20% ஆவது நிர்வாக மான்யம் வழங்கி கல்வி ஸ்தபானங்களை ஊக்குவிக்க வேண்டுமென்றும்,

24. 1964-ம் வருடத்திய மாணவர் சம்பள நஷ்டஈட்டுத் தொகை இன்னும் சில பள்ளிகளுக்குக் கொடுக்கப்படாமல் பாக்கி இருப்பதை உடனடியாகக் கொடுக்கவேண்டுமென்றும்,

25. பொறுப்புணர்ச்சியுடன் தனது கடமையைச் செவ்வனே செய்யும் ஆசிரியர்களுக்கு மனிதாபிமானத்துடன் எல்லாப் பாதுகாப்புகளும் நிர்வாகிகளாலும், கல்வி இலாகாவாலும் ஏற்கனவே வழங்கப்பட்டு வருகிறது. கடமை தவறும் ஆசிரியர்களை வேறு இடங்களுக்கு மாற்ற அரசு பள்ளிகளுக்கும் ஸ்தலஸ்தாபன பள்ளிகளுக்கும் வாய்ப்பு உள்ளது. இவ்வித வாய்ப்புகள் தனியார் பள்ளிகளுக்குக் கிடையாது. மேலும் ஓர் ஆசிரியர் தான் நினைத்தவுடன் கல்வி இலாகா முன் அனுமதி பெறாது உடனடியாக நிர்வாகத்துக்கு 3 மாத நோட்டீசோ அல்லது சம்பளமோ கொடுத்துவிட்டு வேலையினின்று நீங்கிச் செல்லலாமென தற்போது விதி இருக்கும் போது, தொடர்ந்து கடமையைச் செய்யாத ஆசிரியர்களை வேலை நீக்கம் செய்ய நிர்வாகம் மட்டும் கல்வி இலாகா முன் அனுமதியுடன் 3 மாத நோட்டீசோ அல்லது சம்பளமோ கொடுக்கவேண்டுமென விதித்திருப்பது எவ்வாறு பொருந்தும், கல்வித்தரத்தையும், கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் மனதில் கொண்டு தூரநோக்கோடு சிந்தித்துக் கல்வி இலாகா அனுமதியின்றி தவறு செய்யும் ஆசிரியர்களுக்கு நோட்டீசு கொடுக்க முன்பிருந்தது போலவே நிர்வாகத்திற்கு அனுமதி வழங்க வேண்டுமென்றும்,

26. ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகியும் தற்காலிக அங்கீகாரத்திலேயே நடைபெற்றுவரும் அனைத்துப் பள்ளிக்கும் நிரந்தரமான அங்கீகாரம் வழங்க வேண்டுமாயும்,

27. பெரும்பான்மையான தனியார் பள்ளிகள் வாடகை இடங்களில் உள்ளன. அதிக வாடகை கோரியும், கட்டிடங்களுக்கு எவ்வித மராமத்துக்களும் செய்யாமல் பள்ளியைக் காலி செய்யும்படி வழக்குகள் தொடர்ந்து நிர்வாகிகளுக்கு மிகவும் சிரமங்கள் ஏற்படுத்துவதால், பள்ளிக்கு இடம் வாங்கவும், கட்டிடங்கள் கட்டவும் நீண்ட கால சுலபத் தவணை முறையில் அரசாங்கம் நேரிடையாகக் கடன் வழங்கி உதவ வேண்டுமாயும்,

28. சர்க்கார் புறம்போக்கு, தேவஸ்தான இடங்கள், டிரஸ்டுகளின் இடங்களில் நடைபெறும் பள்ளிகளுக்கு ஷை இடத்தை ஜாரி செய்ய அல்லது குறைந்த விலைக்குக் கிடைக்கும்படி சட்டம் இயற்றி உதவ வேண்டுமாயும்,

29. எல்லாப் பாடப் புத்தகங்களையும் அரசாங்கமே வெளியிடும் பொறுப்பை ஏற்றால், கல்வி ஸ்தாபனங்களில் அரசியல் தீவிரமாகிவிடும் நிலை உள்ளது. அரசாங்கப் பாடப் புத்தக விற்பனையை ஒரு குறிப்பிட்ட வியாபாரிக்கு மட்டுமே வழங்காமல் எல்லாப் புத்தகக் கடைகளிலும் எளிதாகக் கிடைக்கும்படி விற்பனை உரிமை வழங்க வேண்டுமாயும்.

30. ஒரு ஆசிரியர் அரசாங்கம் அல்லது ஸ்தல ஸ்தாபனப் பள்ளிகளிலிருந்து தனியார் பள்ளிக்கு வந்தாலோ அல்லது சென்றாலோ முந்திய நிர்வாகத்தில் கடைசியாகப் பெற்ற சம்பளமும், சர்வீசும் தொடர்ந்து கிடைக்கும்படி உத்தரவு பிறப்பிக்க வேண்டுமாயும்,

31. தனியார் பள்ளிகளின் எதிர்கால நிலை பற்றியும், அதில் அரசின் தலையீடு பற்றியும் ஓர் திட்டவட்டமான கொள்கையை உடனடியாக அரசு வெளியிடாவிடில் இனிமேல் எந்தப் பள்ளி நிர்வாகமும் பெரும் பொருட் செலவில் பள்ளிக்கட்டிடங்கள் கட்டவோ, பராமரிப்புச் செலவுகளைச் செய்யவோ, உபகரணங்கள், தளவாடங்கள் வாங்கவோ மனமின்றி இருக்கும் ஓர் நிலை உருவாக்கிக்கொண்டு வருவதால் கல்வி நிலையங்கள் பெரிதும் பாதிக்கக் கூடுமெனவும்,

32. கல்வித் துறையில் ஏற்படும் மாறுதல்களால் பொதுமக்களே பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே எவ்வித மாறுதல்களையும் ஆசிரியர்களை மட்டுமே வைத்துப் பார்க்காமல் எதிர்காலப் பிரஜைகளை

யும், நாட்டின் நிலைமைகளையும் நன்கு ஆராய்ந்துதான் முடிவெடுக்க வேண்டுமெனவும்,

33. தனியார் துறைக்குப் போதிய ஆக்கமும், ஊக்கமும் வழங்கும் பொறுப்பு நமது தமிழக அரசு பள்ளி நிர்வாகிகளுக்கு உள்ள சிறு அதிகாரங்களையும் ரத்து செய்யாமலும், தங்களது நிலைமையை எடுத்துச் சொல்லப் போதிய வாய்ப்புகள் வழங்கியும், பள்ளிகளில் அமைதியின்மையும், ஒழுங்கீனமும், திறமைக் குறைவும், அரசியல் ஈடுபாடும் ஏற்படாமல் காக்க வேண்டுமெனவும்,

34. தமிழக அரசினரின் இலவசக் கல்விப் பொறுப்பிற்கு உறு துணையாக இருந்து வரும் ஏராளமான தனியார் பள்ளிகளின் நடைமுறை களைப் பெருநோக்குடன் பரிசீலனை செய்து அவைகளை நியாயமான முறையில் நிவர்த்தி செய்வதை விட்டு, விட்டு மற்ற எல்லாத் துறை களிலும் உள்ளது போல ஒரு சிறு குறைகள் தனியார் பள்ளிகளிலும் இருப்பதைப் பெரிது படுத்தி லாப நோக்கத்தோடு தனியார் பள்ளிகள் முழுதும் நடைபெறுவதாக முடிவு செய்யாது மேடி குறைகள் ஏன் ஏற் படுகின்றன என்ற அடிப்படைக் காரணங்களைக் கண்டுபிடித்து நாட் டின் கோடிக் கணக்கான இளம் வாரிசுகளையும் கருத்திற் கொண்டு தக்க சீர்திருத்தங்களையும் செய்ய வேண்டுமெனவும்,

35. மேலே கண்ட குறைகளை அரசு தொலை நோக்குடன் நன்கு பரிசீலனை செய்து எதிர்காலச் சந்ததியினரின் கல்வித் தேவைகளையும், கட்டுப்பாட்டையும், ஒழுங்கையும் மனதில் கொண்டு தனியார் நிர்வா கத்தை ஊக்குவித்து நல்ல முறையில் கல்வி நிறுவனங்களை நடத்தப் போதிய வசதியளிக்க அரசுக்கு எண்ணமில்லாவிடில் பள்ளிகளுக்காகத் தொடக்க காலம் முதல் இதுவரை நிர்வாகம் சொந்தமாகச் செலவழித்த தொகையைக் கணக்கிட்டு. அத் தொகைகளை ஈடு செய்தபின் தனியார் பள்ளிகளைத் தேசிய மயமாக்குவதில் தடையேதுமில்லை என்றும் தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

# தெரிந்து கொள்ளுங்கள் — — —

— கி. மா. பக்தவத்சலன் —

உலகத்திலேயே முதல் முதல் அச்சிடப்பட்ட புத்தகம் 'பைபிள்' தான். இது லத்தீன் மொழியில் ஆடுமாடுகளின் தோலில் அச்சிடப்பட்டது. அச்சிடப்பட்ட ஆண்டு 1455. மொத்தம் 200 பிரதிகளே அச்சிடப்பட்டன. ஒவ்வொரு பிரதியிலும் 1282 பக்கங்கள். ஒவ்வொரு பக்கத்திலும் 36 வரிகள். 200 பிரதிகளில் 47 பிரதிகள் இப்பொழுது ஜெர்மனியில் உள்ள தொல் பொருள் காட்சிச் சாலைகளில் (மியூசியம்) இருக்கின்றன

இந்திய மொழிகளில் தமிழில்தான் முதல் முதல் புத்தகங்கள் அச்சிடப்பட்டன. தமிழில் அச்சிடப்பட்ட முதல் புத்தகம் 'லூசோ தமிழ் சமய வினு விடை' என்பது. 1554—ல் போர்த்துக்கல் நாட்டின் தலைநகரான லிஸ்பன் நகரில் இது அச்சிடப்பட்டது. இந்தியாவுக்கு வெளியே அச்சிடப்பட்ட முதல் இந்திய மொழிப் புத்தகமும் இதுதான். இதன் பிரதி ஒன்று லிஸ்பன் நகரில் உள்ள பழம்பெரும் பொருட் காட்சி சாலையில் இருக்கிறது.

தமிழகத்தில் அச்சான முதல் புத்தகம் 'தம்பிரான் வணக்கம்' என்பது. இந்தியாவில் அச்சிடப்பட்ட முதல் நூலும் இதுதான். குவிஸ் என்ற பாதிரியார் தமிழில் எழுதிய கிறித்தவ நூல் இது. மர அச்சு எழுத்துக்களைக் கொண்டு 1578-ல் அம்பலக்காட்டில் (மலபார்) இந்தப் புத்தகம் அச்சிடப்பட்டது. இதன் இரண்டு பிரதிகள் இப்பொழுது அமெரிக்காவில் உள்ள அர்வர்டு பல்கலைக் கழக நூல் நிலையத்தில் இருக்கின்றன.

முதல் முறையாக இந்தியாவிலேயே சிறந்த இசை அமைப்பாளர் என்ற பரிசைப் பெற்றவர் கே. வி. மகாதேவன். 1968-ல் இவர் ஜனாதிபதி பரிசு பெற்ருர்.

---

# பாரதிதாசன் கவிதைகளில் சமுதாய சீர்திருத்தம்

[ மு. பி. பாலசுப்பிரமணியன், எம். ஏ., ]

*

**கவிதை !**

கவிஞனின் இதயத்தில் இருந்து பிறப்பது கவிதை. உயிரிலாச் செய்திகட்கு உயிர்மிகக் கொடுத்து, ஒளியிலாச் செய்திகட்கு ஒளியருள் புரிவது கவிதை. வாழ்க்கைக்கும் கவிதைக்கும் ஏராளமான தொடர்பு உண்டு. வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டும்கண்ணாடியாகத் திகழ்வதோடு, எப்படி வாழ வேண்டும் என்று எடுத்துக் கூறுவதும் கவிதை ஆகும். ஏனென்றால், 'கவிதை என்பது தனி உரிமை படைத்த கலையாகும். மொழி அதனுடைய ஆற்றல்மிக்க கருவியாக அமைந்துள்ள காரணத்தால் அது நம் வாழ்க்கையில் வேறு எந்தக் கலையையும்விட ஆழமாக ஊடுருவிப் பாய்ந்திருப்பதோடு, நெருக்கமாகப் பின்னிப் பிணைந்து இருக்கிறது. அத்தகைய ஆற்றல் வாய்ந்த கவியால்தான் சமுதாயத்தைச் சீர்திருத்த முடியும். 'ஒரு சமுதாயத்தின் விருப்பு வெறுப்பு நம்பிக்கை முதலியவற்றை வளர்த்துப் பண்படுத்துவது அந்தச் சமுதாயத்தின் இலக்கியமே. ஆகையால் அதுவே மனித வாழ்வைப் பெரிதும் மாற்றியமைப்பது' என்பர். எனவே கவிதைகள் வெறும் போதைப் பொருளாகப் போகாமல் சமூகத்திற்குத் தெம்பும் திறமும் தேடித் தரும் வழியில் மாறவேண்டும். அப்போது தான் சமுதாயம் நோயற்று வாழ முடியும்.

**சீர்திருத்தம் :**

சீர்திருத்தம் என்பது காலத்தின் பணியாகும். 'எது எது இயற்கையின்றும் வழுக்கி வீழ்கிறதோ, அதை அதைச் செப்பஞ்செய்ய இயற்கை விழையும்ஒன்று சீர்திருத்தம் என்பது. இச்சீர்திருத்தம் இல்லையேல் உலகவளர்ச்சியுறாது, மக்கள் சமுதாயத்தில் பல சீர்கேடுகள் உள்ளன. அவற்றைச் சிந்தனையால்—சொற்பொழிவால்—செயலால் சீர்திருத்த முயன்ற செம்மல்கள் பலர். தம் கவிதையாற்றலால் சீர்திருத்த முயன்ற கவியரசர் பலர். 'கலை கலைக்காகவே என்ற கோட்பாடு பொருளற்றது, கலை, வாழ்க்கைக்காக-கவிதை வாழ்க்கையை வளப்படுத்துவதற்காக என்ற கொள்கையே வலிவுடையது, ஆதலால் சீர்திருத்தக் கருத்துக்கள் கவிதை வடிவம் பெறத்தொடங்கின.

**பாரதிதாசன் :**

சாதிக்கொடுமை, சமயக் காழ்ப்பு, மூடநம்பிக்கை, கைம்மைத் துயர், குழந்தை மணம்,

பெண்ணடிமை, தீண்டாமை முதலிய பல இன்னல்களுக்கு இடங்கொடுத்து இழி நிலைக்குச் சென்று கொண்டிருக்கும் இன்றைய சமுதாயத்தைக் கண்டு நெஞ்சங் கலங்கியவர்பாரதிதாசன். கவிதைகளைக் கவண் கற்களாகப் பயன்படுத்திச் சீர்கெட்ட சமுதாயத்தைச் சீர்திருத்த எண்ணிய கவியரசர். அடிநாள் முதலே சாதிபேதத்தையும் சமயபேதத்தையும் வெறுத்தவர். உயர்ந்த எண்ணமும் விரிந்த அறிவும் கொள்கைக்குப் போராடும் குணமும் கொண்டவர்.

## சாதிக்கொடுமை :

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்கிறார் வள்ளுவர். அவர் வழி நின்று 'பிறவியில் உயர்வும் தாழ்வும் சொல்லல் மடமை' என வலியுறுத்திப் பாடுகிறார். ஆண் குழந்தை தாலாட்டில் 'சாதியென்று போராடும் தக்கைகளின் நெஞ்சில் கனலேற்ற வந்த களிறே' என்றும், பெண் குழந்தை தாலாட்டில் 'வேண்டாத சாதி இருட்டு வெளுப்பதற்குத் தூண்டா விளக்காய்த் துலங்கும் பெருமாட்டி' என்றும் சாதியைச் சாடும் இடங்கள் கருத்தில் கொள்ளத்தக்கன. 'கடல்மேற் குமிழிகள்' என்னும் காவியத்தில்.

"மிக்குயர்ந்த சாதிகீழ்ச்
சாதி என்னும்
வேற்றுமைகள் தமிழ்க்கில்லை;
தமிழர்க் கில்லை,
பொய்க்கூற்றே சாதிஎனல்,
ஆரியச்சொல்"

என்று சாதியைக் கடுமையாகச் சாடுகிறார். "சமத்துவப் பாட்டு" என்னும் தலைப்பில் 'சேரிப்பறையர், தீண்டாதார் என்பார் நம் உற்றார்' என்றும், 'ஆலய உரிமை தாழ்ந்தவர்க்கும் உண்டு' என்றும் அரிய கருத்துக்களை உரிய முறையில் நம் உள்ளத்தில் பதியவைக்கிறார் மக்களில் சிலருக்கு ஆலய உரிமை மறுக்கப்படுவதை வன்மையாகக் கண்டிக்கிறார்.

'குக்கலும் காகமும்
கோயிலிற் போவதிற்
கொஞ்சமும் தீட்
டில்லையோ?—நாட்டு
மக்களிலே சிலர்
மாத்திரம் அந்த
வகையிலும் கூட்டில்லையோ?"

என்று பாடுகிறார். நாயும் காகமும் கோயிலுக்குள் போகலாம், ஆனால் மக்களில் சிலர் போகக்கூடாதா? என வெந்த உள்ளத்தோடு வினவுகின்றார்.

இக்காலத்தில் சமையல் முன்னேற்றமின்றித் தாழ்ந்துபோனதற்குச் சாதியும் சமயமுமே காரணம் எனக் குற்றஞ்சாட்டுகிறார்.

"சமையல்முன் னேற்றமின்றித்
தாழ்தற்கு நமது நாட்டில்
சமயமும்சாதி என்ற சழக்கும்கா
ரணம்என் பேன்நான்.
அமைவுறும் செட்டி வீட்டில்
அயலவன் உண்பதில்லை

தலைஉயர் வென்பான் நாய்க்கன்
முதலி நீதாழ்ந்தோன் என்பான்

என்று இன்றைய சமுதாயத்தைப் படம் பிடித்துக்காட்டி, நமக்குப் பாடமும் புகட்டுகிறார் பாரதிதாசன்.

## சமயம், மூடநம்பிக்கை, பழக்கவழக்கங்கள் :

தொடக்க காலத்தில் சமுதாயத்தைச் சீர்திருத்தி நல்வழிப்படுத்தவே சமயம் தோன்றியது. ஏசுநாதர்மகமதுநபி, புத்தர் போன்றோரின் பொன்மொழிகள் பூவுலகம் உள்ளளவும் போற்றக் கூடியவையல்லவா? ஆனால், சமயத்தைப் பின் பற்றிய மக்களுடைய மனத்தில், மூடநம்பிக்கைகள் வளர்ந்தனவே ஒழிய முன்னேற்றம் அரும்பவில்லை எனப் பகுத்தறிவாளர் பலர் கருதத் தொடங்கினர். அந்தக் கண்ணோட்டத்தோடு மதத்தை அணுகியவர்களில் பாரதிதாசனும் ஒருவர். சமுதாயம் சீர்திருந்த வேண்டுமெனில் சமய பேதம் ஒழியவேண்டும் என்ற கொள்கையினைக் கொண்டவர். சமயத்தினால் சமுதாயத்திற்குத் தீங்குதான் விளையும் என்ற திடமான நம்பிக்கை உடையவர் அவர் குறிஞ்சித் திட்டில்,

“மதம்என்ற கருங்கற் பாங்கில்
மல்லிகை பூப்பதில்லை
மதியினில் மயக்கம் என்ற
நஞ்சொன்றே மலரும்!’’

என்று தன் கருத்தினை வலியுறுத்திப் பாடுகிறார், சமயத்தை வெறுத்துப் பாடினும் ‘கடவுள் ஒருவர் உண்டு’ என்பதனை ஒப்புக்கொள்கிறார். ஆனால் உருவ வழிபாட்டை ஒப்புக் கொள்ளவில்லை.

‘‘உள்ளதொரு தெய்வம்—
அதற்கு உருவம்இல்லை, தம்பி’’

என்று ஏற்றப் பாட்டில் தனக்கு ஏற்ற கருத்தினைத்தெரிவிக்கின்றார். மேலும் ‘கடல்மேற் குமிழி’ களில்,

‘‘ஒரு கடவுள் உண்டென்போம்!
உருவணக்கம் ஒப்போம்!
உள்ளபல சண்டையெலாம்
ஒழியும் மதம் ஒழிந்தால்’’

என்று குறிப்பிடுகிறார். ஒருவனே தேவன்; அவனுக்கு உருவமில்லை; சமயம் ஒழிந்தால் சண்டையும் ஒழிந்துவிடும் என்ற தன் எண்ணத்தைத் திண்ணமுடன் தெரிவிக்கிறார்.

சமுதாயத்தில் கண்மூடிப் பழக்கங்கள் மண்மூடிப் போகவேண்டும்.

எனப் பெரிதும் விழைக்கின்றார்.

“மூடப் பழக்கம்
முடிவற்ற கண்ணுறக்கம்
ஓடுவ தென்றோ? உயர்வ
தென்றோ? நானறியேன்,’’

என்று உணர்ச்சியுடன் பாடுகிறார். ஒழுக்கம் இல்லாத பழக்க வழக்கங்களைக் கைக்கொள்ள வேண்டாம் என்று கட்டளையிடுகிறார்.

"வழக்கம் என்பதில்
ஒழுக்கம் இல்லையேல்
கழுத்துப் போயினும்
கைக்கொள வேண்டாம்"

என்று கூறும்போது, அவர் கையாளும் சொல்லாட்சியே அவர் உள்ள உறுதியை வெளிப்படுத்துவதாய் அமைகிறது.

## பெண்ணின் பெருமை :

மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்திச் சமுதாயத்தைச் சீர்திருத்தப் பல கவிதைகளை இயற்றினார் பாரதிதாசன். பெண்களுக்குப் பேச்சுரிமை வேண்டும்; பெண்ணடிமை தீரவேண்டும் என்ற எண்ணங் கொண்டவர் அவர். சஞ்சீவி பர்வதத்தின் சாரலில்,

"பெண்ணுக்குப் பேச்சுரிமை
வேண்டாம்என் கின்றீரோ ?
மண்ணுக்குக் கேடாய்
மதித்தீரோ பெண்ணினத்தை?
பெண்ணடிமை தீருமட்டும்
பேசுந் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து
வருதல் முயற்கொம்பே!"

எனப் பெண்களுக்காக வாதாடும் வழக்குரைஞராகக் காட்சி யளிக்கிறார்.

பெண்குழந்தை தாலாட்டில்,
"நாய் என்று பெண்ணை
நவில்வார்க்கும் இப்புவிக்குத்
தாய் என்று காட்டத்
தமிழர்க்கு வாய்த்தவளே"

எனத் தாய்க்குலத்தின் பெருமையினைத் தரணி யறிய வேண்டுகிறார். இல்லற வாழ்வில் கணவனை மரமாகவும், மனைவியை வேராகவும் மதிக்கிறார். குறிஞ்சித்திட்டு காவியத்தில்,

"......மரம் கணவன்
வேர் மனைவி;
வேரை மரம் வெறுத்தால்
வீழ்ந்திடுமன்றோ குடும்பம்?"

என்று பெண்மையைப் போற்றிப் பாடுகிறார். ஆம் வேர் இல்லையேல் மரம் இல்லை. மனைவி இல்லையேல் கணவன் இல்லை! குடும்ப வாழ்வின் இடும்பையினைத் தீர்ப்பவளாக மனைவியை மதிக்கிறார். மேலும் இருளை அகற்றி ஒளியை நல்கும் 'குடும்ப விளக்காக'வும் கருதுகிறார்.

பெண்கள் நாட்டின் கண்களாகத் திகழவேண்டுமெனில் அவர்கட்குக் கல்வி இன்றியமையாதது. கல்வி யில்லாப் பெண்களால் கடுகளவும் குடும்பத்திற்கோ, சமுதாயத்திற்கோ நன்மையில்லை என்ற கருத்துக் கொண்டவர் அவர். அதனாற்றான்,

கல்வியில்லாத பெண்கள்
களர்நிலம்! அந்நிலத்தில்
புல் விளைந்திடலாம் நல்ல
புதல்வர்கள் விளைதல் இல்லை!
கல்வியை உடைய பெண்கள்
திருந்திய கழனி, அங்கே
நல்லறி வுடைய மக்கள்
விளைவது நவில வோநான்."

என்று பாடுகிறார். படிக்காத

பெண்களைப் பயன்தராத களர் நிலத்திற்கும், படித்தபெண்களைப் பண்படுத்தப்பட்ட கழனிக்கும் ஒப்பிட்டுக் காட்டுகிருர். கல்வி யறிவுடைய பெண்களே நல்லறி வுடைய நன்மக்களைப் பெற் றெடுக்க முடியும் என்கிருர்.

"கல்வியில்லாத மின்னாள்—
வாழ்வினில்என்றும்மின்னாள்"

என்றும் பாடுகிருர். மேலும்,

"மகளிரெலாம் அரசியலைக்
கைப்பற்றி ஆண்டால்
மாநிலத்தில் போரில்லை;
சாக்காடு இல்லை."

என்று பெண்ணினத்திற்குப் பெரு மதிப்புக் கொடுத்துப் பாடுகிருர். பெண்கள் அரசியலைக் கைப்பற்றி ஆட்சி செய்தால் மாநிலத்தில் போரில்லை; சாவும் இல்லை என்று கூறும்போது அவர் இதயத்தில் ஊடுருவி நிற்கும் எண்ணத்தைப் புரிந்து கொள்ளுகிரும்.

## கலப்பு மணம், காதல் மணம் :

சமுதாயத்தில் சாதி பேதமும் சமய வாதமும் ஒழியவேண்டு மெனில் காதல் மணமும் கலப்பு மணமும் பல்கிப் பெருகவேண்டும். மக்களுக்குள் உயர்வு தாழ்வு பேசும் மடமையினை ஒழிப்பதற்கு ஒரே வழி கலப்பு மணந்தான் என் பதனை நன்கு உணர்ந்தவர் பாரதி தாசன்.

"காட்டோமே சாதி மணம்!
கலப்பு மணம் ஒன்றே
நல்வழிக்குக்
கைகாட்டி........."

என்று தன் உள்ளக் கருத்தினை வெளிப்படுத்துகிருர்.

'புரட்சிக் கவி' காவியத்தில் புவி யாளும் மன்னன் மகளுக்கும் எளிய குடிமகனை கவிஞன் ஒருவ னுக்கும் கலப்பு மணம் செய்து வைக்கிருர் பாரதிதாசன். இளவரசி அமுத வல்லியிடம்,

"அன்றியும் என் காதல்
அமுதே! நமதுள்ளம்
ஒன்றுபட்ட பின்னர்
உயர்வென்ன தாழ்வென்ன?"

என்று அந்தக் கவிக்காதலன்கூறுவ தாகப் பாடுகிருர். காதலுக்குக் கட் டுப்பாடு விதிப்பது கயமைத்தனம் என்பது கவிஞரின் கருத்து.

'மண்படைப்பே காத
லெனில் காதலுக்கு
மறுப்பெதற்குக் கட்டுப்பா
டெதற்குக் கண்டார்?',

என்று கேட்கின்ருர். 'பாண்டியன் பரிசு' காவியத்தில்,

"கூழையே னுங்கொண்டு
காட்டு மேட்டுக்
கொல்லையே னும்சுற்றித்
திரியும் அந்த
ஏழையே னும்கண்ணுக்
கினியான் இன்றேல்
இம்மியே னும்வாழ்வை
இனியான் வேண்டேன்."

என்று கொற்றவன் பெற்ற குலக் கொடியைக் கூறவைக்கிருர்.

மேலும், இழிந்த சாதியாக இருந்

தாலும் இதயம் நிறைந்தவராயின் ஏற்றுக்கொள்ளத் தயங்கமாட்டேன் என்று திண்ணிய நெஞ்சத்துடன் தன் கருத்தைத் தெரிவிக்கின்றாள் இளவரசி அன்னம். பாரதிதாசன் காவியங்கள் அனைத்தும் கலப்பு மணத்தின் புகழ் பாட எழுந்தனவே ஆகும். கலப்புமணம் செய்துகொண்டால் சமுதாயத்தில் நெளியும் சாதிப்புழு அழியும்-சமத்துவ நெறி தழைக்க வழி பிறக்கும் என்ற எண்ண எழுச்சியினைப் பெற்றவர் பாரதிதாசன்.

**கைம்மைத்துயர்,**
**குழந்தை மணம்,**
**மறுமணம் :**

கைம்மை, குழந்தை மணம், பொருந்தாத் திருமணம் போன்ற கொடுமைகளைக் குழி தோண்டிப் புதைக்கவேண்டும் என்ற கொள்கை உடையவர் பாரதிதாசன். கணவன் இறந்தவுடன் இளம் மனைவியின் ஏக்கமும்இறந்து விடுமா? என்பது அவர் எழுப்பும் வினா.

"மாலையிட்ட மணவாளன்
 இறந்து விட்டால்
மங்கை நல்லாள் என்ன
 செய்வாள் — அவளை நீங்கள்
ஆலையிட்ட கரும்பாக்கி
 உலக இன்பம்
அணுவளவும் அடையாமல்
 சாகச் செய்தீர்"

என்று கைம்மை நிலைக்கு இரங்கிப் பாடுகிறார். மேலும்,

"கோரிக்கை யற்றுக் கிடக்கு
 தண்ணே —இங்கு
வேரில் பழுத்த பலா"

என்று கண்ணீர்விட்டுக் கலங்கும் பெண்ணுக்கு வேரில் பழுத்த பலாவினை உவமை காட்டி நம் உள்ளத்தை நெகிழ வைக்கிறார். வயது முதிர்ந்த கிழவனுக்குக்கூட மனைவி இறந்தால் வேறு மங்கையை மணந்து கொள்வதற்குச் சமுதாயம் உரிமை கொடுக்கிறது. ஆனால் கணவனை இழந்த இளம் பெண்ணுக்கு அந்த உரிமை மறுக்கப்படுகிறது. இக்கொடுஞ்செயலைக் கண்டித்து,

"வாடாத பூப்போன்ற
 மங்கை நல்லாள்
மணவாளன் இறந்தால் பின்
 மணத்தல் தீதோ?
பாடாத தேனீக்கள்
 உலவாத் தென்றல்
பசியாத நல்வயிறு
 பார்த்த துண்டோ?"

என்று அவர் விடுக்கும் வினா நம் நெஞ்சைத் தொடுகிறதல்லவா? தேனீக்கள் என்றால் பாடவேண்டும்; தென்றல் என்றால் உலாவ வேண்டும்; வயிறு என்றால் பசிக்க வேண்டும். இவற்றிற்கு நேர்மாறாக உலகில் நடக்குமா? என்ற வினாவின் மூலம், விதவைக்கு வெண்ணிற ஆடை கொடுத்து விழியிழந்து தவிக்கும் சமுதாயத்துக்கு ஒளி கொடுக்க முனைகிறார் பாரதிதாசன்.

குழந்தை மணத்தின் கொடுமை

வினையும் கடுமையாகச் சாடுகிறார். 'குழந்தைக்கு மணஞ்செய்து கொல்வது சீரோ? எனக் கூறக் குழந்தைக்கு மணஞ்செய்வதும் அவர்களைக் கொல்லுவதும் ஒன்று தான் என்கிறார். பெருங்கிழவன் இளம் பெண்ணை மணக்கும் பொருந்தா மணத்தை மூடத் திரு மணம் என்கிறார் மனம் பொருந்தா மணம் மண்ணுய்ப்போக' எனச் சபிக்கிறார். மனம் வேறு பட்டால் 'மணவிலக்கு' செய்துகொள்ள அனுமதி கொடுக்கிறார் காதல் உடையார் தம் வாழ்வில் உளம் வேறுபட்டால் மடவார் பிறனை மணக்கவிட வேண்டும்' என்கிறார். இதன் மூலம் மண விலக்கு செய்து கொள்ளலாம்.

> "மறுமணம் புரிவது
> சிறுமை என்றறைவது
> குறுகிய மதியென
> அறிஞர்கள் மொழிகுவர்"

என்று மறுமணத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்துப் பாடுகிறார் பாரதிதாசன்.

## புரட்சித் திருமணத் திட்டம்:-

வைதீக மணத்தில் பின்பற்றப் படும் பலவிதமான சடங்குகளை வெறுத்தவர் பாரதிதாசன். திரு மண முறையில் இத்தகையசடங்கு களை யெல்லாம் ஒழித்தால்தான் புதிய சமுதாயத்தை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை உடைய வர் அவர். சடங்குகள்—பாத்திரங் கள்—மூட நம்பிக்கைகள் முதலிய வற்றிற்கு இடங்கொடுக்காத புரட் சித் திருமணத் திட்டம்' ஒன்றி னைக் கவிதை வடிவில் தருகிறார். அது சுயமரியாதைத் திருமணத் தின் மறுபதிப்பாகக் காட்சியளிக் கிறது. அதில், வைதீக மணத் திற்கு இடங்கொடுத்தால் தமிழர் சமுதாயம் தலைசாயும் நிலைதான் ஏற்படும் என்று குறிப்பிடுகிறார்.

> "வைதீக மணத்தை
> மெய்என ஒப்பிடில்
> தமிழப் பண்பு
> தலைசா யாதோ?"

என்று இன உணர்ச்சியுடன் எழுச் சிக் கவி வடிக்கிறார். மேலும், பஞ் சாங்கம் பார்த்துத் திருமணம் நடத் தும் முறையினை அவர் விரும்ப வில்லை.

> "மிஞ்சும் காதலர்
> மெய்யன் பிருக்கையில்
> கெஞ்சிப் பிழைப் போன்
> பஞ்சாங்க மேனோ?"

என அஞ்சாமல் கேட்கின்றார். அதே போன்று 'நல்லமுத்து'கதை யிலும் திருமணத்திற்குச் சாதகம் பார்க்கும் முறைகேட்டினை நகைச் சுவை யோடு இடித்துக் கூறுகிறார்.

## குடும்பக் கட்டுப்பாடு :—

மக்கள் தொகைப் பெருக்கத் தால் எதிர்காலத்தைப் பற்றிய அச்சம் பலர் உள்ளத்தில் குடி கொண்டுள்ளது. அளவான குடும் பமே மகிழ்வான சமுதாய வாழ் வுக்கு வழி கோலும் என்ற எண் ணம் பரவி வருகிறது. குடும்பக்

கட்டுப்பாடே குதூகலமான வாழ்வுக்கு அடிப்படை என்ற கொள்கையுடையவர் பாரதி தாசன். குடும்ப விளக்கில்,

''ஈண்டு குழந்தைகள் தாம்
எண்மிகுத்துப் போகாமல்
வேண்டும் அளவே விளைத்து,
மேல்—வேண்டாக்கால்
சேர்க்கை ஒழித்துக்
கருத்தடையே னும்செய்க''

என்று கட்டளையிடுகிறார் கவிஞர். கருத்தடை செய்து கொள்வதின் மூலம்தான் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்று நம்புகிறார். அந்த அசைக்க முடியாத நம்பிக்கையின் அடிப்படையில்,

''காதலுக்கு வழிவகுத்துக்
கருப்பாதை சாத்தக்
கதவொன்று கண்டறிவோம்
இதிலென்ன குற்றம்?
சாதலுக்கோ பிள்ளை?
தவிப்பதற்கோ பிள்ளை?
சந்தான முறை நன்று;
தணிக்கும் முறை தீதோ?''

என்று கேள்விக்கணை தொடுக்கிறார். குடும்பக் கட்டுப்பாட்டினால் சமுதாயத்தில் மறு மலர்ச்சியும் மக்களிடையே மன மகிழ்ச்சியும் ஏற்படும் என்கிறார். ஆம்! குடும்பக் கட்டுப்பாட்டிற்காக 1939-ஆம் ஆண்டிலேயே குரல் கொடுத்தவர் பாரதி தாசன்.

## முடிவுரை :

'பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேணும்' என்று பாடினார் பாரதியார். கவிதைத் திறனால் சமுதாயத்தைச் சீர் திருத்த முடியும்; சீர்திருத்தக்கருத்துக்களைப்பரப்பி மக்களைச் சிந்திக்க வைக்க முடியும் என்று காட்டியவர் பாரதிதாசன். நம்பிக்கையிழந்து தவித்த சமுதாயத்தின் நாடி நரம்புகள் முறுக்கிவிட்ட நற்றமிழ் வேந்தர்—புத்துலகம் காண விழைந்த தத்துவ வித்தகர். சமுதாயத்தைச் சீர்திருத்த விழைந்த சமத்துவக் கவிஞர்: ஆம்! பாரதிதாசன் கவிதைகளில் சமத்துவ மணம் கமழ்வதைப் பரக்கக் காணலாம். 'இருண்ட வீடாக' இன்றைய சமுதாயம் இல்லாமல் 'குடும்ப விளக்காக'க் குவலயத்தில் சிறக்க வேண்டும் என எண்ணிய கொள்கைக் கவிஞர்—சமுதாய சீர்திருத்தம் பாடிக் காலத்தை மாற்றும் கவிஞராக—புதிய காலத்தையே படைக்கின்ற புத்துலகச் சிற்பியாக அவர் தோற்றமளிக்கிறார். தமிழக முதலமைச்சர் அறிஞர் சி. என். அண்ணாதுரை அவர்கள் ''பாரதி தாசன், மேல்நாட்டுக் கவிகளைப் போல் கலையைக் காலத்தின் கண்ணாடியாக்குகிறார். காலத்தையே படைக்கிறார், காலத்தையே படைக்கிறார் என்பது மாத்திரமல்ல; காலத்தையே மாற்றுகிறார்; காலத்தை மாற்றுகிறார் என்பது மாத்திரமல்ல, மாறிய காலத்திற்கு நம்மை அழைத்துச் செல்கிறார்.''

என்று கூறியிருக்கும் கருத்து, இப்பாருள்ளளவும்கடல் நீருள்ளளவும் நிலைத்து நின்று பாரதிதாசன் புகழைப் பறை சாற்றும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

—''காஞ்சி''

# இந்தியா கம்யூனிஸ்ட் நாடாகி விடுமா?

— தமிழ்வாணன் —

ஒரு சத்திரத்தின் திண்ணையிலே, மூன்று வழிப்போக்கர்கள் படுத்து உறங்கிக் கொண்டிருந்தார்கள்.

நள்ளிரவில், அந்தச் சத்திரத்தில் தீப்பிடித்துக் கொண்டது. சத்திரத்தின் மணியக்காரரும் பணியாட்களும் அதை அணைப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் அது அணைவதாகத் தெரியவில்லை!

அந்த ஆரவாரத்திலே, திண்ணையில் தூங்கிக் கொண்டிருந்த அந்த மூன்று வழிப்போக்கர்களில், ஒருவன் கண்விழித்தான், உடனே அவன் மற்ற இருவரையும் எழுப்பினான்.

'ஏனடா! எங்கள் உறக்கத்தைக் கெடுக்கிறாய்?' என்று எரிந்து விழுந்தனர் அந்த இருவரும்.

'சத்திரத்தின் பின்கட்டில் நெருப்புப் பிடித்து எரிகிறது. நாம் இப்போதே இவ்விடத்தைவிட்டுக் கிளம்ப வேண்டும்' என்று பதற்றத்தோடு பதில் அளித்தான் முதலாவது நபர்.

'பின்கட்டுத்தானே எரிகிறது? அந்த நெருப்பு, நடுக்கட்டைத் தாண்டி திண்ணைக்கு வரப்போவதில்லை. நீ பேசாமல் படுத்து உறங்கு' என்று சொல்லிக் கொண்டே, மீண்டும் குறட்டை விடத் தொடங்கினர் மற்ற இரண்டு நபர்களும்.

'இந்தச் சோம்பேறிகள் எப்படியோ போகட்டும். இவர்கள் பேச்சைக் கேட்டால் நமக்கு ஆபத்து' என்று முணுமுணுத்தவாறே, தன்னுடைய மூட்டை முடிச்சுகளை எடுத்துக் கொண்டு அங்கிருந்து வெளியேறிச் சென்றான் முதலாவது வழிப் போக்கன்.

சிறிது நேரம் கழித்து.

இரண்டாவது வழிப்போக்கன் கண் விழித்தான். அப்போது நெருப்பு, நடுக்கட்டுக்கு வந்து விட்டது. உடனே அவன் மூன்றாவது வழிப் போக்கனை எழுப்பினான்.

'ஏடான் ஒருவன் மாற்றி ஒருவன் என் உறக்கத்தைப் பாழாக்குகிறீர்கள்?' என்று மிக வேதனையோடு சொன்னான் அவன்.

'நெருப்பு நடுக்கட்டுக்குப் பரவி விட்டதடா. எழுந்திரு நாம் இனி

யும் இங்கே படுத்திருக்கக் கூடாது' என்று மிகவும் துடிதுடித்தான் இரண்டாவது நபர்.

'அட பைத்தியக்காரா, இதற்காகவா என்னை எழுப்பினாய்? நடுக்கட்டில் எரிகிற தீ: திண்ணைக்கு வரும் என்பது என்னடா நிச்சயம்? அது அப்படி வரும்போது பார்த்துக் கொள்ளலாம். அதுவரையில், நீ என் தூக்கத்தைக் கெடுக்காதே' என்று, தன் 'குறட்டைகளுக்கு இடையே கூறிவிட்டு உறங்கினான் மூன்றாவது வழிப்போக்கன்!

'சரி, உன் தலை எழுத்துப் போல் நடக்கட்டும். உன்னோடு சேர்ந்தால் என் உயிருக்கு ஆபத்து வந்துவிடும் என்று முணுமுணுத்தவாறே, தன்னுடைய மூட்டை முடிச்சுக்களோடு அவ்விடத்தை விட்டு வெளியேறினான் இரண்டாவது வழிப்போக்கன்.

அவன் போய்ச் சிறிது நேரத்திற்கெல்லாம் . நெருப்பு நடுக்கட்டைத் தாண்டித் திண்ணைக்கே வந்து விட்டது! அங்கு உறங்கிக் கொண்டிருந்த மூன்றாவது வழிப்போக்கன்மீது எரிந்து கொண்டிருந்த ஒரு கொள்ளிக்கட்டை வந்து வீழ்ந்தது! அப்போதுதான்!

'ஆபத்து வந்து விட்டது. இனி தான் இங்கு இருக்கக் கூடாது' என்று எண்ணியவாறு, அவன் தன் படுக்கையைவிட்டு வாரிச் சுருட்டி எழுந்திருந்தான். ஆனால் அதற்குள் அவனுடைய படுக்கையிலும் உடையிலும் நெருப்புப் பிடித்து விட்டது!

**இந்த அரசாங்கமும், இந்திய மக்களாகிய நாமும் இப்போது இந்த மூன்றாவது வழிப்போக்கனுடைய நிலையில் தான் இருந்து கொண்டிருக்கிறோம்!**

சீனா ஒரு கம்யூனிஸ்டு நாடாக மாறினபோது, அது நம் எல்லையை அடுத்துள்ள ஒரு நாடு என்பதை மறந்து விட்டு, கம்யூனிசம் எங்கேயோ மிகத் தொலைவில் வந்திருப்பதாக எண்ணிக் கொண்டு, நாம் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தோம்.

அதை அடுத்து,

வடகொரியா, வடவியட்நாம் போன்ற நாடுகள் கம்யூனிசத்துக்கு இரை ஆயின. அப்போதும் நமக்கு உறைக்கவில்லை.

பின்னர்,

நம் தலைக்கு மேலே உள்ள. திபெத்து நாட்டையே கம்யூனிசத் தீ விழுங்கியது! 'அப்படி விழுங்குவதற்கு அதற்கு உரிமை உண்டு என்று நாம் சாவதானமாகச் சமாதானம் சொல்லிக் கொண்டிருந்தோம்!

கடைசியாக,

அது நம்முடைய நாட்டுக்கு உள்ளேயும் பரவத் தொடங்கி விட்டது! கேரளாவிலும் மேற்கு வங்கத்திலும், அந்தத் தீ இப்போது எரிந்து கொண்டிக்கிறது!

ஆனால்,

இன்னமும் கூட, நம்முடைய அரசாங்கத்துக்கோ மக்களுக்கோ விழிப்பு ஏற்படவில்லையென்றால். இந்த நாட்டுக்கு இதைக் காட்டிலும் துரதிஷ்டம் வேறு என்ன இருக்க முடியும்!

அண்மையில் ஒரு மாநிலத்தின் கவர்னராகப் பதவி ஏற்ற ஒருவர், 'இந்தியா ஒரு கம்யூனிஸ்டு நாடாக ஆகியே தீரும்' என்று கூறினதாக, பத்திரிகைகளில் செய்தி வெளியாகி இருந்தது.

'ஆனால், இந்தியக் கம்யூனிசமானது, ரஷ்யக் கம்யூனிசத்திலிருந்தும் சீனக் கம்யூனிசத்திலிருந்தும் வேறுபட்டதாக இருக்கும்' என்று அவர் சொன்னாராம்.

அந்தப் பத்திரிகைச் செய்திஉண்மையாய் இருந்தால்.

'இப்படிப்பட்ட மனப்பான்மை உள்ள ஒருவரை, நமதுமத்திய அரசாங்கம் ஒரு மாநில கவர்னராக நியமித்திருப்பது விவேகமான செய்கைதானா?' என்று கேட்கத் தோன்றுகிறது.

அந்த மாநில கவர்னர் மட்டும் அல்லர், இந்த நாட்டில் உள்ள படித்தவர்களிலேயே ஒரு குறிப்பிடத்தக்க பகுதியினர், இதே போன்ற மனப் பான்மை உடையவர்களாகத் தாம் இருக்கின்றனர். அப்புறம்,படிப்பு இல்லாத ஏழைத் தொழிலாளர்களையும் விவசாயிகளையும் பற்றிக் கேட்கவா வேண்டும்?

கம்யூனிசம் என்பது, ஓர் அரசியல் கொள்கை அல்லது பொருளாதாரக் கொள்கை என்று, பலர் தவருக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அது வெறும் அரசியல் கொள்கையாக மட்டும் இருந்தால், அதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியது இல்லை!

அரசியல், பொருளாதாரம் இவ்விரண்டுக்கும் மேலாக, கம்யூனிசம் என்பது ஒரு மதம்! இந்த உண்மை மிகப் பலருக்குத் தெரியாது!

மதம் என்றால், கம்யூனிசம் ஒரு சாதாரண மதம் அல்ல, அது சைத்தானின் மதம்! மற்ற எல்லா மதங்களையும், எல்லாக் கலாச்சாரங்களையும் அழித்து ஒழித்து விடுவதையே குறிக்கோளாகக் கொண்ட ஓர் அபாயகரமான மதம்!

சீனாவையே எடுத்துக் கொள்ளுங்கள். உலகிலேயே பௌத்த மதத்தின் தலையாய நிலையமாக விளங்கியது சீனநாடு. அந்த நாடு கம்யூனிசத்துக்குஇரையானபோது, பௌத்த மதமும் இரையாகி விட்டது!

இது மட்டும் அல்ல,

இந்தியமக்களைப்போலவே, சீன மக்களும் மிகப்பழமையான கலாச்சாரச் சிறப்பு வாய்ந்தவர்கள், கம்யூனிசம் வந்தவுடன், அந்தக் கலாச் சாரமும் அழிவுறத் தொடங்கியது!

அப்படி அழிவுறாமல் கொஞ்சநஞ்சம் மிஞ்சியிருந்த கலாச்சா

ஏத்தையும் அடியோடு அழித்து விடுவதற்காகவே, நான்கு ஆண்டு களுக்கு முன்பு மாசேதுங் ஒரு கலாச்சாரப் புரட்சியைத் துவக் கினர். அதற்காகச் செங்காவலர் கள் என்ற இளைஞர் படையும் நிறு வினர். அந்த இயக்கத்தில் அவர் வெற்றியும் பெற்று விட்டார்!

அடுத்தாற்போல்,

திபெத்தை எடுத்துக் கொள் ளுங்கள். திபெத்தியர்களே பரம் பரையாகப் பௌத்த மதத்தைச் சார்ந்தவர்கள். தங்களுக்கென்று ஒரு தனிப்பட்ட கலாச்சாரத்தை உடையவர்கள். கம்யூனிசம் வந்த வுடன், அந்தக் கலாச்சாரத்தை யும் அது தன் காலில் கீழே போட்டுத் துவைத்தது. திபெத் தியர்களின் மதத் தலைவரான தலாய்லாமா, இந்தியாவில் ஓடி வந்து தஞ்சம் புகுந்தார். இன் னொரு தலைவரான பஞ்சன்லாமா இப்போது எங்கு இருக்கிறார் என்றே தெரியவில்லை!

அடுத்தபடியாக,

அல்பேனியாவை எடுத்துக் கொள்ளுங்கள். முஸ்லீம்கள் மிகுதி யாக வுள்ள ஒரு நாடு அது. ஜெரு சலத்தில் உள்ள அல் அக்ஸா மசூ தியைப்போலவே, அங்கு ஜேமியே ப்ளம்பிட் (Dzamiae Plumbit) என்று, உலகப்புகழ் பெற்ற ஒரு மசூதி இருக்கிறது. கம்யூனிஸ்டு ஆட்சியின் கீழ், அந்த மசூதி இப் போது ஒரு மாட்டுக் கொட்டிலாக மாற்றப்பட்டிருக்கிறது!

அந்த ஒரு மசூதியை மட்டும் அல்ல; அல்பேனியாவில் உள்ள அத்தனை மசூதிகளையும், அத்தனை மாதா கோவில்களையும்கம்யூனிஸ்டு கள் பாழ்படுத்தி விட்டார்கள். அதை அவர்கள் வெளிப்படை யாகவே ஒப்புக் கொள்கிறார்கள். 'அல்பேனியாவிலே இருந்த மதங் கள் அனைத்தையும் நாங்கள் அறவே ஒழித்து விட்டோம்' என்று அவர்கள் பெருமிதத்தோடு பேசு கிறார்கள்!

இந்தியாவில் கம்யூனிசம் வந் தால், இங்கேயும் அதே போன்ற ஒரு நிலைமைதானே ஏற்படும் என் பதை, எவருமே சிந்தித்துப்பார்ப்ப தாகத் தெரியவில்லை !

நாம் அரசியல் ரீதியில் சீன வுக்கோ ரஷ்யாவுக்கோ அடிமைப் பட நேர்ந்தால்கூட, அதைப் பற்றி அவ்வளவாகக் கவலைப்பட வேண் டியதில்லை. ஏனென்றால், இன் னும் ஒருசில நூற்றாண்டுகளுக்குப் பிறகாவது, காந்தி அடிகளைப் போன்ற யாரேனும் ஒரு மகான் அவதாரம் செய்து.நமக்கு விடுதலை வாங்கித் தந்துவிடுவார் என்று நம்பிக் கொண்டிருக்கலாம்.

நாம் பொருளாதார ரீதியில் படு பாதாளத்தில் வீழ்ந்துபோய் விட் டால் கூட,அதைப் பற்றி அவ்வள வாகக் கவலைப்பட வேண்டிய தில்லை. ஏனென்றால், இன்னும் நாலைந்து தலை முறைகளுக்குப் பிற காவது, இஸ்ரேலியர்களையும் ஜப் பானியர்களையும் போன்று உழைப் பிலே ஊக்கம் கொண்ட ஓர் இளம்

தலைமுறையினர் தோன்றி, இதை ஒரு வளம் கொழிக்கும் நாடாக மாற்றி விடுவார்கள் என்று நம்பிக் கொண்டிருக்கலாம்.

ஆனால்,

எக்காரணத்தை முன்னிட்டாவது நமது சமயமும் கலாச்சாரமும் அழிந்து போய் விடுமானால், அப்புறம் நமக்கு எத்தனை யுகமானாலும் விமோசனம் இல்லை என்பது உறுதி.

உறுதி!

உறுதியிலும் உறுதி!

இப்படி நான் கூறுவதற்குத்தக்க ஆதாரம் இருக்கிறது.

எப்படியென்றால்,

ஒரு காலத்தில் பாரதத்தின் பகுதியாக இருந்த ஒரு பிரதேசம் தான், இப்போது பாகிஸ்தான் என்ற பெயரால், ஓர் அயல் நாடாக விளங்கிக் கொண்டிருக்கிறது!

ஏன் அப்படி?

பாகிஸ்தான் மக்களும் ஒரு காலத்தில் இந்தியர்களாய் இருந்தவர்கள் தாம். இந்தியாவில் பிணைந்தவர்கள் தாம். இருந்தாலும், அவர்கள் நம்மிடத்தில் சிறிதும் பாசம் இல்லாமல், ஒரு பகை நாட்டினரைப்போல் இன்றைக்கு நடந்து கொள்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன ?

வேறு ஒன்றும் இல்லை. பல நூற்றுண்டுகளுக்கு முன்னர், நமது மக்களில் ஒரு பகுதியினரது மதமும் கலாச்சாரமும் பலாத்காரத்தால் அழிக்கப்பட்டன. அவர்கள் மீது ஒரு புதிய மதமும் கலாச்சாரமும் சுமத்தப்பட்டன. அவர்களின் வழிவந்தவர்கள் தாம், தமது பழைய மதத்தையும்பழைய கலாச்சாரத்தையும் பின் பற்றுபவர்களை, பகைவர்களைப் போல் கருதுகின்றனர். தமது தாயகமாகிய பாரதநாட்டையே அவர்கள் ஓர் அன்னிய நாடாகக் கருதுகின்றனர்!

இதிலிருந்து என்ன தெரிகிறது? சமயமும் கலாச்சாரமும் அழிவடையும்போது, ஒரு நாட்டின் மண்ணில் அன்னியர்களாக எண்ணிக் கொள்கிற அவலநிலை ஏற்பட்டு விடுகிறது. ஏற்கெனவே ஒருமுறை ஏற்பட்ட இந்த அவலநிலைதான், தாய்நாட்டின் ஒரு பகுதியையே நமக்கு அயல் நாடாக ஆக்கி வைத்திருக்கிறது!

கம்யூனிஸ்டுகள் ஆட்சிக்குவந்தால், அவர்கள்,

சீனாவில் செய்தது போல,

திபெத்தில் செய்தது போல,

அல்பேனியாவில் செய்தது போல,

நமது சமயங்களையும் கலாச்சாரங்களையும் அறவே அழித்து ஒழித்துவிடுவார்கள் என்பதில் ஐயம் இல்லை!

அப்போது,

நமது இந்தியா முழுவதுமே நமக்கு ஓர் அயல் நாடுபோல் ஆகிவிடும் என்பது உறுதியினும் உறுதி!

கம்யூனிஸத்தின் வளர்ச்சியில் இவ்வளவு பெரிய அபாயம் இருப்பதை, இங்குள்ள அரசியல் கட்சிகள் எதுவுமே தீவிரமாகச் சிந்தித்துப் பார்த்ததாகத் தெரியவில்லை. ஆனானப்பட்ட சுதந்திராக் கட்சியே, கம்யூனிஸ்டுகள் அடங்கிய ஒரு கூட்டணியில் தானும் ஒரு கூட்டாளியாக இருக்கும்போது, மற்றக் கட்சிகளைப் பற்றிக் குறைபட்டுக் கொள்ள என்ன இருக்கிறது?

1942'ல், விடுதலைப் போராட்டத்தின் உச்சக் கட்டத்தில் இந்திய மக்கள் ஈடுபட்டு இருந்த சமயத்தில், வெள்ளைக்காரர்கள் பக்கம் சேர்ந்து கொண்டு நமக்கு எதிர்ப்புக்காட்டியவர்கள் இந்தியக் கம்யூனிஸ்டுகள்! அப்போதே அந்தக் கட்சி நியாயமாக இறந்திருக்க வேண்டியது! ஆனால் அது எப்படியோ மறுபடியும் தலை தூக்கி விட்டது!

1962'ல் சீனா இந்தியாவின் மீது படை எடுத்தபோது, இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மீது மக்களுக்கு அளவு கடந்த வெறுப்பு ஏற்பட்டது. அந்தக் கட்சி இனிமேல் இந்த மண்ணில் பிழைத்திருக்க முடியாது என்ற நிலைமை உருவாயிற்று. ஆனால் அது எப்படியோ மறுபடியும் தலைதூக்கி விட்டது!

அதற்குக் காரணம் வேறு ஒன்றும் இல்லை. இந்தியப் பொது மக்களுக்கு ஞாபகசக்தி மிகமிகக் குறைவு. அவர்கள் எதையும் விரைவில் மறந்து விடுவார்கள். அத்துடன், இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் வளர்ச்சிக்காக, அயல் நாடுகளிலிருந்து பெரும் பணம் வாரி இறைக்கப்படுகிறது. அந்த அளவு பணவசதி, அதை எதிர்க்கும் கட்சிகள் எதற்குமே கிடையாது!

நமது ஆட்சிப் பீடத்தில் இருப்பவர்கள், கம்யூனிஸ்டு நாடுகளுடன் நெருங்கிய சார்பு உடையவர்களாய் இருக்கிறார்கள். அந்தச் சலுகையைப் பயன் படுத்திக் கொண்டு, அந்த நாடுகள் இங்கே தீவிரமான கம்யூனிசப் பிரசாரம் செய்து வருகின்றனர்! அதற்கு எதிரான பிரசாரத்தை அந்த அளவு தீவிரமாகச் செய்வதற்கு இங்கு எவருமே இருப்பதாகத் தெரியவில்லை!

இதே நிலைமை இன்னும் சிறிது காலம் நீடிக்குமானால், இந்தியா ஒரு கம்யூனிஸ்டு நாடாக மாறி விடாது என்று கூறுவதற்கு.

எவராலுமே

இயலாது!

—கல்கண்டு.

# மணமகன் தேவை

## தனிமையில் தவிக்கும் ஜெர்மன் பெண்கள்

( டெலியா டாங்கே )

●

கிழக்கு ஜெர்மனி ரஷ்யாவின் மேற் பார்வையின் கீழ் கம்யூனிஸ்டு நாடாக இருந்து வருகிறது. இதில் மேற்கு ஜெர்மனியிலிருந்து யாரையும் அனுமதிப்பதில்லை. இதன் விளைவாக இந்த நாட்டில் ஆண்கள் குறைந்து பெண்களை மணப்பதற்கு ஆண்கள் தொகை குறைந்து கொண்டு வருகிறது. ஒரு நாடு கம்யூனிஸ்டு ஆட்சியின் கீழ் வருமானல் இத்தகைய சூழ்நிலை ஏற்படுவது சகஜம். என்பது இந்தக் கட்டுரையைப் படிப்பவர்களுக்கு நன்ருய் விளங்கும்.

தனிமையில் தவிக்கும் பெண்கள், கிழக்கு ஜெர்மனியில் ஏராளம். வாழ்க்கையில் பெண்களுக்குப் பாதுகாப்பு தருவது, திருமணமே ! என்னதான் முற்போக்கு எண்ணம் படைத்தவர்களாக இருந்த போதிலும், திருமணம் செய்து கொண்டு "குடியும் குடித்தனமுமாக" இருக்கவே, ஒவ்வொரு பெண்ணும் விரும்புகிருள். ஜெர்மனியில் ஆண்களைவிட பெண்கள் அதிகமாக இருப்பதால், எங்கே மண—மாகாமல் காலத்தைக் கழிக்கவேண்டி யிருக்குமோ என்ற அச்சம் சற்று வயதான பெண்களுக்கு அதிகமிருக்கிறது.

❊

பான் (டாட்)—"மணமகன் கிடைப்பாரா?" என்று மயங்குகிற மங்கைகள், ஜெர்மனியில் ஏராளம். ஏனென்ருல் ஜெர்மன்கூட்டாட்சிக் குடியரசில் ஆண்களைவிட, பெண்களே அதிகம். மணமகன் கிடைக்காமல், தனிமையில் காலம் கழிக்க நேருமோ என்ற அச்சம், 20வயது பருவப்பெண்களை ஓரளவு வாட்டுகிறது என்ருல், 30 வயது முதல் 40 வயது வரையிலான பெண்களை அதிகம் வாட்டுகிறது. எவ்வளவு முற்போக்கு எண்ணம் இருந்த போதிலும், திருமணம் செய்து கொள்ள விரும்பாதவர்கள் வெகு குறைவே. ஆணும், பெண்ணும் சமம் என்று சட்டம் கூறினும், "திருமணத்தில்தான் பாதுகாப்பு இருக்கிறது" என்று ஒவ்வொரு பெண்ணும் நம்புகிருள்.

20 வயது முதல் 25 வயது வரை உள்ள பருவப்பெண்களுக்குக் கணவன் கிடைப்பதில் சிரமம் கிடையாது. ஆனால் 30வயது முதல் 40வயது வரை இன்னும் சொல்லப் போனால் 50 வயதுப் பெண்கள், சாதாரணமாக 'தனியாகவே' இருக்க நேருகிறது. 31 வயதுப் பெண்களில் 50 சதவிகிதத்தினரும், 40 வயதுப் பெண்களில் 20 சதவிகிதத்தினரும், 50 வயதுப் பெண்களில் 5 சதவிகிதத்தினருமே "கணவனைக்" கைப் பிடிக்கும் வாய்ப்பு பெறுகிறார்கள்.

எனவே ஜெர்மனியில் 40 வயதுக்கு மேற்பட்ட 60 இலட்சம் பெண்கள், தற்போது மணாளன் இன்றித் தனியராக இருக்கிறார்கள். இவர்களின் வயதுக்கு ஏற்ற ஆண்கள் குறைவாக இருக்கிறார்கள். அந்த வயது வரம்பில் 60 லட்சம் பெண்கள் இருக்க, 13 லட்சம் ஆண்களே இருக்கிறார்கள். அதாவது 4 பெண்களுக்கு ஒரு ஆண் வீதம் இருக்கிறார்கள். 40 வயதுக்கு மேற்பட்ட ஆண்களில் 13 சதவிகிதம் பேர் "பிரம்மச்சாரி" களாக இருக்க விரும்புகிறார்கள் என்றால், பெண்கள் 97 சதவிகிதம் பேர், கணவனைத் தேடுவதில் ஆர்வம் உள்ளவர்களாக இருக்கிறார்கள்.

வயதான பெண்கள், வயது குறைந்த ஆணை—அதாவது வாலிபனை மணந்து கொள்வதுதான். இந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்கான ஒரே வழி! 23 வயது முதல் 37 வயதுவரையிலான பெண்களில் 25 சதவிகிதம் பெண்கள், தங்களைவிடக் குறைந்த வயது ஆண்களை மணந்து கொண்டிருக்கிறார்கள். இவ்வித திருமணங்கள் மணவிலக்கில்தான் முடியும் என்று ஜெர்மனியில் பொதுவான கருத்து நிலவுகிறது. எனவே உங்களை விட வயது குறைந்த ஆணை மணந்து கொள்வீர்களா?" என்று கேள்விக்கு, 2 சதவிகிதப் பெண்களே "ஆமாம்" என்று திட்டவட்டமாகப் பதில் சொன்னார்கள்.

வயதான பெண்கள் இளைஞர்களை மணந்து கொள்வதின் மூலம் மட்டும் இப்பிரச்னைக்குத் தீர்வு காண முடியவில்லை என்பதால், ஏராளமான வயதான பெண்கள் நாட்டை விட்டே வெளியேறுகிறார்கள். ஒவ்வொரு ஆண்டும், ஜெர்மனியில் இருந்து வெளியேறுகிறவர்களில் 55 சதவிகிதம் பேர்கள் பெண்கள். வெளிநாடுகளிலும் ஜெர்மன் மங்கைகளுக்கு "கிராக்கி" அதிகரித்துள்ளது.

ஐரோப்பிய, அமெரிக்க, ஆசிய, ஆப்பிரிக்க ஆண்களை ஜெர்மன் பெண்களும் விரும்புகிறார்கள். 1967 இல் 16,933 ஜெர்மன் பெண்கள் வெளிநாட்டு ஆண்களைத் திருமணம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

(யூ.பி.எஸ்.)

# தமிழ்நாடு ஓய்வுபெற்ற ஆசிரியர் சங்கம்,

## — காஞ்சிபுரம் —

※

இச் சங்கத்தின் ஆதரவில் 2-வது மாநில மாநாடு, 29-11-'69 அன்று காஞ்சி அந்திரசன் உயர்நிலைப் பள்ளி மண்டபத்தில் திரு. T. புருஷோத்தமன் (சென்னை ஓய்வு பெற்ற உத்தியோகஸ்தர் சங்கத் தலைவர்) அவர்கள் தலைமையில் கூடியது.

காஞ்சி நகரமன்றத் தலைவர் திரு. K. T. S. மணி அவர்கள் மாநாட்டைத் துவக்கி வைத்தார்கள். திரு. N. கிருஷ்ணன், M.A., B.L., M.L A. "தமிழ் நாட்டு அரசும் ஓய்வு பெற்ற ஆசிரியர்களும்" என்பதைப் பற்றி உருக்கமாகப் பேசினார்.

பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. நம் ஜனாதிபதி ஜாகீர் உசேன், நம் முதலமைச்சர் திரு. C. N. அண்ணாதுரை காலமானதற்கு இம் மாநாடு வருத்தம் தெரி விக்கிறது.

2. 1—4—1955-க்கு முன்பு ஓய்வுபெற்ற எல்லாவித ஆசிரியர் களுக்கும் 1—3—1968 முதல் ஊழியம் தந்த G. O. 1505 Ms. Edn Dated 24—9—1968-க்கும், எல்லா ஓய்வுபெற்ற ஆசிரியர் களின் விதவை (அல்லது மக்கட்கு) அவன் ஜீவியகாலம் வரை ஓய்வு ஊதியம் அளிக்கும் G. O. 380 Ms. Edn Date 9—4—69-க்கும் இம்மாநாடு தமிழ் நாட்டு ஆட்சிக்கு நன்றி தெரிவிக்கிறது.

3. இச் சங்கத்தின் 10—2—1968 தேதி 19—7—1969 தேதி தீர்மானங்கள்படி 1—7—1960-க்கு முன்பும் பின்பும் ஓய்வுபெற்ற எல்லா L. T., ஆசிரியர்களுக்கும் ஒரே சீரான ஓய்வு ஊதியம் அளிக்க இம்மாநாடு மீண்டும் சர்க்காரை வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறது.

4. குறைந்த பட்ச ஓய்வு ஊதியத்தைக் கேரள அரசாங்கத்தைப் போல ரு. 35/- ஆக உயர்த்தியும் செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு ரு. 60/-ம் L. T., உதவி ஆசிரியர்களுக்கு ரு. 75/-ம், L. T. தலைமை ஆசிரியர்களுக்கு ரு. 100/-ம் ஓய்வு ஊதியம் தரவேண்டும் என்று இம்மாநாடு தமிழ்நாடு அரசாங்கத்தையும் 2-வது சம்பளக் கமிஷனையும் கேட்டுக் கொள்ளுகிறது.

5. 12—11—1969 அன்று பென்சனர்கள் தினம் கொண்டாடினதை இம்மாநாடு அங்கீகரித்து எல்லாவித ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கும் மத்திய சர்க்காரைப்போல கீழ்க்கண்டபடி உயர்வு 1--9--'69 முதல் அளிக்க வேண்டும் என்று இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

| பென்சன் தொகை | உயர்வு கோரிக்கை |
|---|---|
| ரு. 30 வரை | ரு. 15—00 |
| ரு. 30 முதல் 75 வரை | ரு. 17—00 |
| ரு. 75 முதல் 200 வரை | ரு. 20—00 |

6. National Foundation for Teacher's Welfare Fund இலிருந்து தகுதியுள்ள எல்லா ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கும் உதவி அளிக்க வேண்டும் என்றும், அவ்வுதவி அளிக்கும் கமிட்டியில் இச்சங்க அங்கத்தினர் ஒருவருக்கு இடம் தரவேண்டும் என்றும் இம்மாநாடு சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

7. இச்சங்க மாநாட்டுக்கு வரும் பிரதிநிதிகளுக்கு ரயில்வே கட்டணத்தில் சலுகை தரவேண்டும் என்று மத்திய சர்க்காரையும், ரயில்வே போர்டையும் இம்மாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

8. ஒவ்வொரு மாவட்டத்திலும், நகரத்திலும் கிளைச் சங்கம் நிறுவி, எல்லா ஓய்வுபெற்ற ஆசிரியர்களையும் ஒன்றாகச் சேர்த்து தலைமைச் சங்கத்துடன் அவற்றை இணைத்து, ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என்று இம்மாநாடு எல்லா ஓய்வுபெற்ற ஆசிரியர்களையும் கேட்டுக்கொள்ளுகிறது.

9. இத் தீர்மானங்களின் நகல்களை 1. மாண்புமிகு முதலமைச்சர் 2. கல்வி அமைச்சர் 3. கல்வி இயக்குநர் 4. திரு. G. கிருஷ்ணமூர்த்தி 5. M. L. C.-க்களுக்கும் அனுப்பவும் மந்திரிகளிடம் தூது சென்று தலைவர், செயலாளர், நிர்வாகக் குழுவினர் விளக்கிக் கூறவும் இம்மாநாடு தீர்மானிக்கிறது.

காஞ்சீபுரம்.
21—11—1969.

T. புருஷோத்தமன், B.A.,
மாநாட்டின் தலைவர்.

வீ. திருஞானசம்பந்த முதலியார்,
அமைப்புத் தலைவர்.

ச. சுந்தரவரதாச்சாரி,
கௌரவச் செயலாளர்.

# வள்ளுவப் புரட்சி

— டாக்டர் பா. நடராசன் —

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழிலே ஒரு புரட்சி நூல் எழுந்தது. நூலின் யாப்பிலும் புரட்சி; அமைப்பிலும் புரட்சி; முதலிய பொருளிலும் புரட்சி; அதுவே திருக்குறள்:

அன்றுவரை, குறள் வெண்பாவில் எவரும் ஒரு நூலை எழுதியதில்லை. எழு சீர் அமைதியுங்கூட ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறள்களிலும் ஒன்றுயில்லை என்கிறார்கள் எண்ணிப் பார்த்த பெஸ்கி, சிரால், கூய்பர் என்ற மேலை நாட்டு அறிஞர்கள். முதலடியில் மூன்றும் இரண்டாமடியில் நான்குமாக சில செய்யுட்கள் அமைந்துள்ளன என்றும், முதலடியில் நான்கும் இரண்டாமடியில் மூன்றுமாகப் பல செய்யுட்கள் அமைந்துள்ளன என்றும் கூப்பர் கூறுகிறார். அதாவது, யாப்பிலக்கணத்திலும் வள்ளுவர் புரட்சி செய்து கொண்டார், பத்துப் பத்தாக குறட்பாக்களை நிரல் செய்து, அதிகாரங்களாக தொகுத்துக்கொண்டதும், முன்னைய நூல்களிலில்லா ஒரு புதுமை.

இவ்வாறு, யாப்பில் வள்ளுவர் புதுமை கண்டது எதற்கு? உரை நடையினும், கருத்துக்களை நினைவில் இருத்துவதற்கு செய்யுள் எளிதானது. செய்யுளிலும் சூத்திர வடிவு இதற்கு உகந்தது. சூத்திரவடிவிலும் குறள் வெண்பா வடிவு இதற்குஏற்றமானது. பத்து விரல்களும் விட்டு எண்ணி, கருத்தனைத்தும் விடாது மனத்தில் பொருத்திக்கொள்ள பத்துக் குறள் கொண்ட அதிகார அமைப்புத் துணை செய்ய வல்லது.

மனனம் செய்யும் முறை மழுங்கி விட்ட இன்றைய கல்வி முறையில் இதன் அருமை எளிதில் விளங்காது. ஆனால் கண்ணோடு செவியும் கற்கும் பொறிகளாய் அமைந்த அன்றைய நாளில் நான்கு வேதங்களையுமே எழுதாக்கிளவியாகப் பயின்ற பண்டை நாளில், கல்வியும் கேள்வியும் போதனை முறையில் ஒருங்கிடம் பெற்றிருந்தன. பெரும்பாலான மக்களுக்குக்கேள்வியொன்றே கல்விமுறையாக வாய்த்தது. எனவே, கேள்விப் பயிற்சிக்குத்துணையாகும் வகையில் வள்ளுவர் தனது நூலின் யாப்பையும் அமைப்பையும் வகுத்துக் கொண்டார் என்று கருதுவது மிகையாகாது.

வள்ளுவர் பண்டிதர்கள் மட்டுக்கும் நூல் செய்யவில்லை. கல்விக் கண்ணில்லா கேள்வியொன்றனையே பெறும் நிலையிலிருந்த மன்பதை

அனைத்தும் உய்ய வேண்டும் என்ற கருணை உள்ளத்தில் பிறந்தது திருக்குறள்.

இவ்வாறு நூலை வகுத்துக் கொண்டதில், ஆசிரியர் தனக்கே தான் சில கட்டுப் பாடுகளைச் செய்து கொள்கிறார். இளங்கோவின் அகவற்பாக்கள் போலவோ, கம்பனின் சந்த விருத்தங்கள் போலவோ, அப்பரின் திருத்தாண்டகங்கள் போலவோ, வள்ளலாரின் நெடில் ஆசிரியனின் கவித்துவ மேதைக்கும். கற்பனை ஆற்றலுக்ும் விரிந்து நெகிழ்ந்து இடங்கொடுப்பனவாயில்லை. அவ்வாறிருந்தும் தன் புலமை ஆற்றலுக்கே சிறை செய்யும் வகையில் சூத்திரச் செய்யுள் வடிவை வள்ளுவர் மேற்கொண்டாரென்றால், தனக்கென வாழாப் பிறர்க்குரியாளுகும் தியாக உணர்வு ஒன்றினாலேயே என்று கொள்ள வேண்டும்.

ஆயினும் வள்ளுவத்திலே எத்தனை கற்பனைகள், எத்தனை உவமைப் புதுமைகள், எத்தனைக் கவித்துவ இமய உச்சிகள்! "கருவி யாதாயினுமாகுக, கவித்துவம் ஆங்கே திளைக்க, நாட்டுதும் யாமோர் பாட்டுடைப் பெருநூல்"—என்று புலவர் பெருமக்கட்கு எடுத்துக் காட்டுவது போலிருக்கின்றது திருக்குறள் நூல். இது செயற்கருஞ் செயல், அதிமேதைப் புலவனுக்கே இயல்வது. உலக இலக்கியத்திலே காண்பதற்கரிய படைப்பு, ஒத்ததும் மிக்கதும் இல்லாதது.

வள்ளுவப் புலவனுக்கு கருத்தே முதல், அந்தக் கருத்து விரிந்து பரந்து ஆழ்ந்து நிலை நிற்பதற்கு ஏற்ற கருவி எதோ, அந்தக் கருவியினை அவன் கையாண்டான். அந்தக் கருவியிலும் அவன் கருத்துப் பெருக்கைப் புகுத்தினுன் என்றால். அவன் கவிதை மேதையாதலால், பொன் மலரை நாற்றம் பெறச் செய்த விஞ்சைப் புலவன் வள்ளுவன்.

வள்ளுவன் காதற்கதை எழுத வரவில்லை, இதிகாச புராண நூற்கள் செய்ய வரவில்லை, தோத்திரப் பனுவல்கள் பாடவரவில்லை, செறிந்த அரசியல், சமூகப் பொருளாதார விஞ்ஞான நூல் எழுத வந்தவன், வாழ்வுத்துறை அனைத்தையும் தழுவிய செம்பொருட் கருத்துக்களை எல்லோரும் எளிதில் தெரிந்து வாழ்வாங்கு வாழ்வதற்கு ஏற்றதொரு நூல் வகுக்க வந்தவன், சமயப் பூசல்களிலும். சாதிச் சண்டைகளிலும், செல்லரித்த மூடப் பழக்க வழக்கங்களிலும் மூழ்கிக் கிடந்த மக்கள் மனத்திலே ஒரு அறிவுப் புரட்சியை எழுப்ப வந்தவன், இதுவே, கவிதையின் கற்பனையிலும் கருத்தினுக்கு அவன் சிறப்பு ஈந்ததன் நுட்பமாகும்.

கருத்திலேயும் எத்தனை எத்தனை புரட்சி! அகம் புறம் என்று தொன்மையாக வந்த பாகுபாட்டை விடுத்து, அறம் பொருள் இன்பம் வீடு என்று வந்த மற்றொரு தொன்மைப் பாகுபாட்டையும் விடுத்து, அறம், பொருள், இன்பம் என்று முப்பாலாய் நூலை

வகுத்தான், அதிலும் இன்பம் என்னும் காமம் என்றானே! எத்துணைப் புரட்சி உட்கிடக்கை!

கடவுள் இல்லையென்று சொல்வது புரட்சிக் கருத்தாக மாட்டாது. வள்ளுவனுக்கு முன் பலர் சொல்லிப் போனதுண்டு. கடவுள் உண்டென்று சொல்வதும் அன்று மிகச் சாதாரணம். ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் பற்பல கடவுளரை வணங்கிய சமய போதங்கள் நிலவிய இந்த நாட்டில் ஒன்றே கடவுள் என்றதொரு பொதுமைக் கொள்கையை நிலை நாட்ட முயன்றது, புரட்சி தந்த துணிவன்றோ?

புரட்சிப் பொதுமையுள்ளத்தினன் ஆயினும் வள்ளுவன் தமிழன்பு குறைந்ததா? நூலின் எடுத்த எடுப்பிலே முதல் தொடரிலேயே அகரத்தை ஒலித்தானே! ஹீன்ஸ் டிட்டில் பாக் என்ற ஒரு ஜெர்மானிய அறிஞன் எழுதுகின்றான்: "கிருத்துவனாகிய எனக்கு, கடவுளின் முதன்மைக்குத் தமிழ் நெடுங்கணக்கின் அகரத்தை ஏன் திருவள்ளுவர் எடுத்துக் காட்ட வேண்டும் என்பது அவ்வளவாக விளங்கவில்லை' என்று சொல்லி, அடுத்து அவரே; "தமிழ் நெடுங்கணக்கு ஏதோ ஒரு வித அற்புத சக்தி உள்ளது போலும்" என்கிறார். அந்த அற்புத சக்தி வள்ளுவத் தமிழனுக்கன்றோ தெரியும்? அது தமிழ் மொழியின் பால் அவன் கொண்டுள்ள அன்பல்லாது வேறு யாது? தன்மொழியன்மை, அம் மொழியின் முதலெழுத்தோடு இறைக் கருத்தை இணைத்துச் சொல்வதினும், வேறு எந்த வகையில் பொதுநூற் செய்யவந்த புலவன் மிகைபடத் தெரிவிக்கக் கூடும்?

பிறப்பினால் உயர்வு தாழ்வுகள் கற்பித்து, ஒரு குலத்துக்கொரு நீதி நிலை நாட்டி நின்ற ஒரு காலத்தே, "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்" என்றும், 'பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக்கல்' என்றும், பலவகையாக ஒரு சமத்துவக் கொள்கையைத் தமிழகத்தே நிலை நாட்ட முயன்றது, சாமான்னியமான ஒரு கருத்துப் புரட்சியா?

கடவுளர்களுக்கே ஊனும் கள்ளும் படைத்து வெறியாட்டயர்ந்து வழிபாடுகள் நடத்திய ஒரு காலத்து, புலவரும் அரசரும் ஒருங்கே கலந்து மானிறைச்சியும் யவன மதுவும் பருகிக் களித்திருந்த ஒரு காலத்து, புலாலையும் கள்ளையும் புறக்கணிக்குமாறு ஆணையிட்டது எத்தனை புரட்சி!

உழவுத் தொழில் இழிந்தது என்று சாத்திரங்கள் முழங்கிய ஒரு காலத்து, உழவே உலகில் தலை. உழுவாரே உலகத்தார்க்கு அச்சாணி போன்றவர், உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்—என்றனை

வெல்லாம் எத்தனைப் புரட்சி கருத்துக்கள் !

கல்வி—சமூகத்தில் ஒரு சிலரே பெறுதற்குரியார், ஏனையோர் கேள்விக்கும் உரியல்லர் என்றிருந்த காலத்தே 'வாழும் உயிர்க்கெல்லாம் கல்வி கண்ணென்றதும் செல்வத்துளெல்லாம் தலையாய செல்வம் செவிச்செல்வம் என்றதும் எத்தனை விறிட்ட சிந்தனைகள் !

யாவுமே விதி என்று மாள்கிக் கிடந்த ஒரு மக்கள் கூட்டத்துக்கு உழைப்பால் ஊழையும் உப்பக்கம் காணலாகும் என்றது எவ்வளவு நெஞ்சுரமான கற்பனை ! வீடுபேறேயாவும் என்று பறை யறிந்து நின்ற ஒரு காலத்து. 'பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை' என்று எடுத்துக் காட்ட எவ்வளவு துணிவு வேண்டும் : "இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான் ; என்ற குறளிலேதான் எத்தனை வேகமான சமூகக் கண்டனக் கொள்கை அடங்கியுள்ளது !

யாவற்றிற்கும் மேலாக, 'நான் சொன்னேன் நீ கேள்' வேதம் சொன்னது. ஆகமம் சொன்னது, சாத்திரம் சொன்னது, ஆகவே நம்பு :—என்றெல்லாம் சொல்லாமல், 'உன் அறிவினைப்பயன்படுத்தி ஆராய்ந்து பார்' என்ற முறையில்,

எப்பொருள் எத்தன்மைத்
தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது
அறிவு

— என்றும்,

எப்பொருள் யார் யார்
வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது
அறிவு

—என்றும் சொல்லும் போது, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே தமிழுலகில் ஒரு விஞ்ஞான விண்ணொளி வள்ளுவனுகத் தோன்றியதுபோல் தெரியவில்லையா !

இத்தனையெல்லாம், அரசியல் சமூகப் பொருளாதாரப் புரட்சிக் கருத்துக்களைப் புரட்சி யாப்பில் வடித்து இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வள்ளுவன் வழங்கிச் சென்றான், ஆயினும் தமிழ் நாட்டில் புரட்சி ஏதும் எழவில்லையே ? ஏன் ? மற்றொரு தருணம் எழுதுகிறேன்.

—"முரசொலி"

# கருணை காட்ட வேண்டும்

எல்லோரும் நாட்டில் தோன்றியுள்ள அரசியல் கொந்தளிப்பைப் பற்றி வாய் ஓயாமல் பேசுகிறார்கள். பொருளாதார மாற்றங்களைப் பற்றிப் பெருமையாகப் பேசுகிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றி உரத்த குரலில் பேசுகிறார்கள். தொழிலாளர்களின் நிலையைப் பற்றி மேடை மேடையாகப் பேசுகிறார்கள். ஆனால், ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களின் பரிதாப நிலையைப் பற்றி யாருமே கவலைப் படுவதாகத் தெரியவில்லை !

காலமெல்லாம் சமூகத்திற்காக உழைத்து உழைத்து, உருக் குலைந்து போய், ஓய்வு பெற்று, தற்போது சர்க்கார் கொடுக்கும் பென்ஷன் போதாமல் திண்டாடும் வயோதிகர்களைப் பற்றிச் சிந்திப்பதற்குக் கூட இந்தச் சமூகத்திற்கு நேரம் இருப்பதாகத் தெரியவில்லை.

விலைவாசிகள் உயர்ந்து வரும் நிலையில், தங்கள் பென்ஷனையும் உயர்த்த வேண்டும் என்று கோரி இவர்கள் சிறிது காலமாக அரசிடம் முறையிட்டு வந்திருக்கிறார்கள். கடந்த ஜனவரி மாதம் மகாநாடு ஒன்று கூட்டித் தங்கள் குறைகளை எடுத்துக் கூறினார்கள். பின்னர் முதலமைச்சரிடமும் நேரில் சென்று தங்கள் கோரிக்கைகளைத் தெரிவித்திருக்கிறார்கள். ஒரு பலனும் ஏற்படாததால் இரண்டு வாரங்களுக்கு முன் தலைமைச் செயலகத்திற்கு ஊர்வலமாகச் சென்று, முதலமைச்சரை மீண்டும் சந்தித்து, தங்கள் கோரிக்கை மனுவைக் கொடுத்து விட்டு வந்திருக்கிறார்கள்.

அவர்கள் கேட்பதெல்லாம் இதுதான் : தற்போது 20 ரூபாயாக இருந்து வரும் குறைந்த அளவு பென்ஷனை 35 ரூபாயாக உயர்த்த வேண்டும். இலவச மருத்துவ உதவி அளிக்கப்பட வேண்டும். உயர்ந்து வரும் விலைவாசியை ஈடுசெய்ய, பென்ஷனில் பத்து சத விகிதத்தை பஞ்சப்படியாகத் தரவேண்டும். அது பத்து ரூபாய்க்குக் குறையாமல் இருக்க வேண்டும்.

இவையெல்லாம் நியாயமான கோரிக்கைகள் என்பதில் சந்தேகமில்லை. தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்த பிறரைப் போன்று பென்ஷன்தாரர்கள் ஆர்ப்பாட்டங்களோ, கிளர்ச்சிகளோ செய்யவில்லை. அவர்களால் அது முடியவும் முடியாது ! வாயில்லாப் பூச்சிகளைப் போன்ற இந்த வயோதிகர்களின் பிரச்னையை தமிழ்நாடு அரசு மனிதத் தன்மையோடு கவனிக்க வேண்டும். நன்றியுணர்வோடு இவர்களுக்கு உதவ முன் வரவேண்டும்.

முதலமைச்சர் கருணாநிதி இவர்களிடம் கருணை காட்டத் தயங்க மாட்டார் என்று நம்புகிறோம்.

—"ஆனந்த விகடன்" தலையங்கம்

# தெரியுமா ?

## [ தொகுப்பு: துரை. முருகேசன் ]

1. ஜெர்மனியில் நாளொன்றிற்கு 15 மிலியன் [15,000,000 மிலியன்] கோப்பை காபி உபயோகிக்கப்படுகிறது. காபி முதன் முதலாக எதியோப்பிய இடையன் மூலம் உலகிற்கு அறிமுகமாயிற்று. பதினேழாவது நூற்ருண்டில் காபியின் பயனை மக்கள் அறிய ஆரம்பித்தனர். 1740—ல் முதல் காஃபிச் செடி பிரேஜில் நாட்டில் பயிரிடப்பட்டது. ஜெர்மன் நாட்டிலிருந்து 1935-ல் 2,500 டன் காபி ஏற்றுமதி செய்யப்பட்டது. அது 1966-ல் 36,000 டன்னுக உயர்ந்தது.

2. இந்தியாவில் சுமார் 34 சிமெண்டுத் தொழிற்சாலைகள் உள்ளன. அவற்றில் 80 லட்சம் டன் சிமெண்ட் உற்பத்தியாவதாகத் தெரிகிறது.

3. அலுமினியத் தாதுப் பொருள்களுள் மிகவும் முக்கியமான தாதுப் பொருள் 'பாக்சைடு' நம் நாட்டில் 200 முதல் 300 லட்சம் டன் வரை இருப்பதாகவும், அவற்றிலிருந்து ஆண்டிற்கு 50,000 டன்கள் வீதம் நூறு ஆண்டுகளுக்கு அலுமினியம் தயாரிக்கலாம் என்றும் கூறுகின்றனர்.

4. உலகிலேயே மிக உயர்தரமான 'பாக்சைடு படிவங்கள்', கட்சு—சௌராஷ்டிரப் பகுதி எரிமலைப் பாறைகளில் சுமார் ஐந்நூறு லட்சம் டன்கள் இருப்பதாகத் தெரிகிறது.

5. முதன் முதல் காகிதத் தொழிற்சாலை 1832-ஆம் ஆண்டில் டாக்டர் கரே [Dr. Carey] என்பவரின் முயற்சியினுல் மேற்கு வங்காளத்தில் தோன்றியது.

6. நம் நாட்டில் சுமார் 130 [நூற்று முப்பது] கண்ணுடித் தொழிற்சாலைகள் உள்ளன. 1908-ல் முதன் முதலாகப் பம்பாயில் கண்ணுடித் தொழிற்சாலை ஆரம்பமாயிற்று.

7. கீழ் பவானி அணையின் நீளம் 28,842 அடி. உயரம் 140 அடி. கொள் அளவு. 3,280 கோடி கன அடி. தண்ணீர் பாயும் பரப்பளவு 2,07,600 ஏக்கர்.

8. அமராவதி அணையின் நீளம் 3,592 அடி. உயரம் 120 அடி. கொள் அளவு: 400 கோடி கன அடி. பாயும் பரப்பு: 53,500 ஏக்கர்.

# காது காப்பு

— டாக்டர் பி. டபிள்யு காம்ஸ்டாக், எம் டி. —

காது மூன்று பகுதிகளைக் கொண்டது. முதல் பகுதியில் வெளியில் இருக்கும் மடலும் துளையும் சேரும். துளை ஏறக்குறைய ஓர் அங்குலம் நீளம் இருக்கும். அதிலே பல நுண்ணிய சுரப்பிகள் இருக்கின்றன. அவற்றினின்று ஊறுவதே குறும்பி நீர். அது ஊற ஊற, தோல் செதிள்களோடு சேர்ந்து இறுகிப் போகும். அது செவி வளையை எப்பொழுதும் ஈரமாக வைத்துக் கொள்வது அல்லாமல், அதினுள்ளே பூச்சி பொட்டுகள் நுழையாமல் காக்கவும் செய்கிறது. சாதாரணமாக அதற்குக் கவனிப்பே தேவை இராது. ஆனால் அது மிகுதியாகச் சேர்ந்துவிட்டால், அதனால் காதில் குடைதலாகிலும் அடைப்பாகிலும் உண்டாகலாம். அப்பொழுது தக்க மருத்துவர்களிடம் காட்டி, அதை எடுத்துவிடுதல் அவசியம்.

துளை முடியும் இடத்திலே ஒரு சிறிய, சவ்வு இருக்கிறது. அது மத்தளத் தோலைப் போல மென்மையாகவும் வட்டமாகவும் இருக்கும். அதன் பெயர் பறை. காற்று அலைகள் வெளியில் இருந்து வந்து, அதன் மேல் மோதுவதால், அது அதிர்ச்சி அடைகிறது. பறையினின்றே நடுக்காது துவங்குகிறது. இக்குழி அரை அங்குலம் நீளமும், ஓர் அங்குலத்தில் மூன்றில் ஒரு பங்கு உயரமும், ஐந்தில் ஒரு பங்கு குறுக்களவும் உள்ளது. அதில் இருப்பன மூன்று சிற்றெலும்புகள் தாம். அவை ஒன்றோடு ஒன்று தொடர்பாய், ஒரு பாலம் போல, அமைந்திருக்கின்றன. அவற்றில் ஒன்று சம்மட்டியைப் போலவும், வேறு ஒன்று பட்டடைக் கல்லைப் போலவும், இன்னொன்று குதிரை ஏறும் அங்க வடியைப் போலவும் உருவம் வாய்ந்தவை. அவற்றின் ஒரு தலைப்பு பறையிலும், மற்றது உள் காதிலும் தொடுத்திருக்கும். பறையினிடமிருந்து வரும் ஒலிகளை இவை ஏற்று, உள்ளே அனுப்புகின்றன.

இனி, நடுக் காதிலிருந்து முன் தொண்டைக்கு ஒரு குழல் போகிறது. அதன் பெயர் யூஸ்டேக்கியன் குழல். அது வழியாகவே தொண்டையிலிருந்து காற்று வருகிறது. செவிப்பறையின் வெளிப்புறத்தில் மட்டும் மாற்று அழுத்திக் கொண்டு இருந்தால், பறை நன்றாக அதிர முடியாது; அதில் வலியும் உண்டாகும். ஆகவே உள்ளுக்கும் காற்று கிடைக்குமாறு இவ் வழி அமைந்துள்ளது. இப்படிச் செவிக்கும் குரல்வளைக்கும் நேர்த் தொடர்பு இருப்பதனாலேயே சில சமயங்களில் மூக்கிலோ அல்

லது மார்பிலோ சனி பிடித்திருந்தால், அது காதினுள்ளும் பரவி மந்தத்தை உண்டுபண்ணுகிறது. கேள்விக் குழல் வீங்கி அடைத்துக் கொள்ளும் ; எலும்புகள் ஒன்றோடு ஒன்று ஒட்டிவிடும். பறையும் தடித்துவிடும். சலதோஷம் பிடித்திருப்பவர்களுக்குச் சில சமயம் காது நன்ருகக் கேளாத காரணம் உங்களுக்கு இப்போது புலப்படுகிறதா ? அடிக்கடி மூக்கு அடைத்துக் கொள்வதனுலும், அடிக்கடி தொண்டை நோய் உண்டாவதனுலும் கூட, நடுச் செவி அழன்று, கேள்வி மந்தப்படச் செய்யலாம். சிலருக்கு அடியோடு கெட்டுப் போதலும் உண்டு. இவ்விதம் ஏற்படும் செவிட்டை எளிதில் சீர்ப்படுத்தல் இயலாது. சலதோஷம் பிடிப்பதைச் சிலர் பெரிதாக எண்ணுவதில்லை. ஆனலும் அதனுல் எவ்வளவு அஞ்சத்தக்க விபத்து விளையலாம், பார்த்தீர்களா ?

காதின் மூன்ரும் பகுதி மண்டை அடியில் மூன்று சிறிய எலும்பு அறைகளால் ஆனது. அவற்றில் ஒன்று நத்தை ஓடு போன்று சுருண்டு வளைந்தும், நம் கண்டு விரல் நுனி அளவு பருமனுகவும் இருக்கும். மற்ற அறையும் அதே பருமன் தான். அதில் இருக்கும் ஊனீரிலே கேள்வி நரம்பின் முனைகள் படர்ந்து கிடக்கும். நாம் ஒசைகளைக் கேட்பதற்கு அவசியமாக வேண்டியது இந்த நரம்பே. இது எட்டாம் நரம்பு என்றும் சொல்லப்படும். இது மூளையில் துவங்கி, உட்காதுக்குள் வருகிறது. வெளிக் காதும் நடுக் காதும் ஒலி அனுப்பிகள் : கேள்வி நரம்பே கேட்டு உணர்த்துவது. இதை இன்னெரு விதமாகவும் சொல்லலாம். வெளியில் இருந்து வரும் ஓசைக்கு ஏற்றவாறு, பறை அதிரும், சம்மட்டி எலும்பு பட்டடைக் கல் எலும்பில் அடிக்கும், அங்கவடி எலும்பு இந்த ஓசையை அஞ்செவியினுள் செலுத்தும், கேள்வி நரம்பு அதை மூளைக்கு அனுப்பும். அங்கு அதற்கு ஏற்ற பொருள் கற்பிக்கப்படும்.

காது கேளாமற் செய்யும் சில நோய்களை மேலே குறிப்பிட்டேன் அல்லவா ? அவை தவிர, வேறு காரணங்களும் உள்ளன.

சிலருக்குப் பறை ஒட்டையாகி விடலாம். இதனுல் உண்டாகும் காது மந்தத்தை நலமாக்க முடியாது.

நடுக் காதில் சீழ் அல்லது துர் நீர்க்கசிவு உண்டாகியிருப்பதின் விளைவாக, செவிப் புலன் குறையலாம். விரைவில் மருத்துவம் செய்து கொண்டால், தீர்ந்துவிடும்.

நடுக் காதில் காற்று குறைவாக இருந்தாலும், செவிடாகலாம். இக் குறைபாடு சாதாரணமாக என்ன காரணத்தால் ஏற்படும், தெரியுமா? சலதோஷத்தால், அடி மூக்குச் சதை வளர்ச்சியும் மற்ருெரு காரணம்.

[45–ஆம் பக்கம் பார்க்க]

# இலவசக் கல்வியால் தரம் பாதிக்கப்படாமல் இருக்க சில யோசனைகள்

சென்னை ராஜ்யத்தில் இலவசக் கல்வி ஏற்பாடு அமலுக்கு வந்த பிறகு, பொதுவாகப் பள்ளிகளில் கல்வியின் தரம் குறைந்து விட்டிருப்பதாக ஆசிரியர்களும், தலைமையாசிரியர்களும் கருதுகின்றனர்.

30 வருஷ கால அனுபவம் உள்ள ஒரு தலைமை ஆசிரியர் பின் வருமாறு சொல்கிறார் :—

"இலவசக் கல்விக்கு முன்பு எனது பள்ளியில் வருஷந்தோறும் 80 சதவிகித மாணவர்கள் பரீட்சைகளில் தேறிவந்தனர். இப்போதோ 50 சதவிகிதம் பேர் தேறுவதேகூட அரிதாயிருக்கிறது. இத்தனைக்கும் அநேகமாக அதே ஆசிரியர்கள்தான் இன்னும் இருந்து வருகின்றனர்.

இதற்குக் காரணம் என்ன? சம்பளம் இல்லை என்பதால், எல்லாப் பிரிவினரிடமிருந்தும் மாணவர்கள் சேர ஆரம்பித்து விட்டார்கள். பொதுவாக இது மாணவர்களின் தரத்தைப் பாதிக்கிறது" என்கிறார் இந்தத் தலைமை ஆசிரியர்.

## எண்ணிக்கை அதிகரிப்பு

எஸ். எஸ் எல். ஸி. வரை இலவசக் கல்வி ஏற்பட்ட பிறகு, படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது என்று அதிகாரவட்டாரங்கள் கூறுகின்றன. *1960—61-இல் 2·63* லட்சம் பேர்தான் ஹைஸ்கூல்களில் சேர்ந்திருந்தார்கள். ஆனால் 1965—66-இலோ 5·57 லட்சம் பேர் சேர்ந்திருக்கின்றனர்.

## பெற்றோர் அசிரத்தை

தரக் குறைவுக்கு பெற்றோர்களின் அசிரத்தையும் ஒரு காரணம் என்று ஆசிரியர்களும் தலைமையாசிரியர்களும் கருதுகின்றனர். குழந்தைகளின் படிப்பில் பெற்றோர்கள் சிரத்தை காட்டினால் நிச்சயமாக நிலைமை திருந்த இடமுண்டு, என்று ஒரு தலைமையாசிரியர் கூறுகிறார்.

பள்ளிக்கூட சம்பளம் கட்டும் போது பெற்றோர்களுக்கு இருந்த சிரத்தை இப்போது இல்லை என்கிறார் அவர்.

### சூழ்நிலை

இலவசக் கல்வி சலுகையைப் பயன்படுத்திக் கொண்டு படிக்க முன்வந்துள்ள மாணவர்கள் வசிக்கும் சூழ்நிலை, படிப்புக்கு உதவுவதாயில்லையென்று ஒரு கல்வித் துறை நிபுணர் கூறுகிறார். பள்ளிக்கூடத்தில் என்னதான் சொல்லிக் கொடுத்தாலும் வீட்டிலும் பையன் படித்தால்தானே பயன் இருக்கும்? வசதியுள்ள குடும்பங்களில் "டியூஷன்" வைக்கிறார்கள் அல்லது பெற்றோர்களாவது கவனித்துக் கொள்கிறார்கள்.

அப்படி இல்லாதவர்களுக்கு என்ன செய்வது என்று கேட்கிறார் இந்த நிபுணர்.

இதற்கு ஒரே பரிகாரம் தான் உண்டு. ஆங்காங்கு பொது நலத் தொண்டர்கள் முயற்சி எடுத்து, இம்மாதிரி குழந்தைகள் ஓரிடத்தில் கூடி, படித்தவர்களின் மேற்பார்வையில் படிக்க ஏற்பாடு செய்யலாம் என்று யோசனை கூறுகிறார் இவர்.

### இருவகைப் பள்ளிகள்

இருவகைப் பள்ளிகள் இருந்து வர அனுமதிக்கலாமென்பது மற்றொரு தலைமையாசிரியரின் கருத்து. இலவசப்பள்ளிகள் இருக்கும் அதே சமயத்தில், மற்றொரு புறத்தில் சம்பளம் வசூலிக்கும் பள்ளிகளையும் அனுமதிக்கலாம். வசதியுள்ளவர்கள் இந்தப் பள்ளிகளுக்குத் தங்கள் குழந்தைகளை அனுப்பலாம் என்கிறார் அவர்.

இம்மாதிரி ஏற்பாடு லண்டனில் இருக்கிறது. சம்பளம் கட்டக்கூடிய நிலைமையிலுள்ள பெற்றோர்கள் கூடி, சம்பளம் கட்ட வேண்டியதில்லை என்று சொல்வது என்ன சோஷலிஸம் என்று சில பெற்றோர் கேட்கிறார்கள்.

### மற்றொரு யோசனை

இலவசக் கல்வித் திட்டத்தில் ஒரு சிறிய மாறுதலைச் செய்யலாமென்றும் சம்பளம் கட்ட வேண்டியதில்லை என்பதற்குப் பதிலாக, மாதந் தோறும் சம்பளம் வசூலித்து விட்டு, வருஷ இறுதியில் பையனின் முன்னேற்றம் நன்றாயிருந்தால் அதைத் திருப்பித் தந்து விடலாமென்றும் மற்றொரு தலைமை ஆசிரியர் கூறுகிறார். அப்போதாவது பெற்றோர்களுக்குக் குழந்தைகள் படிப்பில் சிரத்தை தோன்றும் என்கிறார்.

### கட்டுப்பாடின்மை

இலவசக் கல்வி ஏற்பாடு அமலுக்கு வந்த பிறகு மாணவர்களிடை கட்டுப்பாடின்மை வளர்ந்து வந்திருப்பதாக ஆசிரியர்கள் கருதுகின்றனர். படிப்பில் அசிரத்தையும், பள்ளிகளுக்கு மட்டம் போவது அதிகரித்திருக்கிறது என்கிறார்கள்.

தவிர இப்போதெல்லாம் தாராளமாக "பாஸ்போட்டுவிட வேண்டியிருக்கிறது" என்று ஒரு தலைமை ஆசிரியர் கூறுகிறார். 7 முதல் 10 சதம் விகிதம் மாணவர்கள் வரை

தான் நிறுத்தி வைக்கப்படுவதாக வும், கண்டிப்பாயிருப்பதானுல் 50 சத விகிதம் பேரை நிறுத்தி வைக்க வேண்டியிருக்கு மென்றும், இதைக் கல்வி இலாகா அனுமதிப் பதில்லை யென்றும் அவர் கூறுகிருர்.

## ஆசிரியர்களும்

ஆசிரியர்களும் முன்போல முயற்சி எடுத்துக் கொண்டு சிரமப் பட்டு பாடம்சொல்லித்தருவதில்லை என்ற கருத்தும் சில தலைமையாசிரி யர்களிடம் காணப்படுகிறது. எல்லோருக்கும் பொதுவான சம்பள விகிதம் நிர்ணயித்திருப்பதும் ஆசிரி யர்களிடை திறமைசாலிகளுக்கு, "செலெக்ஷன் கிரேட்" சம்பள விகிதத்தை சர்க்கார் அனுமதிக் காததும் இதற்கு ஒரு காரணம் என்று ஒரு தலைமையாசிரியர் கூறு கிருர்.

## பராமரிப்பு மான்யம்

பள்ளிகளுக்கு சர்க்கார் அனு மதிக்கும் "பராமரிப்பு மானியம்" மிகக் குறைவாயிருப்பதும் தரக் குறைவுக்குக் காரணம் என்று கருதப்படுகிறது. தவிர ஆய்வுக் கூட சாதனங்களை வாங்குவதில் தலைமையாசிரியர்களுக்குப் போதிய சுதந்திரம் இல்லை என்று கூறப்படு கிறது.

—"தினமணி"

[42-ஆம் பக்கத் தொடர்ச்சி]

கொயினு முதலான நஞ்சு மருந்துகளை அளவு மீறி உட்கொள் வதனுலும், சிற்சில நோய்களினு லும் கேள்வி நரம்பே அழிந்து போகலாம்.

குழந்தைகள் அறியாமையினு லும் விளையாட்டுப் போலவும் தங்கள் காதுகளில் சிறிய காசுகளை யாவது, விதைகளையாவது, சிலேட் டுக் குச்சிகளையாவது உட்செலுத் துகின்றனர். சில பொழுதுகளில் ஈ, பூச்சி, எறும்பு அவைகளில் புகுந்து கொள்ளுதலும் உண்டு. அவைகளை மிகவும் பதனமாய் எடுக்க வேண்டும். அல்லது அப் பொருட்கள் உள்ளே தள்ளப் பட்டு, சவ்வைக் கிழித்துவிடலாம். காதில் உள்ள பூச்சியை வெளியேற் றுவதற்கு தண்ணீரையாவது சிறிது சூடானஎண்ணெயையாவதுஊற்ற வேண்டும்.

ஒருகாலும் குழந்தைகளின் காதைப் பிடித்து இழுக்கவோ முறுக்கவோ, அல்லது அதில் அறையவோ கூடாது.

பிறர் காதில் இரைந்து பேசல் ஆகாது.

நீரில் மூழ்கிக் குளிக்கும் வேளை களில் காதில் கெட்டியாகப் பஞ்சு அடைத்துக் கொள்ளுதல் நலம்.

காதில் உள்ள மயிர்கள் உபயோ கம் உள்ளவை. பூச்சியும் தூசியும் நுழையாமல் அவை தடுக்கின்றன. அவற்றை வெட்டிவிடல் ஆகாது.

—"நல்வழி"

# கல்வித்துறைச் செய்திகள்

## கல்வி ஆண்டின் இடையில் ஆசிரியர்கள் ரிடையர் ஆக வேண்டியதில்லை

ஆரம்ப, உயர்தர ஆரம்பப்பள்ளிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்கள் கல்வி ஆண்டின் இடையில் ரிடையர் ஆகவேண்டியதில்லை. என்று அரசாங்கம் ஆலோசனை கூறி இருக்கிறது.

கல்வி ஆண்டின் இடையில் ஆசிரியர்கள் ரிடையர் ஆக வேண்டிய காலம் வந்தாலும், அந்த ஆண்டு முடிவுவரை அவர்கள் வேலை செய்ய உடல்நிலை இடமளித்தால். தொடர்ந்து வேலை செய்வதற்கு அரசாங்கம் அனுமதி அளித்திருக்கிறது.

சமீபத்தில் நடந்த கிழக்கு கோயம்புத்தூர் வளர்ச்சி சபைக் கூட்டத்தில் இந்தத் தகவல் வெளிப்பட்டிருக்கிறது,

## எஞ்சி, டிப்ளோமா பரீட்சை தனியாகப் படித்து எழுதலாம் தமிழ்நாடு அரசு உத்தரவு

எஞ்சினியரிங். டிப்ளமோ பரீட்சைகளைத் தனியாகப் படித்துஎழுதலாம். இதற்கான உத்தரவை தமிழ் நாடு அரசு பிறப்பித்துள்ளது.

ஆந்திர பிரதேச தொழில் நுட்பக் கல்வி போர்டு அளிக்கும் எஞ்சினியரிங் படிப்பு டிப்ளமோக்களுக்கும் தமிழ்நாடு அரசு அங்கீகாரம் அளித்துள்ளது.

அதில் இந்திய தொழில் நுட்ப கல்வி பரீட்சைகள் குழு சிபாரிசுகளுக்கிணங்க, எஞ்சினியரிங் டிப்ளோமா பரீட்சைகளைத் தனிப்பட்டவர்கள் படித்து எழுதுவதற்கு அனுமதிப்பதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதற்குச் சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு தனியாக, அப்பரீட்சைகளுக்கு ஆஜராவோர் எஞ்சினியரிங் தொழில்நுட்பத் துறைகளில் குறிப்பிட்ட கால செயல்முறை அனுபவம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

பட்டதாரிகளாக இருந்தால், பட்டம் பெற்ற பிறகு குறைந்த பட்சம் 5 ஆண்டு அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும்.

இன்டர்மீடியட், பியுஸி; எஸ். எஸ். எல். ஸி. அல்லது அதற்குச் சமமான பரிட்சைகளை பாஸ்செய்தவர்களாக இருந்தால், இப்பரீட்சைகளை பாஸ் செய்த பிறகு செயல்முறை அனுபவகாலம் குறைந்த பட்சம் 7ஆண்டுகளாவது இருக்க வேண்டும். ஜூனியர் டெக்னிக்கல் பள்ளி படிப்பு பரீட்சை பாஸ் செய்தவர்கள் விஷயத்தில்அனுபவ காலம் குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் அவசியம்.

எஸ்.எஸ்.எல்.ஸி. பாஸ் செய்தவர்கள், பூர்த்தி செய்யாதவர்கள் மற்றும் குறைந்தபட்ச கல்வி யோக்கியதாம்சம் இல்லாதவர்கள் விஷயத்தில் செயல்முறை அனுபவ காலம் குறைந்தபட்சம் 10 ஆண்டுகளாவதுவேண்டும்.

*தமிழ் நாட்டில்*

## புகுமுக வகுப்பில் தமிழுக்கு முதலிடம்

*சென்னை சர்வகலாசாலை*

*அகாடெமிக் கவுன்சில் முடிவு*

தமிழ் நாட்டில் இனி கல்லூரி புகுமுக வகுப்பில் தமிழ் முதல் பாகம் என்றும், ஆங்கிலம் இரண்டாம் பாகம் என்றும் அழைக்கப்படும்.

தமிழ்நாடு அரசாங்கம் இது சம்பந்தமாகத் தெரிவித்த ஆலோசனையை உள்ளடக்கிய திருத்திய விதிக்கு சென்னைப் பல்கலைக்கழகத்தின் அகாடமிக் கவுன்சில் ஆதரவு தெரிவித்தது.

பல்கலைக் கழகத் துணை வேந்தர் என். டி. சுந்தரவடிவேலு தலைமை வகித்தார். பல்கலைக்கழக சிண்டிகேட் ஏற்கெனவே அரசாங்க யோசனையை ஏற்றுக் கொண்டிருக்கிறது.

திருத்தப்பட்ட விதி, நடப்பு கல்வி ஆண்டிலிருந்து அமலுக்கு வருகிறது.

(இதுவரையில் ஆங்கிலம் முதல் பாகம் என்றும், தமிழ் இரண்டாம் பாகம் என்றும் அழைக்கப்பட்டு வந்தன.)

இதே மாதிரியான மாறுதல் பி. ஏ. பட்டப் படிப்பு அளவிலும் நிச்சயமாகத் தொடரும் என்று துணைவேந்தர் ஓர் உறுப்பினரின் பேச்சு பற்றிக் குறிப்பிடுகையில் தெரிவித்தார்.

இம்முடிவு ஆழமான விவாதங்களுக்குப் பிறகே மேற்கொள்ளப் பட்டதாக அவர் கூறினர்.

ஓரியண்டல் பட்டப் படிப்பில் தமிழை எடுத்துக்கொண்டு தேறுயவர்களுக்கு அளிக்கும் பட்டம் வித்துவான் என்றிருப்பதைப் புலவர் என்று மாற்றவேண்டும் என்றும் செனட்டுக்கு அகாடெமிக் கவுன்சில் சிபார்சு செய்தது.

பட்டத்தை மாற்றுவது சம்பந்தமாக அரசின் யோசனையை சிண்டிகேட் ஏற்கெனவே ஒப்புக் கொண்டிருக்கிறது.

## 'பரீட்சை முறையில் சீர்திருத்தம்தேவை'

*துணைவேந்தர் கருத்து*

"மாணவர்களை அவர்கள் இறுதி வருடப் பரீட்சையில் காட்டியுள்ள திறனை மாத்திரம் வைத்துக் கொண்டு மேல் வகுப்புகளுக்கு அனுப்பும் இப்போதுள்ள முறை விரும்பத் தக்கதல்ல. வருடம் முழுவதும் மொத்தத்தில் அவர்கள் காட்டும் திறனை மதிப்பிடும் வகையில் பரீட்சை முறையைச் சீர்திருத்தம் செய்ய வேண்டும்" என்று சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் திரு. என். டி. சுந்தரவடிவேலு இன்று கூறினர்.

பத்மா சேஷாத்ரி பாலபவன் மெட்ரிகுலேஷன் பள்ளியின் 12 வது நூற்றாண்டு விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசியபோது திரு. சுந்தரவடிவேலு மேற்கூறிய வாறு கருத்துத் தெரிவித்தார். இறுதி வருடப் பரீட்சையில் பெற்றுள்ள மதிப்பு எண்களை மாத்திரம் கவனித்து மாணவர்களின் 'தலைவிதியை'த் தீர்மானிப்பது 'சூதாட்டமும்' மாணவர்களுக்கு இழைக்கப்படும் அநீதியுமாகும் என்று அவர் கூறினார்.

மாணவர்களின் எல்லாத்திறன்களுக்கும் முழு வளர்ச்சி ஏற்படும் முறையில் கல்வி முறை அமைந்திருக்க வேண்டும் என்றும், பல பள்ளிகளில் விவாதம், நாடகம் போன்ற மாணவர்களின் பலவிதமான நடவடிக்கைகளுக்கு வசதிகள் இல்லாமல் இருப்பது வருந்தத் தக்கது என்றும் திரு. சுந்தர வடிவேலு கூறினார். இந்த நடவடிக்கைகளும் சேர்ந்தால்தான் சீரான கல்விமுறை உருவாக முடியும் என்றார்.

படிப்பில் ஏதேனும் சிறிது குறை இருப்பினும், விவாதத் திறமையும், விளையாட்டுத் திறனும் அதை ஈடு செய்வதாக இருக்க வேண்டும் என்று திரு. சுந்தர வடிவேலு கூறினார்.

## தனியார் பள்ளிகள் சம்மேளனம்

சென்னையில் தனியார் பள்ளிகள் சம்மேளனமொன்று அமைக்கப் பட்டுள்ளது. தமிழ் நாட்டில் அங்கீகரிக்கப் படாத பள்ளிகள் எனக் கூறப்படும் 500க்கும் அதிகமாக உள்ள தனியார் பள்ளி நிர்வாகங்களின் நலன்களை கவனிப்பதற்காக இந்த ஏற்பாடு.

சென்னையில் மட்டும் சுமார் 200 தனியார் பள்ளிகள் உள்ளன. இப்பள்ளிகளில் 1-வது ஸ்டாண்டர்ட் முதல் 5வது ஸ்டாண்டர் வரை ஆங்கிலத்தை பயிற்சி மொழியாகக் கொண்டு பாடங்கள் போதிக்கப் படுகின்றன. இப்பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளிடம் பள்ளி நிர்வாகங்கள் கட்டணம் வசூலிக்கின்றன. சர்க்காரின் இலவசக்கல்வி கொள்கையின்கீழ் வரவில்லை. இப்பள்ளிகளில் படிக்கும் குழந்தைகள் 5—வது ஸ்டாண்டர்ட் பாஸ் செய்த பிறகு அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் 6வது ஸ்டாண்டர்டில் சேர முயலும்போது தனியார் பள்ளி நிர்வாகங்களுக்கு சில கஷ்டங்கள் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது.

தனியார் பள்ளிகள் குழந்தைகளுக்குச் சிறந்த முறையில் கல்வி போதிப்பதால் இப்பள்ளிகளில் பாஸ் செய்யும் குழந்தைகளுக்கு தகுதியைக்கொண்டு அங்கீகரிக்கப் பட்ட பள்ளிகளில் அட்மிஷன் தரப்பட வேண்டுமென அப்பள்ளி நிர்வாகிகள் கூறுகின்றனர்.

## 3–வது உலகத் தமிழ் மகாநாடு பாரிஸில் 1970

### ஜூலையில் நடக்கும்

மூன்றாவது உலகத் தமிழ் மாநாடு 1970

ஆம் ஆண்டு ஜூலையில் 15 முதல் 18-ம் தேதிவரை பிரான்ஸ் தலை நகரான பாரிஸ் மாநகரில் நடை பெறும் என்று பேராசிரியர் ஜீன் பில்லியோசா அறிவித்தார். இம் மாநாட்டில் உலகெங்கிலு முள்ள 100 தமிழ் அறிஞர்களும், 200 பார்வையாளர்களும் கலந்து கொள்ளக்கூடும் என்றும் அவர் கூறினார். புதுவையிலுள்ள இந் திய இயல் பிரெஞ்சுக்கழக இயக்கு நரும், பாரிஸ் கல்லூரி பேராசிரியரு மான பில்லியோசா சென்னையில் சர்வதேச தமிழ் ஆராய்ச்சிக் கழகப் பொதுச் செயலாளர்களைச் சந்தித்த பின் இதனை அறிவித்தார். இக் கழகம் 1964—ல் டில்லியில் நிறுவப் பட்டது.

1966—ல் கோலாலம்பூரில் முத லாவது உலகத் தமிழ் மாநாடும் 1968-ல் சென்னையில் 2—வது உலகத் தமிழ் மாநாடும் நடை பெற்றன.

பாரிஸில் நடக்கவிருக்கும்3-வது மாநாட்டில் இலக்கண அடிப் படையில் சங்கஇலக்கிய வரலாறு, தற்கால தமிழ் இலக்கியம், தமிழர் குடியேற்ற வரலாறு, தமிழும் சமஸ்கிருதமும், தமிழ்நாட்டின் தொடர்புகளும் இந்தியப்பண்பாட் டின் விரிவும் போன்ற பொருள் குறித்து ஆராய்ச்சிக் கட்டுரைகள் அளிக்கப்படும்.

### ஹைகோர்ட் தீர்ப்பு

## தனியார் பள்ளியை மூடுவதற்கு அரசுக்கு

### அதிகாரம் இல்லை

தென்னாற்காடு ஜில்லாவில் ஐக்கம் பேட்டையில் உள்ள தாகூர் உயர்நிலைப் பள்ளியை 1966-67க்குப் பின் மூடுமாறு தமிழக சர்க்கார் உத்தர விட்டிருந்தது. இந்த உத்தரவை யொட்டி செகண்டரி கல்வி டைரக்டரும், விழுப்புரம் ஜில்லாக் கல்வி அதிகாரி யும் மேற்கொண்டு நடவடிக்கை எடுத்தனர். சர்க்கார் உத்தரவை ஆட்சேபித்து ரிட்மனு தாக்கல் செய்யப்பட்டது. ஹைக்கோர்ட் டில் நீதிபதி எம். எம். இஸ்மாயில் ரிட் மனுவை அனுமதித்து, சர்க் கார் உத்தரவை ரத்துசெய்தார்.

சர்க்கார் உதவி பெறும் அங்கீ கரிக்கப்பட்ட பள்ளிகள் சம்பந்த மாக உதவியை அல்லது அங்கீகா ரத்தை வாபஸ் பெற கல்வி அதி காரிகளுக்கு எத்தகைய அதிகாரங் கள் இருந்த போதிலும் சரி, சர்க் காரின் உதவியைப் பெறுவதாக நினைத்துக்கொண்டு ஒரு தனியார் பள்ளியை மூடுமாறு சர்க்கார் உத் தரவிட விதி அல்லது சட்டம் எதுவும் இல்லை என நீதிபதி அபிப்பி ராயப் பட்டார். சர்க்காருக்கு அதிகாரம் எதுவும் இல்லை என்பது ஒரு புற மிருக்க, சர்க்கார் இத் தகைய உத்தரவைப் பிறப்பிப்பது அரசியல் சட்டத்தில் உத்திரவாத

மளிக்கப்பட்டுள்ள ஒரு பிரஜை யின் ஜீவாதார உரிமைக்கு முர ணானது என்று நீதிபதி கூறினர். எனவே ரிட்மனுவை நீதிபதி அனு மதித்து சர்க்கார் உத்தரவையும், இதர அதிகாரிகளின் நடவடிக்கை களையும்ரத்துசெய்தார்.மனுதாரரின் பள்ளியை மூடுமாறு உத்தரவிட சர்க்காருக்கோ அன்றி கல்வி இலா காவின் இதர அதிகாரிகளுக்கோ அதிகாரமில்லை என்று நீதிபதி குறிப்பிட்டார்.

## விவசாயிகளுக்காக 500 சிறப்புக்கல்வி

*நிலையங்கள் திறக்கப்படும்*

விவசாயிகளுக்கு நவீன விவசாய உத்திகளைப் பற்றிய விஷய ஞானத்தை ஊட்ட பல்வேறு ஜில்லாக்களிலும் 500 விவசாயி களுக்கான விசேஷக் கல்வி நிலையங் கள் திறக்கப்படும்.

கிராமவாசிகளுக்குக் குறைந்த பட்ச கல்வி அறிவு அளிப்பது டன், நவீன சாகுபடி முறைகளைக் கையாளவும் சொல்லித் தர வேண்டும் என்ற நோக்கத்துடன் தமிழக அரசு அங்கிகரித்துள்ள திட்டத்தின் ஒரு அம்சம் இது.

மதுரை, புதுக்கோட்டை, செங்கல்பட்டு ஜில்லாக்களில் சமீ பத்தில் இம்மாதிரி 130 நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இது நான்கு மாதப் பயிற்சி வகுப்பு. இதில் முதியவர்களுக்கு எழுதப் படிக்கச் சொல்லித் தருவ துடன், நிலத்துக்குத் தேவையான உரங்களைக் கணக்கிடுவது, பலவித நமூனுக்களைப் பூர்த்தி செய்வது போன்ற கணக்குகளும் சொல்லித் தரப்படுகின்றன.

விவசாயிகளுக்குப் புரியும்படி சொல்லித்தர அதிகாரிகள் பள்ளி ஆசிரியர்களுக்குப் போதிய பயிற்சி அளித்து வருகிறுர்கள்.

ஏற்கனவே திறந்துள்ள நிலை யங்கள் நல்ல பலன் அளித்து வரு வதாக திரு. என்.டி. சுந்தர வடி வேலு திரு. எஸ் என். சொக்கலிங் கம் (பாடப் புத்தகங்களுக்கான விசேஷ அதிகாரி திரு.எம். பொன் னையா (முதியோர் கல்விக்கும் நூலகங்களுக்கும் பொறுப்பான விசேஷ அதிகாரி) ஆகிய நிபுணர் குழு திருப்தியடைந்துள்ளது.

விவசாயிகளுக்காகத் திறக்க உத்தேசித்திருக்கிற 500 கல்வி நிலையங்களும் பலனளிப்பதைப் பொறுத்து இந்தத் திட்டம் மேலும் விஸ்தரிக்கப்படும்,

## ஆசிரியர் கிளப்புகளை நிறுவவேண்டும்

*மத்ய மந்திரி ராவ் யோசனை*

பொழுது போக்கிற்காகவும், கலைநிகழ்ச்சிகளுக்காகவும் ஒவ் வொரு நகரிலும் பள்ளிகளையும், சர்வகலாசாலையையும் சேர்ந்த ஆசிரியர்களின் கிளப்புகளை நிறுவ வேண்டு என்று யூனியன் கல்வி மந்திரி டாக்டர். வி. கே. ஆர். வி. ராவ் யோசனை தெரிவித்தார்.

பிரைமரிப்பள்ளியிலிருந்து சர்வ கலாசாலே கட்டம் வரை உள்ள ஆசிரியர்கள் இந்த கிளப்புகளில் சேரலாம்.

சர்வகலாசாலே நூற்றுண்டு நினைவு அரங்கில் இன்று நடந்த ஆசிரியர் தினவிழாவில் மத்திய மந்திரி பேசினுர். பிரைமரி ஆசிரியர்களுக்கும் சர்வகலாசாலேப்பேராசிரியர்களுக்குமிடையே தொடர்பு இருந்து வருவதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினுர். இது பற்றி சர்வகலாசாலே மான்ய கமிஷனுடன் தாம் விவாதித்துள்ளதாகவும், ராஜ்ய கல்வி மந்திரிகளுடனும் விவாதிக்க தாம் உத்தேசித்துள்ளதாகவும் டாக்டர் ராவ் குறிப்பிட்டார்.

உதவி நிகழ்ச்சிகள் மூலம் டில்லியில் ஆசிரியர் கிளப் துவக்க தாம் முயற்சித்து வருவதாக அவர் தெரிவித்தார். இத்தகைய கிளப்கனே நிறுவ ஆசிரியர் நல நிதியிலிருந்து இணேமான்யம் தரப்படலாம் என்றுர்.

கொடைக்கானல் அல்லது உதகை போன்ற கோடை வாசஸ்தலத்தில்ஆசிரியர்களுக்காகச்சில ஓய்வு விடுதிகளேக்கட்ட வேண்டும் என்பது தமது மற்ரெருு கனவு என டாக்டர் ராவ் கூறினுர். இத்தகைய விடுதிகளில் சகல தரப்பு ஆசிரியர்களும் இருவாரகாலம் தங்கலாம் என்றுர்.

தனியார், சர்க்கார் துறை நிறுவனங்களில் உள்ள 160 லட்சம் ஊழியர்கள் தலா ஒரு ருபாய் நன்கொடையளித்தால் ஆசிரியர் தினத்தன்று ரூ. 160 லட்சம் எளிதாகக் கிடைத்துவிடும் என்று அவர் யோசனே தெரிவித்தார், நிதிக்கு ரூ. 5 கோடி சேர்க்க இதுவே வழி என்றுர்.

தமிழகக் கல்வி அமைச்சர் திரு. நெடுஞ்செழியன் தலைமைவகித்துப் பேசுகையில் கிராமப் பகுதிகளில் கல்வி மேலும் பரவுவதன் அவசியத்தை வலியுறுத்தினுர்.

முக்கிய பிரமுகர்களுக்கு மாலேகளுக்குப் பதில் புத்தகங்களே வழங்குமாறு கல்வி ஸ்தாபனங்களுக்கு அவர் வேண்டுகோள் விடுத்தார். இந்த யோசனேயை டாக்டர் ராவ் வரவேற்றுர்.

விழாவில் டாக்டர்ராவுக்கும் திரு. நெடுஞ்செழியனுக்கும் காந்திஜி பற்றிய நூல்கள் வழங்கப்பட்டன.

ஆசிரியர் நலநிதிக்கு ரூ. 20 லட்சம் தமிழ்நாடு வசூலித்துள்ளதாகப் பள்ளி கல்வி டைரக்டர் திரு. எஸ். வி. சிட்டிபாபு தெரிவித்தார். 2 ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைத்ததாகவும், மாதம் ரூ. 35 லிருந்து ரூ. 70 வரை 300 ஆசிரியர்களுக்கு உதவியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

—"தினமணி"

# அதிசயம்! ஆனால் உண்மை!

## சைக்கிளில் உலகப் பயணம்

புதுடில்லியைச் சேர்ந்த ரகுவீர் சிங் என்பவர் சைக்கிளில் உலகம் முழுவதும் ''சமாதான யாத்திரை'' கிளம்பியிருக்கிறார். காந்தி நூற்றாண்டு விழா வருடத்தையொட்டி அவர் இப்பயணத்தை மேற்கொண்டிருக்கிறார்.

அவர் டோக்கியோ வந்து சேர்ந்திருக்கிறார். தாம் இதுவரையில் இலங்கை, நேபாளம், மலாசியா, இந்தோனேசியா, தாய்லாந்து, கம்போடியா, லாவோஸ், வியட்நாம், கொரியா ஆகிய நாடுகளுக்குச்சென்றிருப்பதாக அவர் கூறினார்.

அவர் அடுத்த ஆண்டு அக்டோபரில் இந்தியா திரும்ப திட்டமிட்டிருக்கிறார்,

*　　*　　*

## பத்து வயது சிறுமி பிரசவம் : ஆண் குழந்தை பெற்றாள்

பத்து வயதுச் சிறுமி ஒருத்தி ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்திருக்கிறாள். அந்தக் குழந்தையின் எடை 5 ராத்தல் 10 அவுன்ஸ். அலெக்ஸாண்டிரியாவின் புறநகர்ப் பகுதியில் உள்ள ஆஸ்பத்திரியில் இந்த அதிசயப் பிரசவம் நடந்தது.

அந்தச் சிறுமி சாதாரணமுறையில் பிரசவித்தாள் என்றும் குழந்தை நலமாக இருக்கிறதென்றும் ஆஸ்பத்திரி அதிகாரி தெரிவித்தார்.

*　　*　　*

## கூவம் 'அழகு நதி' யாகும் உல்லாசப் படகுகள் செல்லும்

கூவம் நதி அபிவிருத்தி திட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு, ஜலண்டு மைதானத்திற்கு அருகில் கூவம் நதியில் உல்லாசப் படகுப் பிரயாணத்திற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று தெரிகிறது. இந்த ஏற்பாடு சென்னைநகர மக்களுக்குப் பொழுது போக்காக அமைவதுடன், யாத்திரிகர்கள் வருவதற்கும் ஊக்கம் அளிக்கும்.

எண்ணூர் அனல் மின்சக்தி நிலையத்திற்குஉபயோகிக்கப்படும் தண்ணீர், கூவம் ஆற்றில் விடப்படும். இதனால் கூவம் ஆற்றில் அசுத்தம் அகற்றப்படும். இந்தத் தண்ணீரைக் கொண்டு கூவம் ஆற்றைச் சுத்தம் செய்ய முடியும். இதன் மூலமாகப் படகுப் போக்கு வரத்திற்குப் போதுமான தண்ணீரும் கிடைக்கும்.'' என்று ஒரு அதிகாரி கூறினார். ஆற்றின் முகத்துவாரத்தில் ஒரு மதகு கட்டி தண்ணீர் மட்டத்தை ஒழுங்கு செய்ய முடியும். மதகு கட்டுவதற்கு

அடிக்கல் அமைக்கும் வேலை முடிந்து விட்டது. நேப்பியர் பாலத்திற்குக்கிழக் கேயிருந்துகடல் வரை. கூவம் ஆற்றில் ஒரு கால் வாய் தோண்டப்படும்.

இந்தத் திட்டத்தை நிறைவேற் றுவதற்கு மொத்தம் ரூ. 118 லட் சம் செலவாகும். மதகு, பாலத் துறை, கால்வாய் முதலியவை அமைக்கும் வேலை 1970 மத்திய வாக்கில் முடியும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

இரண்டாவது கட்டமாக 70 அடி அகலமும் 8 அடி ஆழமும் உள்ள கால்வாய் கூவம் ஆற்றில் சேத்துப்பட்டு ரயில்வே பாலம் வரை அமைக்கப்படும். பொது வாக இந்தக் கால்வாயில்தான் தண்ணீர் ஓடும் என்று எதிர்பார்க் கப்படுகிறது. இந்தக் கால்வாய்க்கு இரு பக்கங்களிலும் பூங்காக்கள், புல்வெளிகள், பாதைகள் அமைக் கப்படும்.

சேரி வாழ் மக்களைக் கூவம் ஆற்றின் இருகரைகளிலும் மாநில வீட்டு வசதி போர்டுகுடியிருத்தும்.

இந்தத் திட்டத்தை நிறைவேற் றினால், கூவம் ஒரு அழகான ஆறுகி விடும் என்று அதிகாரிகள் கருது கின்றனர்.

* * *

## சென்னையில் 43 சத விகிதத் தினர் குடிசை வாசிகள்

சென்னை நகரில் தற்போது சுமார் 29 லட்சம் பேர்கள் இருக்கி றார்கள். இவர்களில் கிட்டத்தட்ட 43 சதவிகிதம் பேர்கள் குடிசை களில் வாழ்பவர்கள் என்று அதி காரபூர்வமான புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

1961-ல் சென்னை நகரில் 17·29 லட்சம் மக்கள் இருந்தார்கள். அவர்களில் குடிசை வாசிகள் 4·62 லட்சம் பேர்கள். அதாவது மொத்தம் மக்கள் தொகையில் 23·8 சதவிகிதம்.

சென்ற எட்டு ஆண்டுகளில் குடிசைகளில் வாழ்பவர்களின் எண் ணிக்கை வேகமாக வளர்ந்து வந்துள்ளது. தற்போது சுமார் 9 லட்சம் பேர்கள் குடிசைகளில் வாழ்கிறார்கள்

1961-ல் சென்னை நகரில் 548 குடிசைப் பகுதிகள் இருந்தன. தற்போது 640 ஆக அவை அதி கரித்திருக்கின்றன.

சென்னை நகரில் குடிசைப் பகுதி கள் குறிப்பிட்ட வட்டாரத்தில் மட்டும் அடங்கியிருக்கவில்லை. நகரம் முழுவதும் பரவலாக உள் ளன. புதிது புதிதாகத் தொடர்ந்து ஏற்பட்டும் வருகின்றன.

தக்க நேரத்தில் உரிய நடவடிக் கைகளை எடுக்காவிட்டால் சென்னை மாநகரமே ஒரு பெரிய குடிசைப் பகுதியாக ஆகும் என்று சென்னை கலெக்டர் பத்ரிநாத் பத்திரிகை நிருபர்களிடம் கூறினர்.

* * *

## பிறந்த 24 மணி நேரத்தில் குழந்தைக்கு ஆபரேஷன்

பிறந்து 24 மணி நேரமே ஆன குழந்தைகளுக்கான ராயல் அலெக் சாண்ட்ரா ஆஸ்பத்திரியில் ஆபரே ஷன் செய்யப்பட்டது.

அக்குழந்தைக்குப் பிறவியில் இருந்த இருதய வால்வு நோயைக் குணப்படுத்தவே ஆப்ரேஷன் நடந்தது. அதைச் செய்யாமல் விட் டிருந்தால் அது ஆயுள் பூராவும் நீல நிறம் கொண்டதாக இருந் திருக்கும்.

சீனியர் சர்ஜன் ஒருவர் சொன் னது :—இவ்விதக் கோளாறு கொண்ட குழந்தைகளுக்கு, பச்சி ளம் வயதில் ஆபரேஷன் நடத்து வதற்கான முறை சில மாதங் களுக்கு முன்னர்தான் உருவாக் கப்பட்டது.

* * *

## செவ்வாய்க் கிரகத்தில் உயிரி னம் இருக்கிறதா ?

*"மாரினர்" கலங்களின் தகவல் பற்றி இருவிதக் கருத்துக்கள்*

செவ்வாய்க் கிரகத்தில் உயிரினம் இருக்கக்கூடும் என்பதற்கான ஆதாரத்தை இன்று தாம் கண்ட றிந்ததாக யு. எஸ். விண்வெளி ரசா யன ஆராய்ச்சி நிபுணர் டாக்டர் ஜார்ஜ் பிமெண்டல் இன்று தெரி வித்தார். அப்படி உயிரினம் இருந் தாலும் அவை நுண்ணுயிர்களாகத் தான் இருக்குமே ஒழிய, பெரிய ஜந்துக்கள் எதுவுமிராது என்று அவரது சகாக்கள் எச்சரித்தனர்.

செவ்வாய்க் கிரகத்தில் தென் துருவத்தின் வாயு மண்டலத்தில் "மெதேன்" வாயு "அமோனியா" வாயு இருப்பதாக டாக்டர் பிமெ ண்டல் கூறினார். சென்ற புத னன்று தென் துருவ முகட்டுக்கு மேல் சுமார் 2000 மைல் தொலை வில் பறந்த "மாரினர்-7" கப்பல் இந்த வாயுக்கள் இருப்பதைக் கண்டு பிடித்தன.

உலகில் உயிரினத் தோற்றத்து டன் சம்பந்தப்பட்டவை இந்த இரு வாயுக்களும் ; எனவே செவ் வாய் கிரகத்திலும் இவை காணப் படுவது மிகவும் ரசமான தகவலா கும் என்று அவர் கூறினர். செவ் வாயிலும் இந்த வாயுக்கள் காணப் படுவதைப் பார்த்தால், இவை உயிரினங்களிலிருந்துதோன்றியவை என்று யூகிக்கலாம் என்ருர் டாக் டர் பிமெண்டல். எனவே இங்கு உயிரின வளர்ச்சியின் ஆரம்ப கட் டம் இருந்து வருவதாகக் கருத லாம் என்ருர்.

ஆனல் இந்தப் பேட்டியில் கலந்து கொண்ட மற்ருெரு தொழில் நுட்ப நிபுணரான நார் மன் ஹாரோவிட்ஸ் இவ்விரு வகை வாயுக்களும், உயிரினங்கள் மூல மாகவும் உற்பத்தியாகலாம் ; உயி ரினங்கள் சம்பந்தப்படாமலும் உற் பத்தியாகலாம் என்ருர். நமது பிரபஞ்சத்தில் (சூரிய குடும்ப கிர கங்களில்) இவை சர்வசாதாரண

மாகக் காணப்படும் வாயுக்களா கும் என்றார் அவர்.

உதாரணமாக எரிமலைகளிலிருந்து இந்த வாயுக்கள் கசியலாம் என் றார்.

" மாரினர்-6 " " மாரினர்-7 " ஆகிய விண்வெளிக் கப்பல்கள் அனுப்பிய தகவல்களைக்கொண்டு பார்த்தால், செவ்வாய் கிரகமானது சூரியனின் ' அக்ட்ராவயலெட் " கதிர் வீச்சின் காரணமாக உயிரினங் கள் வாழ்வதற்கு லாயக்கற்ற இட மெனத்தோன்றுகிறது என்றார் அவர்.

அங்கே விண் வெளி உயிரினம் எதுவும் நிச்சயமாக வாழமுடியாது என்றார். அப்படி ஏதாவது இருக் கும் பட்சத்தில், நுண்ணுயிர்களா கத்தான் இருக்க முடியும் என்றார்.

ரசாயன நிபுணர் டாக்டர் பிமெ ண்டல் இக் கருத்தை ஏற்கவில்லை. செவ்வாயின் தென் துருவ முகட் டுக்கு மேல் குறைந்த கரியமில வாயு படிந்து இருப்பதாகவும், சூரி யனின் "அல்ட்ரா வயலெட் கதிர் வீச்சிலிருந்து " அது பாது காப்பு அளிப்பதாகவும் அவர் கூறினார். செவ்வாயின் துருவ முகட்டில் தண்ணீர் உறைந்து இருப்பதாக அவர் திட்டவட்டமாகக் கூறு கிறார்.

ஆனால் செவ்வாய் கிரகத்தில் காணப்படும் தட்ப வெட்ப நிலை களைக் குறித்து ஆராய்ந்து வரும் டாக்டர் ஜெர்ரி நியூபாயர் இதை மறுக்கிறார். மாரினர் விண் வெளிக் கப்பல்கள் அனுப்பி வைத்துள்ள வெப்ப தட்ப தகவல்களைக் கொண்டு பார்த்தால் துருவமுகட் டில் காணப்படும் பனிக் கட்டி தண்ணீர் உறைந்து பனிக்கட்டி யானதாக இருக்க முடியாது என் கிறார். கரியமில வாயு உறைந்து பனிக்கட்டியானதாகத்தான் இருக் கும் என்கிறார். ஆனால் தமக்குக் கிடைத்த வெப்ப தட்ப தகவல் கள் துல்லியமானதாயில்லாமல் 10 டிகிரி குறைவானதாக . இருக்கு மாகில் இந்தக் கருத்தை மாற்றிக் கொள்ள நேரிடலாமென்கிறார்.

ஒரு கிரகத்திலிருந்து 2000மைல் தொலைவில் பறக்கும் ஒரு கப்பல் அனுப்பும் தகவல்களைக் கொண்டு, அந்தக் கிரகத்தில் உயிரினம் இருக் கிறதா ,இல்லையா என்பதை திட்ட வட்டமாகச் சொல்லிவிட முடி யாது என்று ஹாரோவிட்ஸ் என்ற விஞ்ஞானி கூறுகிறார்.

1973-ம் வருஷத்தில் ஆளில்லா விண் வெளிக் கப்பலை இறக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள் அல்லவா? அதை இறக்கிய பிறகு தான் எதையும் நிச்சயமாகச் சொல்ல முடியுமென்பது இவர் கருத்து.

—" தினமணி

# தமிழில் அச்சேறிய முதல் புத்தகங்கள்

— பரதிபா —

✲

இந்திய மொழிகளிலேயே தமிழில்தான் முதன் முதலாகப் புத்தகங்கள் அச்சிடப்பட்டன. அதற்கான பெருமை கிறிஸ்துவ மிஷனரிகளேயே சேரும். பதினுருவது நூற்ருண்டிலேயே தமிழில் பல புத்தகங்கள் அச்சிடப்பட்டுள்ளன என்பதற்கான சரித்திரச் சான்றுகள் உள்ளன. ஆனுல் அவை போர்ச்சுகலிலும் ரோமிலுமுள்ள நூல் நிலையங்களில் மறைந்து கிடக்கின்றன; இரண்டொன்று வெளிப்பட்டிருக்கின்றன வென்று இவை சம்மந்தமாக ஆராய்ந்த டாக்டர் ஸேவியர் தனிநாயகம் ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிருர்.

1556-ஆம் ஆண்டில் ஜான்பஸ்டமாண்டே என்கிற பாதிரியார் ஓர் அச்சு இயந்திரத்துடன் கோவாவில் வந்திறங்கினர். அவர் வந்த இரண்டொரு மாதங்களிலேயே அச்சிடும் வேலை துவக்கப்பட்டு விட்டது.

கோவாவில் அச்சகம் ஏற்பட்டதேயொழிய கொச்சியிலுள்ள அம்பலக்காட்டில்தான் தமிழிலும் மலையாளத்திலும் முதன் முதலாகப் புத்தகங்கள் அச்சிடப்பட்டன. தமிழ், மலையாள எழுத்துக்கள் எல்லாவற்றையுமே "மலபார் அச்சு" (டைப்) என்றே அப்போது அழைத்தார்கள். 1577 இல் ஜோன்ஸ் கான்ஸல்வஸ் என்பவர் மரத்தில் அச்சுகளை வெட்டி அச்சடிக்கும் வழியைக் கண்டு பிடித்தார். அம்பலக் காட்டில் அச்சான புத்தகம் ரோம் நூலகத்தில் இருக்கிறது என்பதுடன் மட்டுமல்ல; அம்பலக்காட்டி லிருந்து தயாரான புத்தகங்களின் பட்டியல் ஒன்றை பாலினஸ் என்ற பாதிரி தயாரித்தும் இருக்கிருர்.

1679-இல் இக்னேஷியஸ் அய்ச்சாமணி என்ற தமிழ் போர்த்துக்கீஸிய அகராதிக்கான அச்சுகளை மரத்திலேயே தயாரித்துக் கொடுத்திருக்கிருர். அச்சு வார்க்கும் முறை அப்போது இந் நாட்டில் இல்லாததால் ஹாலந்திலுள்ள ஆம்ஸ்டர்டாம் நகரில் அச்சு வார்க்கப்பட்டு, இங்குக் கொண்டுவந்து அச்சிடப்பட்டதாகத் தெரியவருகிறது. அப்போது அச்சிடப்பட்ட தமிழ் சுத்தமான தமிழ் என்று சொல்ல முடியாது.

டேனிஷ் பாதிரியார்கள் 1706 இல் இந்தியாவிற்கு வந்த பின் அச்சுத் தொழிலில் புதுத்திருப்பம் ஏற்பட்டது. பாதிரி ஸிகென்பால்க் என்பவர் தலைமையில் தரங்கம்பாடியில் வந்து சேர்ந்த பாதிரிகள் தமிழகத்தில் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படிக்கும் மாணவர்களுடன் கூட இருந்து, தரையில்

—பரப்பிய மணலில்—எழுதிய தமிழ் எழுத்துக்களைக் கற்றார்கள். ஸிகென்பால்க் பைபிள் நூலின் புதிய ஏற்பாட்டைத் தமிழில் மொழிபெயர்த்தார். பின்னர் இது புத்தகமாக வெளியிடப்பட்டது.

## தரங்கம்பாடியில் தமிழ்ப் புத்தகங்கள்

1711-இல் லண்டனிலுள்ள கிறிஸ்துவ மதப் பிரசார சங்கம் நவீன அச்சு சாதனங்களைத் தரங்கம்பாடிக்கு அனுப்பி வைத்தது. அந்தச் சாதனங்கள் வந்த கப்பலைப் பிரெஞ்சுக்காரர்கள் வழியில் பிடித்துக் கொண்டார்கள். அந்த அச்சு இயந்திரத்தில் அநேக தமிழ்ப் புத்தகங்கள் அச்சிடப்பட்டன.

தமிழில் அதுவரை அச்சிடப்பட்டவை மணிப்பிரவாள நடையிலும், கல்வெட்டுகளிலுள்ளது போன்ற முறையிலுமே இருந்தன. முழுவதும் தமிழ் எழுத்துக்கள் கொண்ட முதல் புத்தகம் "அபாஸில்ஸ் கிரீடு" Apostles Creed என்பதாகும். அட்டையில் ஆங்கிலத்தில் தலைப்பைக்கொண்டே அப் புத்தகம் வெளி வந்தது.

தமிழ் எழுத்துக்கள் கொட்டையாக இருந்ததால், சிறு எழுத்துக்களைத் தயாரிக்கும் முறையை ஆட்லெர் என்பவர் கண்டு பிடித்தார். பொறையாற்றில் ஒரு காகிதத் தயாரிப்பு ஆலையையும் அவர் ஏற்படுத்தினார். பாதிரி ஸிகென்பாலக் பைபிளின் பழைய ஏற்பாட்டையும் ஐந்து தொகுதிகளாகத் தமிழில் வெளியிட்டார். சென்னை கிறிஸ்துவ பைபிள் சொஸைட்டி யாரிடம் அப் புத்தகங்கள் இன்னும் இருக்கின்றன.

தமிழ் எழுத்துக்களைச் சிறிது சாய்வாக எழுதும் முறையை அச்சில் கையாண்டவர்கள் கொழும்புவிள்ள டச்சு கிழக்கிந்திய கம்பெனியின் அச்சுக்கூடத்தினர். 1748-இல் அச்சான ஒரு புத்தகம் மிக்க வேலைத் திறனுடையதாக இருந்ததற்கு, அந்த அச்சுக்கூடத்தின் திறமையே காரணம்.

## ஸ்ட்ரெய்ட் பாதிரியார்

ஸ்ட்ரெய்ட் (Streit) என்ற பாதிரியார் பாரிஸிலுள்ள ஸார்போன் (Sorbonne) பல்கலைக் கழக நூலகத்திலிருந்து 'கிறிஸ்தியானி வணக்கம்" என்ற தமிழ் நூல் ஒன்றைக் கண்டுபிடித்தார். புன்னைக்காயலில் பல ஆண்டுகள் வசித்தஹென்றி ஹென்ரீக் (Henry Henriquez) என்பவரால் அது எழுதப்பட்டது. தமிழில் நன்றாகப் பேசி எழுதும் திறமை பெற்ற முதல் ஐரோப்பியர் அவர் எனலாம். புனித பிரான்ஸிஸ்ஸேவியரும் ஓரளவு தமிழ் கற்றிருந்ததாகத் தனிநாயகம் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

மன்னாரில் வசித்த ஹென்ரீக் பாதிரியார் தம் கீழ் உள்ள பாதிரிகள் எல்லாரையுமே தமிழில்தான் பேச வேண்டும் என்று கட்டாயப் படுத்தினார். மன்னாரில் "தமிழ் யூனிவர்ஸிடி காலேஜ்" என்ற ஒரு ஸ்தாபனத்தையும் ஸ்தாபிக்க

அவர் முயன்றார். ஆனால் அவர் புன்னைக்காயலுக்கு வந்து தங்கும்படி நேரவே, அந்தஸ்தாபனத்தைப் புன்னைக்காயலிலேயே ஸ்தாபித்தார்.

## சென்னையில் முதல் அச்சகம்

சென்னைக்கு முதலில் அச்சகம் தோன்றியதே ஒரு பெரும் கதை. 1761-இல் ஸர் அயர்கூட் என்ற பிரிட்டிஷ் தளபதி புதுச்சேரியை பிரெஞ்சுக்காரர்களிடமிருந்து கைப்பற்றினார். அப்போது அங்கிருந்த அரசாங்க மாளிகையிலிருந்து கொள்ளைப் பொருளாக ஓர் அச்சு இயந்திரத்தையும் சில அச்சுக்களையும் கூட சென்னைக்குக் கொண்டு வந்தார். அவற்றை எப்படி உபயோகிப்பது என்று சென்னை அதிகாரிகளுக்குத் தெரியவில்லை. அப்போது தமிழில் நல்ல பாண்டித்தியமுள்ள பெப்ரீஷியஸ் வேப்பேரியில் வசித்து வந்தார். (அவர் பெயரில் ஒரு பள்ளி இன்றும் சென்னை புரசவாக்கத்தில் உள்ளது). அவரிடம் அந்த அச்சு இயந்திரத்தை சென்னை அதிகாரிகள் ஒப்படைத்தனர். எப்பொழுதெல்லாம் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு அச்சுவேலைசெய்ய வேண்டுமோ அப்பொழுதெல்லாம் செய்து தரவேண்டும் என்பது நிபந்தனை.

பெப்ரீஷியஸ் அந்த இயந்திரத்தில் தமிழ் ஆங்கில அகராதியை 1779இல் அச்சிட்டார். சென்னையில் முதல் தமிழ் அச்சுக்கள் எப்போது தயாரிக்கப்பட்டன வென்பது சரியாகத் தெரியவில்லை. அநேகமாக 19-ஆவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருக்கவேண்டும். பெப்ரிஷியஸிடம் ஒப்படைத்த அச்சு இயந்திரத்தைக் கொண்டு ஆரம்பித்த அச்சகம்தான் டயோஸிசன் அச்சகம் (Diocesan Press) இந்தியாவிலுள்ள மிகப் பழமையான அச்சகம் இது. இன்றும் சென்னை வேப்பேரியில் இருக்கிறது.

1835இல் சென்னையில் தமிழ் அச்சகங்கள் சுமார் 10 இருந்தன. பிராட்வேயில் அமெரிக்க மிஷன் ஓர் அச்சகத்தை நடத்திவந்தது. மிரான் வின்ஸ்லோ என்பவர் தயாரித்த தமிழ் - ஆங்கில அகராதியை அந்த அச்சகம் ஆச்சிட்டது.

## சுவையான அம்சங்கள்

1941இல் ''மதராஸ் லைப்ரெரி அஸோஸியேஷன்'' தமிழில் அச்சடித்த புத்தகங்கள் சம்பந்தமாக ஒரு கண்காட்சியைச் சென்னையில் நடத்தினர், அச்சுத்தொழில் தமிழில் ஆரம்பித்து 400 ஆண்டுகள் முடிவடைந்ததை யொட்டி அக் கண்காட்சி நடத்தப்பட்டது.

அக்கண்காட்சி சம்பந்தமான சில சுவாரஸ்யமான விஷயங்கள் சென்னைப் பல்கலைக் கழக நூலகத்தில் அப்போது சேவை செய்த கே. எம். ஸ்ரீனிவாசன் என்பவர் எழுதிய கட்டுரையில் விவரிக்கப்பட்டுள்ளன. அதிலிருந்து கிடைத்த சில அரிய விஷயங்களாவன.

இக் கண்காட்சியில் இடம் பெற்றதான; தமிழில் முதலில்

அச்சிட்ட புத்தகம் 1726இல் அச்சிடப் பட்டதாகும்.

1726 முதல் 1811 வரை வெளியான சுமார் 20 தமிழ்ப் புத்தகங்களும் காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

ஆதிகாலத்தில் அச்சான தமிழ் நூல்களின் முகப்புப் பக்கத்தில் லத்தீன், ஆங்கிலம் இவற்றில் பெயரும் பிற விவரங்களும் தரப்பட்டன. 1578இல் வெளியான முதல் தமிழ்ப் புத்தகத்தின் அட்டையில் காணப்படும் வார்த்தைகள்;

"O Flos sanctorum a doutrina Christae hu Copios confession-aris and outras liuroo"

அக்காலத்துப் புத்தகங்களிலெல்லாம் 'காமா' என்ற காற்புள்ளி கிடையாது. முற்றுப் புள்ளி கிடையாது. நீளமாக ஒரு கோடு முற்றுப் புள்ளிக்குப் பதிலாக இருக்கும். பாராக்கள் கிடையா.

ஓர் உதாரணம்:

தலைப்புப் பக்கத்தில் இரு மொழிகளில் உள்ள விஷயங்கள்:

### தமிழும் இங்கலேசுமாயிருக்கிற அகராதி

All Malabar and English dicti-onary where in the words and phrases of the Tamilian langu-age commonly called by Euro-peans the Malabar language are explained in English by the english missionaries of Madras printed at Vepery near Madras in the year *1799*

1800 ஆம் ஆண்டு வரை அச்சிடப்பட்டுவந்த தமிழ்ப் புத்தகங்களிலெல்லாம் தலைப்புப் பக்கத்தில் இம்மாதிரி இரு மொழிகளில் புத்தக விவரம் கொடுக்கப்பட்டிருந்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டு ஆரம்பத்தில் பிரசுரிக்கப் பட்ட குசலவ நாடகம் என்கிற புத்தகத்தின் தலைப்புப் பக்கத்திலுள்ள விவரம்.

ஸ்ரீராமஜெயம் இராம நாடகமென்று வழங்குகிறது குசலவ நாடகம் இதனுள் ஸ்ரீராமர் அரசிருத்தல் சீதை பிரித்தல் வால்மீகராசிரமத்தில் பிள்ளை பெறல் லவன் குசன் யுத்தம் அஸ்வமேதயாகம் குசலவனுக்கு திருக்கல்யாணமும் இளவரசு பட்டமும் அடங்கியிருக்கின்றன இஃது திருவண்ணாமலை வேங்கடாசல முதலியார் அவர்களால் பரிசோதித்த பிரதிக்கிணங்க கோகுலாபுரம் அருணாசல முதலியாரால் பார்வையிடப்பட்டு, சேலம் சுப்பருய பிள்ளை அவர்களால், கொண்ணூர் மாணிக்க முதலியார் கம்பெனியார் களது மனோன்மணி விலாச அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது. ஈஸ்வர வைகாசி ரிஜிஸ்தர் காப்பிரைட் ஐந்தாம் பதிப்பு காப்பி 1000

இவ்வளவு தகவல்கள் இருந்தும் புத்தகத்தின் ஆசிரியர் யார் என்பது குறிப்பிடப்படவில்லை!

*[64-ஆம் பக்கம் பார்க்க]*

# நீவிர் அறிவீரா?

**ஆசிரியர்களுக்குத் திருமணக் கடன் : த. நா. அரசு பரிசீலனை**

சென்னை கார்ப்பரேஷன் உள்பட ஸ்தலஸ்தாபனங்களின் கீழ் வேலை செய்யும் ஆசிரியர்களை, 55-வது வயது பூர்த்தியாவதற்கு முன்பு 3 மாத நோட்டீஸ் கொடுத்துவிட்டு, 55-வது 58-வது வயதுக்குமிடையில் "ரிடையர்" செய்யலாமென்று தமிழ் நாடு சர்க்கார் ஜூன் மாதத்தில் உத்திரவு பிறப்பித்தது.

மூன்கூட்டி சர்க்காரின் அங்கீகாரத்தைப் பெற்ற பிறகே இம்மாதிரி "நோட்டீஸ்" கொடுக்கலாமென்று சர்க்கார் இப்போது மற்றொரு உத்தரவு பிறப்பித்துள்ளது.

நாளைய தினம் கொண்டாடப்படவிருக்கும் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு. கல்வி மந்திரி நெடுஞ்செழியன் விடுத்துள்ள ஒரு செய்தியில் இந்தப் புதிய உத்திரவு பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

55-வது வயதுக்கும் 58—வது வயதுக்குமிடையில் ஆசிரியர்களை "ரிடையர்" செய்யும் அதிகாரத்தை சர்க்கார் மேற்கொண்டுள்ள போதிலும், தற்போது இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தும் உத்தேசம் சர்க்காருக்கு இல்லையென்றும் அவர் உறுதிகூறுகிறார். ஆனால் திறமையற்றவர்கள் என்று நிரூபிக்கப்பட்ட ஆசிரியர் விஷயத்திலும், மற்றும் ஆசிரியர் தொழில் நீடிக்கத் தகுதியற்றவர்களாக்கும் காரணங்களுக்காகவும் மட்டுமே, இந்த அதிகாரம் பயன்படுத்தப்படும் என்கிறார்.

இரண்டாவது சம்பளக் கமிஷன் சர்க்கார் கீழும், ஸ்தல ஸ்தாபனங்களின் கீழும் வேலை செய்யும் ஆசிரியர்களின் சம்பள விகிதங்களை மட்டுமன்றி, சர்க்கார் உதவிபெறும் தனியார் பள்ளி ஆசிரியர்களில் சம்பள விகிதம், கிராக்கிப்படி ஆகியவற்றில் சர்க்கார் ஆசிரியர்களுக்குக் கிடைக்கும் அனுகூலங்கள், ஸ்தல ஸ்தாபன பள்ளி ஆசிரியர்களுக்கும் தானாகவே அமலுக்கு வந்துவிடும் என்றும் திரு. நெடுஞ்செழியன் இதில் கூறுகிறார்.

ஸ்தல ஸ்தாபன பள்ளி ஆசிரியர்களுக்கும், திருமணத்திற்காக கடனுதவி அளிக்கும் திட்டம் சர்க்காரின் தீவிர பரிசீலனையிலிருந்து வருகிறது என்றும் மந்திரி கூறுகிறார்.

இந்தச் செய்தியில் கல்வி மந்திரி மேலும் கூறுவதாவது :—

சில விஷயங்களில் தனியார் பள்ளி ஆசிரியர்கள், சர்க்கார் ஆசிரியர்களையும் ஸ்தல ஸ்தாபன ஆசிரியர்களையும் விட நல்ல நிலைமையில் இருந்து வருகின்றனர்.

அவர்கள் "ரிடையராகும்" வயது 60 ஆக நீடித்து வருகிறது. சர்க்கார் ஊழியர் நடத்தை விதி

களின் கீழ் அவர்கள் வருஷத்துக்கு 15 நாள் ரஜா எடுத்துக்கொள்ளலாம். இதை 45 நாள் வரை சேர்த்து வைத்துக் கொள்ளலாம்.

எல்லா வகை ஆசிரியர்களின் ஊழிய வசதிகள் பற்றி பரிசீலிக்கவும் சர்க்கார் ஒரு கமிட்டியையும் நியமித்திருக்கிறது. அந்தக் கமிட்டியின் அறிக்கைகளை சர்க்கார் கவனமாகப் பரிசீலித்துப் பார்க்கும்.

இதர ராஜ்யங்களில் இல்லாத அனுகூலங்கள் பல, தமிழ் நாட்டிலுள்ள ஆசிரியர்களுக்கு இருந்து வருகிறது. சர்க்காரின் நிதி வசதிக்கு உட்பட்டு ஆசிரியர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த சர்க்கார் தம்மாலியன்றதையெல்லாம் தொடர்ந்து செய்து வரும்.

## ஆசிரியர்கள் கடமை

### சென்னைத் துணைவேந்தர் வற்புறுத்தல்

டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் 81-வது பிறந்த ஆசிரியர் தினத்தையொட்டி நடந்த ஆசிரியர் தின விழாவுக்கு இன்று சென்னை சர்வ கலாசாலை துணைவேந்தர் என். டி. சுந்தரவடிவேலு தலைமை வகித்துப் பேசுகையில், எதிர்காலத்தில் நாட்டின் தலைவர்களாகவும், அறிஞர்களாகவும், ராஜதந்திரிகளாகவும் மாணவர்கள் விளங்கக் கூடியவர்கள். ஆகவே, மாணவர்களது பண்பை ஆசிரியர்கள் பக்குவமாக வளர்க்க வேண்டும் என்று சொன்னார்.

இந்த விழா ஹிந்து தியலாஜிகல் பள்ளி ஆசிரியர் சங்கம் ஆதரவில் நடந்தது. சமூகம் உன்னத லட்சியத்தைக் கொண்டிருக்குமானாலும் பெற்றோர்கள் இன்னும் அதிக பொறுப்பை ஏற்றிருப்பார்களேயானாலும் இப்போதுள்ளதை விட நாடு இன்னும் அதிகம் அபிவிருத்தியடைந்திருக்கும் என்று அவர் மேலும் சொன்னார்.

அவர் மேலும் பேசுகையில், முன்பெல்லாம் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கு மிடையே நல்லெண்ணம் நல்ல முறையில்இருந்து வந்தது. ஆகவே ஆசிரியர்களுக்கு அதிக மதிப்பும் மரியாதையும் இருந்து வந்தது என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஒருவன் உண்மையையே பேசுவானேயானால் நேர்மையுடன் இருப்பானேயானால் அவன் உயர் பதவியை அடைவது உறுதி. டாக்டர் ராதாகிருஷ்ணன் இதற்கு ஓர் உதாரணமாகும் என்றார்.

கல்வி டைரக்டர் எஸ். வி. சிட்டிபாபு ஆசிரியர் தினத்தின் முக்கியத்துவத்தைப் பற்றிப் பேசினார்.

## யூ. பி. எஸ். ஸி. பரீட்சை

### முதலில் இருபாடங்களைப் பிராந்திய மொழியில் எழுத அனுமதி

யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷனை இன்று ராஜ்ய சபையில் காங்கிரஸ் மெம்பர்களும், எதிர்க் கட்சி மெம்பர்களும் ஒருங்கே குறை கூறினர். 1965-66, 1966-67, 1967-68 வருடங்களுக்கான பப்

ளிக் சர்வீஸ் கமிஷனின் அறிக்கைகளைப் பற்றி ராஜ்ய சபையில் விவாதிக்கப்பட்டது. அப்போது தான் குறை கூறினர்.

யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் திறமையாக வேலைசெய்வதற்காக மெம்பர்கள் தெரிவித்தஎல்லா யோசனைகளையும் பரிசிலனை செய்வதாக உள்துறை துணை மந்திரி திரு. கே. எஸ். ராமசாமி விவாதத்திற்குப் பதில் கூறுகையில் தெரிவித்தார்.

யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷனின் அறிக்கைகளை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்ளும் பிரேரணையை ஆரம்பத்தில் உள்துறை துணை மந்திரி வித்யாசரண் சுக்லாகொண்டு வந்தார். அப்போது அவர் கூறினார் :—1969 முதல் வியாசம், பொது அறிவு இந்த இரு பாடங்களைப் பொறுத்தவரை அபேட்சகர்கள் தமது பிராந்திய மொழிகளில் பரீட்சை எழுத அனுமதிக்கப்படுவார்கள்.

இந்தத் திட்டம் வெற்றிபெற்றால் 14 மொழிகளிலும் யூனியன் பப்ளிக் சர்வீஸ் பரீக்ஷைகளை எழுதும் திட்டத்தைத் துரிதமாகஅமல் நடத்துவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்.

## பாட சர்டிபிகேட் வழங்கும் திட்டம்

*நகரத் தலைமை ஆசிரியர் மாநாடு வரவேற்கிறது*

கல்லூரியில்சேரத்தகுதியுள்ளவர்களாக அறிவிக்கப்படாத மாணவர்களுக்கு பாடசர்டிபிகேட்டுகளை வழங்கலாம் என்று கிறிஸ்துவ உயர்நிலைப் பள்ளி முதல்வர் திரு. டேவிட் சாமுவேல் தெரிவித்த யோசனையை நகரத் தலைமை ஆசிரியர்கள் மாநாடு இன்று வரவேற்கிறது. இத்தகைய சர்டிபிகேட்களைக் கொண்டு மாணவர்கள் நேரடியாக வேலை தேட முடியும்.

ஒரு மாணவர் இதர பாடங்களில் பாஸ் மார்க்குகளை வாங்கி, ஒரு பாடத்தில் மட்டும் தேர்வு பெறுவிட்டால், கல்லூரியில் சேருவதற்கான தகுதி சர்டிபிகேட் அம் மாணவருக்குக் கிடைப்பதில்லை. இத்தகைய மாணவர்களுக்குப் பாட சர்டிபிகேட்டுகளை வழங்கலாம். எந்தெந்தப் பாடங்களை அம் மாணவர் படித்து பரீட்சை எழுதினார் என்பதை சர்டிபிகேட்டுகளில் குறிப்பிடலாம். மாணவர்கள் நேரடியாக வேலை தேடுவதற்கு இது உதவும். கல்லூரிகளிலும் மாணவர் நெரிசல் குறையும். ஆங்கிலோ இந்திய பள்ளிகள் இத்தகைய சர்டிபிகேட் திட்டத்தை அமலாக்குவது பற்றி சர்க்காரிடம் அனுமதி கோர உத்தேசித்துள்ளன என்று திரு. டேவிட் சாமுவேல் குறிப்பிட்டார்.

பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் இக்கருத்தை ஆதரித்தனர்.

கணக்கு, விஞ்ஞான தரத்தை உயர்த்துவது பற்றியும், ஆங்கில போதனை குறித்தும் மாநாடு குறிப்பிட்டது.

பாட புத்தகங்கள் அனைத்தை

யும் சர்க்கார் வெளியிடும் திட்டத்தை நிறுத்தி வைக்கலாம் என்றும், பாட புத்தகங்களை வெளியிடலாம் என்றும் மாநாடு கூறியது.

ஆங்கிலோ இந்திய பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களும் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

பல்வேறு கல்வி பிரச்னைகளைக் குறித்து தங்களது கருத்தைத்தெரிவிக்கும் பொருட்டு கல்வி மந்திரியைப் பேட்டிகாண தூதுகோஷ்டியொன்றை அனுப்புவதென மாநாடு தீர்மானித்தது.

முக்கிய முடிவுகள் எடுக்கப்படு முன்னர் கல்வி பிரச்னைகள் அனைத்தையும் குறித்து ஆசிரியர்களைக் கலந்தாலோசிக்கவேண்டும் என்று மாநாடு கூறியது.

## குறைந்த பட்ச பென்ஷன் ரூ. 35 என நிர்ணயிக்கவும்

*ஓய்வு பெற்ற ஆசிரியர் மகாநாடு கோரிக்கை*

தமிழ் நாடு ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் இரண்டாவது மகாநாடு சனிக்கிழமையன்று நடந்தது. கேரளத்தில்உள்ளதுபோல ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு பென்ஷன் விகிதத்தை ரூ. 35 ஆக நிர்ணயிக்க வேண்டுமென மகாநாடு கேட்டுக் கொண்டுள்ளது.

ஓய்வு பெற்ற அதிகாரிகள் சங்கத் தலைவர் டி. புருஷோத்தம் இம் மகாநாட்டுக்குத் தலைமை வகித்துப் பேசினார்.

நகரசபைத் தலைவர் கே. டி. எஸ். மணி மகாநாட்டைத்துவக்கி வைத்துப் பேசுகையில் ஆசிரியர்கள் கோரிக்கை நியாயமானது என்று சொன்னார்.

கிருஷ்ணன் (எம் எல்.ஏ.) பேசுகையில், மழை பெய்து விட்டதால் வறட்சிநிவாரணத்துக்கான நிதியை ஓய்வு பெற்ற ஆசிரியர்களது நலன்களுக்குப் பயன்படுத்தலாம் என்று யோசனை தெரிவித்தார்.

வி. திருஞான சம்பந்த முதலியார் வரவேற்றார். காரியதரிசி எஸ். சுந்தரவரதாச்சாரி அறிக்கையைப்படித்தார். மாரியப்ப நாயக்கர் நன்றி கூறினர்.

## 'தகுதியின் பேரிலேயே மறு வேலை தரப்படும்'

*அரசாங்கம் உத்தரவு*

விஞ்ஞானம், தொழில் நுணுக்கம், மருத்துவம் போன்றவற்றில் தகுதி பெற்ற அரசு ஊழியர்கள் 58 வயது வரை உத்தியோகத்தில் நீடிக்கலாமென்று, 1962-ல் நெருக்கடி நிலை பிரகடனத்தின் போது அரசாங்கம் போட்டிருந்த உத்தரவை இப்பொழுது நீக்கி இருக்கிறது.

நெருக்கடி நிலைப் பிரகடனம் நீக்கப்பட்டுவிட்டதாலும், தொழில் நுணுக்க ஊழியரின் தேவை சுலபமாகி விட்டதாலும், இனிமேல் தொழில் நுணுக்க ஊழியர்க்கும் மறு வேலை அளிப்பது முழுக்கவும் தகுதிகளின் பேரிலேயே பரிசீலிக்கப்படுமென்று அரசாங்கம் உத்தரவிட்டிருகிறது.

தற்போது அமலில் இருக்கும் அரசாங்க ஊழியரின் ஓய்வு பெறும் வயது 55 ஆகும்.

## செகண்டரி கிரேட் ஆசிரியர்கள்

ஹையர் கிரேடு ஆசிரியர்களாகப் பணியாற்றும் 11 ஆயிரம் ஆசிரியர்கள் அவர்களுடைய தகுதிக்கேற்ப ஊதிய மளிக்கப்படுகிறார்கள் என்று தமிழ் நாடு கல்வி இலாகாவைச் சேர்ந்த ஒருவர் கூறினர்.

மூன்றும் வகுப்பிலிருந்து, ஐந்தாம் வகுப்பு வரையில் ஆங்கில போதனையில் தரம் உயரவேண்டும் என்ற நோக்குடன், மூன்றும் வகுப்பிலிருந்து செகண்டரி கிரேட் ஆசிரியர்களை நியமிப்பதை அரசினர் அனுமதித்திருக்கிறார்கள். மூன்று செக்ஷன்களுக்கு ஒருவர் வீதம் நியமிக்கலாம்.

1967-ல் 5000 ஆசிரியர்களும், 1968, 1969 ஆண்டுகளில் ஒவ்வொன்றிலும் 3000 ஆசிரியர்களும் பயனடைந்திருக்கிறார்கள். சீனியர் ஆசிரியர்களுக்கு முதலில் வாய்ப்பு அளிக்கப்படுகிறது. ஆசிரியர்களுக்கு அவர்களது தரத்தை யொட்டி ஊதியம் அளிக்க வேண்டும் என்பது அரசினரின் கொள்கை. ஆனால் தம்மை முற்றிலும் கட்டுப்படுத்திக் கொள்வது அரசினருக்கு சாத்தியமில்லை.

ஆசிரியர் பணிகளுக்கு நிறையபேர் வருகிறார்கள், பல செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் ஹையர் கிரேட் பதவிகளை மேற்கொள்ள முன் வருகிறார்கள்.

—"தினமணி"

---

[59-ஆம் பக்கத் தொடர்ச்சி]

இன்று அழகான புத்தகங்கள் தமிழில் வெளிவருகின்றன. தற்கால முறையில் புத்தக வெளியீடுகளுக்குப் பிள்ளையார் சுழி போட்டவர் விவேக சிந்தாமணி சஞ்சிகையின் ஆசிரியர் ஸி. வி. சுவாமிநாத அய்யர். நீதிபதி சர். தி. முத்துசாமி அய்யர், பூண்டி அரங்கநாத முதலியார், மணி அய்யர் இவர்களுடைய ஆதரவில் 'அறிவைப் பரவச் செய்யும் ஸ்தாபனம் ("Diffusion of Knowledge Agency") ஒன்றை ஏற்படுத்தி. அதன் ஆதரவில் சிறந்த முறையில், குறைந்த விலையில் புத்தகங்களை வெளியிட வழிவகுத்தார், சுவாமிநாத அய்யர். அம்மாதிரி வந்த புத்தகங்கள் "சத்திய தேவதைக் கதை" "புத்தரது திவ்விய சரிதம்" சிவாஜி மகாராஜா சரிதம்" "கமலாம்பாள் சரித்திரம்" (பி. ஆர். ராஜமய்யர் எழுதியது) ஆகியவை. பாரா, முற்றுப்புள்ளி, தூய தமிழ் இவற்றுடன் வெளியான முதல் புத்தகங்கள் இவையே எனலாம்.

—"தினமணி"

---

Edited, Printed and Published by P. VEERARAGHAVAN,
at Venkatesan Press, 2-65, Broadway, Madras-1.

6. திருநாவுக்கரசர் — தாமரைக் கண்ணன் — 1·50
(திருமுருக கிருபானந்தவாரியர் அவர்கள் அருளிய அருமையான அணிந்துரையுடன் கூடியது. கோதில் மொழிக் கொற்றவனார் வாழ்க்கை வரலாறு முழுவதும் கூறுவது.)

7. திருஞான சம்பந்தர்-புலவர் சொ. முருகேசனார் — 1·50
(தோடுடைய செவியன் விடை ஏறி வர, உமையாளின் ஞானப் பால் குடித்த சீர்காழிப் பெருமானின் அழகிய வரலாறு.)

8. சுந்தரமூர்த்தி சுவாமிகள் — த. சே. உமாபதி — 2·00
(பரவையாரையும் சங்கிலியாரையும் மணந்து ஏழிசையாய் இசைப் பயனாய் விளங்கும் ஆரூர்த் தப்பிரானுக்குத் தோழராய் வாழ்ந்தவர் வரலாறு.)

9. வீரபாண்டிய கட்டபொம்மன் — வை. சுப்பிரமணியம் — 1·50
(வானம் பொழியுது...பூமி விளையுது...உனக்கேனடா கிஸ்தி? என்று வீர கர்ச்சனை புரிந்து, தூக்குச் கயிற்றைப் புன்னகையுடன் முத்தமிட்ட மாவீரன்.)

10. ராஜா தேசிங்கு — வை. சுப்பிரமணியம் — 1·50
(தந்தையின் புகழ் பாடிய தனயனாய், மங்கையின் மனத்திற்குகந்த மணாளனாய், நண்பனின் நட்பைப் பேணிய நல்லவனாய் வாழ்ந்த வீரப் புதல்வன்.)

11. பச்சையப்ப முதலியார் — எஸ். எஸ். அருணகிரிநாதர் — 1·50
(துவிபாஷியாய் வாணிகம் நடத்திப் பெரும் பொருள் ஈட்டி, நாடு முழுவதும் கல்வி நிறுவனங்களை ஏற்படுத்தி அறியாமை இருள் அகற்றிய அண்ணல்.)

12. சர். தி. முத்துசாமி ஐயர்
எஸ். எஸ். அருணகிரிநாதர் 1·00

(இளமையில் வறுமைப் பிடியில் சிக்கினலும் தம் அயரா உழைப்பாலும் நுண்ணறிவுத் திறனலும் வாழ்க்கையில் வெற்றி பெற்ற மேதையின் சித்திரம்.)

13. எவரெஸ்டு ஏற்றம் த. சே. உமாபதி 2·25

(உலகின் உச்சியென விளங்கும் பனிபடு நெடு வரையின் கொடு முடியில் ஏறுவதற்கு எடுத்துக் கொண்ட முயற்சிகளும், அதன் விளைவாகக் கண்ட வெற்றிகளும் விவரிக்கப் பெற்ற ஏடு.)

14. ஜெகதீஸ் சந்திரபோஸ்
நெ. சி. தெய்வசிகாமணி 1 00

(விஞ்ஞான உலகில் தமக்கென நிலையான இடம் பிடித்துக் கொண்டதுடன், அகில உலகமும் தமது புகழ்க் கொடியை ஏற்றிய விஞ்ஞானியின் கதை.)

15. நல்ல நல்ல கதைகள்
எஸ். எஸ். அருணகிரிநாதர் 2·75

(மாணுக்கரின் மாண்புமிக்க சிந்தனை வளங்களை விரிவு படுத்திச் சிறந்த கருத்து விதைகளை விதைத்திடும் நூல்.)

16. சிறுவர் கதைகள் எஸ். எஸ். அருணகிரிநாதர் 1·25

(நம் நாட்டு எதிர்கால இளஞ்சிறுர்கள் அறிஞர்களாகவும் கலைஞர்களாகவும் சிறந்து விளங்க நல்வழி காட்டும் அறிவுக் கதைகள்.)

Telephone No. 24544. Post Box No. 1818.

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

("ஆரம்பக் கல்வி" நிலையம்)

94/95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1.

30 DEC 1975 MADRAS

Venkatesan Press, Madras-1